गुरूर्गुरूतमो धाम
NCTE

கல்வி அமைச்சகம்
MINISTRY OF EDUCATION

सत्यमेव जयते

NATIONAL MISSION FOR MENTORING

# வழிப்படுத்துதல் தேசியப் பணித்திட்டம்

## செயல்வழிமுறை நூல்

**Tamil/தமிழ்**

**தேசிய ஆசிரியர் கல்வி நிறுவனம்**
*ஜி-7, செக்டார்-10, துவாரகா, புது தில்லி – 110075*

NMM

NATIONAL MISSION FOR MENTORING

***தேசிய வழிப்படுத்துதல் பணியின் இலச்சினையானது (logo), வழிகாட்டுநரும் (Mentor), வழிப்படுநரும் (Mentee) ஆகிய இருவரும் கூட்டாக இணைந்து செயல்படும் ஒரு ஏற்பாட்டைக் குறிக்கிறது. இதில் ஒருவருக்கொருவர் திறனுருவாக்கத்துக்காக தொழில் முறைத்திறனை மேம்படுத்திட கற்றல், கற்றவற்றை ஆழ்ந்து சிந்தித்தல், பகிர்தல் ஆகிய உணர்வுகள் ஆதரித்துப் பேணிவளர்க்கப்படுகின்றன. இதிலுள்ள செம்மஞ்சள் வண்ணம் நேரியல் உறுதி, மகிழ்நோக்கு, இயங்காற்றல், ஆர்வம், கனிவு ஆகியவற்றை வெளிப்படுத்துகிறது. கருநீல வண்ணம் ஞானம், நம்பகத்தன்மை, நம்பிக்கை, கடமைக் கூறு ஆகியவற்றைக் குறிக்கிறது. இந்தப் பண்புகள் வழிப்படுத்துதலுக்கான அடிப்படைக் கூறுகளாகும்.***

**Dharmendra Pradhan**
Hon'ble Education Minister;
Skill Development and
Entrepreneurship
Government of India
Shastri Bhawan
New Delhi-110001

सत्यमेव जयते

***தர்மேந்திர பிரதான்***
*மாண்புமிகு அமைச்சர்,*
*கல்வி; திறன்மேம்பாடும்*
*தொழில்முனைவும்,*
*இந்திய அரசு,*
*சாஸ்திரி பவன்,*
*புது தில்லி – **110001***



**வாழ்த்துரை**

*தேசியக் கல்விக் கொள்கை (NEP) 2020 கல்விமுறையில் மாற்றத்தினை எதிர்நோக்குகிறது. அந்த மாற்றம் வாயிலாக, ஒவ்வொரு மாணவருக்கும் தனித்துவமான, அனைத்தையும் உள்ளடக்குகிற சமச்சீரான கற்றல் சூழலை உருவாக்க ஆசிரியர்களுக்கு அதிகாரம் வழங்குகிறது. இவ்வாறாக, இந்தத் தொலைநோக்கை அடைவதற்கான முக்கியமான கூறு: அதிகாரம்பெற்ற ஆசிரியர்கள்.*

*நமது தேசத்தின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் ஆசிரியர்கள் வகிக்கும் இன்றியமையாப் பங்கினை இந்தக் கொள்கை அடையாளப்படுத்துகிறது. இந்த நோக்கத்துடன் இணைந்து, இந்தியாவில் உள்ள பள்ளி ஆசிரியர்கள் அனைவருக்கும் வழிப்படுத்துதல் பணிக்கான ஆதரவு வழங்குவதை தேசிய வழிப்படுத்துதல் பணித் திட்டம் (NMM) குறிக்கோளாகக் கொண்டுள்ளது. மேலும், இது, ஆசிரியர்கள் கற்பித்தல் நடைமுறைகளை மேம்படுத்துவதற்கும் அவர்களின் ஒட்டுமொத்த தொழில்முறை வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் துணை நின்று அதிகாரமளிக்கும் வழிகாட்டுநர்களின் கூட்டமைப்பை உருவாக்கும் குறிக்கோளும் கொண்டது. இந்தப் பணி ஆதரவளிப்பது பற்றியது மட்டுமல்லாமல்; ஆசிரியர்களின் உள்ளார்ந்த திறன்களை வெளிக் கொணர்வது பற்றியதும் ஆகும். நெறிப்படுத்தப்பட்ட, தொடர் வழிப்படுத்துதலின் வழியாக, ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் பல்வேறு கற்றல் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், திறன்களை மேம்படுத்தவும் அவர்களின் வாழ்வில் ஆக்கப்பூர்வமான தாக்கத்தை உருவாக்கவும் முடியும்.*

*ஆசிரியர் கல்விக்கான தேசிய நிறுவனம் (NCTE), NMM பற்றிய செயல்வழிமுறை நூல் ஒன்றினை உருவாக்கி உள்ளது. இந்த விரிவான ஆவணம் ஒரு கையேடு மட்டும் கிடையாது. இது ஆசிரியர்களுக்கும், வழிகாட்டுநர்களுக்கும் தெளிவான குறிக்கோள்கள், பயனுள்ள உத்திகள், நடைமுறை வழிகாட்டுதல்கள் முதலான வற்றைக் கோடிட்டுக் காட்டி உயர் சிறப்படைய வைப்பதற்கான ஒரு வரைபடமாகும். மாற்றமடைந்துவரும் எதிர்கால உலகில் வாழ்ந்திட மட்டுமல்லாமல் வளர்ச்சியுற்றுச் செழித்தோங்கவும் தயாராக இருக்கும் தலைமுறையை உருவாக்கிடவும் 21ஆம் நூற்றாண்டின் திறன்களை நம் ஆசிரியர்கள் தங்களுடைய மாணவர்களுக்கு ஊட்டுவதற்கும், ஆயத்தப்படுத்திக்கொள்ளவும் தேவையான நன்கு கட்டமைக்கப்பட்ட ஒரு விதிமுறைகள் தொகுப்பை இது வழங்குகிறது.*

*இந்த முயற்சியை முன்னெடுத்துச் செல்லும் NCTE-க்கு எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆவணம் ஆசிரியர்களுக்கும், வழிகாட்டுநர்களுக்கும் ஒரு மதிப்புமிக்க ஆதாரமாக விளங்கும் என்றும் கற்றலிலும், கற்பித்தலிலும் சிறந்து விளங்க அவர்களை வழிநடத்தும் என்றும் நான் நம்புகிறேன்.*

***(தர்மேந்திர பிரதான்)***

## வாழ்த்துரை



**அன்னபூர்ணா தேவி**
மாண்புமிகு கல்வி
இணையமைச்சர், கல்வி
அமைச்சகம்
இந்திய அரசு.

NMM குறித்த செயல்வழிமுறை விளக்க நூலினை, ஆசிரியர் கல்விக்கான தேசிய நிறுவனம் (NCTE) ஆழ்ந்த கவனம் செலுத்தி நேர்த்தியாக வடிவமைத்துள்ளது. இந்நூல் புதுமையான திருப்புமுனை நிகழ்வுகளைக் குறிக்கிறது. பல்வேறு தொழில் சார்ந்த வல்லுநர்களை, வழிகாட்டுநர்களாகப் பணியாற்றும் பள்ளி ஆசிரியர்களின் வழிகாட்டுநர்களாக அங்கீகரிக்கிறது. இதன்மூலம் கல்விமுறை மாற்றத்திற்கான அணுகுமுறையை தேசிய வழிப்படுத்துதல் பணித்திட்டம் (NMM) அறிமுகப்படுத்துகிறது. இந்த வழிகாட்டுநர், வழிப்படுநர் ஆகியோரிடையே இயங்காற்றல் (செயல்துடிப்பு) மிக்க தொடர்புகளுக்காக தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஒவ்வொருவரின் தொழில்முறை வளர்ச்சியை வடிவமைப்பதில் ஆசிரியர்கள் வகிக்கும் விலைமதிக்க முடியாத பங்கினையும் இந்தப் பணித்திட்டம் வலியுறுத்துகிறது. இந்த ஆவணம், ஆசிரியரை மையமாகக் கொண்ட புதிய வழியிலான திட்டம் குறித்த விரிவான புரிதலை வழங்குகிறது; NCTE குழுவின் முழுமையான ஈடுபாட்டுணர்வை வெளிப்படுத்துகிறது.

NMM முயற்சிகளை நான் பாராட்டுகிறேன். நமது நாட்டில் கல்வியாளர்களுக்கு அதிகாரம் அளித்து மேம்படுத்தி, அறியாமை அகற்றும் எதிர்கால கல்வி முறையைப் பேணி வளர்க்கும் என்று எதிர்நோக்குகிறேன்.

வெற்றி பெற வாழ்த்துகிறேன்.

---

## வாழ்த்துரை




**சஞ்சய் குமார் IAS**
செயலாளர்,
பள்ளிக்கல்வி &
எழுத்தறிவுத்துறை,
கல்வி அமைச்சகம்,
இந்திய அரசு.

தேசியக் கல்விக் கொள்கை (NEP), 2020 கற்றல் - கற்பித்தலில் நெகிழ்வுத் தன்மை, படைப்பாற்றல், புதுமைகள் முதலானவற்றை ஊக்குவிப்பதன் மூலம் தரமான கல்வியை வலியுறுத்துகிறது. ஆசிரியர்களுக்கான தேசிய வழிப்படுத்துததல் (NMM) பணியானது, தொழில் முறையினரும் வல்லுநர்களும் வழிகாட்டுநர்களாக இருந்து அவர்களின் அறிவு, திறன்கள், தனித்துறை சிறப்பு அறிவுத்திறம் ஆகியவற்றை ஆசிரியர்களுடன் பகிர்ந்து கொள்ளுவதற்கான தளத்தை இது வழங்கும். வழிப்படுத்தப்படும் ஆசிரியர்கள் திறமையானவர்களாக உருவாவதற்கு இந்தப் பயணம் உதவும். வழிப்படுத்தல் என்ற கருத்தாக்கம் தொடங்கி வழிப்படுத்துதல் திட்டத்தைச் செயல்படுத்துவது வரையிலான செயல்பாடுகளை முழுமையாகப் புரிந்துக் கொள்ள NMM இன் செயல்வழிமுறை நூலானது வகை செய்கிறது.

NMM செயல்வழிமுறை நூலை உருவாக்கிடும் எண்ணங்கொண்டு அதைச் செய்து முன்னெடுத்து வந்த இந்தக்கூட்டுப் பயிற்சிக்காக நான் NCTEயைப் பாராட்டுகிறேன்.

நல்வாழ்த்துக்கள்.

## வாழ்த்துரை



**பேரா. யோகேஷ் சிங்**
*தலைவர்,*
*தேசிய ஆசிரியர் கல்வி*
*நிறுவனம், புதுதில்லி.*

*கல்வியின் நோக்கங்களை நிறைவேற்றுவதில் திறமையான ஆசிரியர்களின் மிக முக்கியமான பங்கினை தேசியக் கல்விக் கொள்கை NEP 2020 வலியுறுத்துகிறது. உறவுகளுக்கு இருக்கும் ஆற்றலை அங்கீகரிக்கிற வழிப்படுத்துதல் பணி 21 ஆம் நூற்றாண்டின் தேவைகளை நிறைவு செய்ய கல்வியாளர்களுக்கும், தலைவர்களுக்கும் துணைநிற்கிறது. கட்டமைக்கப்பட்ட வழிகாட்டல் தொடர்புகள் மூலம் நிறுவன ஆதரவை வழங்க வழிப்படுத்துதலுக்கான தேசியப் பணித்திட்டம் (NMM) உறுதி பூண்டுள்ளது. NMM பற்றிய செயல்வழிமுறை நூல், எதிர்காலத்தை வடிவமைக்க ஆசிரியர்களுக்கு அதிகாரம் அளிக்கிறது, திறனாய்வுச் சிந்தனையையும், தகவமைத்துக் கொள்ளும் திறனையும் வளர்க்கிறது. ஆசிரியர்கள் அனைவரும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, இப்பணியில் தீவிரமாகப் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*இந்த ஆவணத்தை உருவாக்குவதில் முனைப்புடன் பணியாற்றிய NCTE குழுவினருக்கு எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். நமது பள்ளிகளிலும் பரந்த ஆசிரியர் சமூகத்திலும் வழிப்படுத்தித் துணைநிற்கும் பண்பாட்டினைக் கூட்டாக உருவாக்குவோம்.*

## வாழ்த்துரை



**கேசங் ஒய். ஷெர்பா IRS**
*செயல் உறுப்பினர்,*
*தேசிய ஆசிரியர் கல்வி*
*நிறுவனம், புதுதில்லி.*

*தேசியக் கல்விக் கொள்கை (NEP) 2020 இன் அடிக்கல்லாக ஆசிரியர்களை அங்கீகரித்து, NCTE ஆனது தேசிய வழிப்படுத்துதல் பணித்திட்டத்தை (NMM) அறிமுகப்படுத்துகிறது. ஆசிரியர்களுக்கான ஆதரவில் இது கண்ணோட்ட மாற்றமாகும். தொழில்நுட்ப உதவியுடன், 'வழிகாட்டுநர்-வழிப்படுநர்' ஆகியோரிடையேயான தடையற்ற தொடர்புகளை NMM உருவாக்கி வளர்க்கிறது. இதற்கு எல்லைகள் தடை இல்லை. இந்த டிஜிட்டல் தொழில்நுட்பப் பாலம் தனிப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப நெருக்கமான, தொடர்ச்சியான வழிப்படுத்துதலை வழங்குகிறது. அனுபவம் வாய்ந்த தொழில் வல்லுநர்கள் வழிகாட்டுநர்களாக அமைந்து மெய்நிகர் (வெர்ச்சுவல்) ஆலோசனைகள், கூட்டுத் தளங்கள் ஆகியவை மூலம் வழிப்படுத்துகிறார்கள். NMM இன் செயல்வழிமுறை நூல், இத்திட்டம் பற்றிய விரிவான புரிதல்களை வழங்குகிறது.*

*ஆசிரியர்களுக்கு அதிகாரமளிப்பதுடன் இந்தியக் கல்விக்கு ஒளிமயமான எதிர்காலத்தை வடிவமைக்கிறதுமாக NMMஐ உருவாக்கியுள்ள மூத்தோர்கள், அர்பணிப்பு உணர்வோடு பணியாற்றும் NCTE குழுவினர், பங்குள்ளோர் அனைவருக்கும் எனது நன்றிகள்.*

# பொருளடக்க அட்டவணை


**வாழ்த்துரை** **I-V**

**பொருளடக்க அட்டவணை** **VII**

**படங்களின் பட்டியல்** **X**

**அட்டவணைகளின் பட்டியல்** **X**

**செயல்நிறைவேற்றச் சுருக்கம்** **XI**

**இயல் I: இந்தியாவில் கல்வி**

1.1 இந்தியாவில் கல்வி: தற்போதைய நிலை 2

1.2 ஆசிரியர்களின் பங்கு 3

1.3 சிக்கல்கலான, வளர்ந்து வரும் சவால்கள் 4

1.4 தேவையும், சூழலும் 4

1.5 தேசியக் கல்விக் கொள்கை (2020) – வழிப்படுத்துதலுக்கான தொலைநோக்கு 4

1.5.1 மாணவர்களுக்கு 5

1.5.2 ஆசிரியர்களுக்கு 5

1.5.3 பள்ளித் தலைவர்களுக்கு 5

1.5.4 கல்வித் தலைவர்களுக்கும் நிறுவனங்களுக்கும் 5

**இயல் II: வழிப்படுத்துதல் – ஓர் அறிமுகம்**

2.1 வழிப்படுத்துதல் கருத்துரு 8

2.2 வழிப்படுத்துதல் கோட்பாடுகள் 9

2.3 வழிப்படுத்துதலுடன் தொடர்புடைய பொதுவான வெற்றுப் புனைவுகள் 10

**இயல் III: தேசிய வழிப்படுத்து பணித்திட்ட அறிமுகம்**

3.1 தேசிய வழிப்படுத்துதல் பணித்திட்டத்துக்கான தேவை 12

3.2 பணித்திட்டத்தின் நோக்கம் எவ்வாறு எய்தப்பெறும்? 12

3.3 இந்தப் பணித்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் விளைபயன்கள் என்ன? 15

**இயல் IV: வழிப்படுத்துதலுக்கான தீர்வுகள்**

4.1 வழிகாட்டுநர் தெரிவு 18

4.1.1 வழிகாட்டுநர் தெரிவு செயல்முறை 18

4.2 வழிகாட்டுநர்களின் பண்புகள் 18

4.3 வழிப்படுநரின் பண்புக்கூறுகள் 21

4.4 வழிகாட்டுநர் மேம்பாடு 22

4.4.1 வழிகாட்டுநர் பயிற்சித் திட்டம் 22

4.4.1.1 வழிப்படுத்துதலின் அடிப்படைகள் (முக்கியமான மையத் திறன்கள்) 22

4.4.1.2 வழிப்படுத்துதல் - வகைகள் 22

4.4.2 வழிகாட்டுநர்களுக்கான தொடர் தொழில்முறை வளர்ச்சி 25

4.5 வழிப்படுத்துதலுக்கான பரப்புகள் 26

4.6 வழிப்படுத்துதல் தொடர்பு 29

**இயல் V: வழிப்படுத்துதல் செயல்முறைத் திட்டத்தின் கூறுகள்**

5.1 செயல்முறைத் திட்ட வடிவமைப்பும் திட்டமிடலும் 32

*5.1.1* வழிகாட்டுநர்களின் வளர்ச்சிப் படிநிலை 32

5.2 செயல்முறைத் திட்ட மேலாண்மை 33

5.3 செயல்முறைத் திட்டத்தின் செயல்பாடுகள் 33

5.3.1 பணிப்பொறுப்புகளும் கடமைக் கூறுகளும் 32

5.3.2 வழிப்படுத்துதல் செயல்முறைத் திட்டத்தின் பல்வேறு கட்ட செயல்பாடுகளுக்கான பரிந்துரைகள் 34

5.4 செயல்முறைத் திட்ட மதிப்பீடு 36

5.5 நிறுவனமயமாக்கல் 38

5.6 ஊக்குவித்தல் 38

5.7 வழிப்படுத்துதல் திட்டத்துக்கு சவால்கள் 39

5.7.1 பொருந்தாத எதிர்பார்ப்புகள் 39

5.7.2 வழிப்படுநர்கள் விலகல் 39

5.7.3 வழிகாட்டுநர்களிடம் ஊக்கமின்மை 39

5.7.4 கூடுதலான அல்லது போதிய கட்டமைப்பின்மை 40

5.7.5 புறக்கணிக்கப்பட்ட சோதனை முறைகள் 40

5.7.6. வழிப்படுத்துதல் குறித்த தவறான கருத்துகள் 40
5.7.7 அணுக இயலாத வழிப்படுத்துதல் 40
5.8 குறை தீர்க்கும் செயல்முறைமை 40

**இயல் VI: தேசிய வழிப்படுத்துதல் உள்கட்டமைப்பு**

6.1 அறிமுகம் 42
6.2 வடிவமைப்புக் கொள்கைகள் 42
6.3 வழிகாட்டுநர் – வழிப்படுநர் இணைந்த செயல்பாடுகள் 44
6.4 தொழில்நுட்பக் கூறுகள் 44
6.5 ஒருமித்த வழிப்படுத்துதல் இடைமுகப்பு 46
6.5.1 வெளிப்படுத்தும் தன்மை 46
6.5.2 நம்பிக்கை 46
6.6 ஒருங்கிணைக்கப்பட்ட வழிப்படுத்துதல் இடைமுகம் 47
6.7 தள ஆளுகை 47

**இயல் VII பயணமும் முன்னோக்கிய பாதையும்**

7.1 *NMM* இன் பயணம் 50
7.2 முன்னோக்குவழி 50

**பார்வை நூல்கள்** 52
**பின்னிணைப்புகள்** 53

பின்னிணைப்பு - I 54
பின்னிணைப்பு - II 57
பின்னிணைப்பு - III 59
பின்னிணைப்பு - IV 60

## படங்களின் பட்டியல்


| | |
|---|---|
| படம் 1.1: இந்தியாவில் கல்வி | 2 |
| படம் 1.2: ஆசிரியர்களின் பங்கு | 3 |
| படம் 3.1: பங்கேற்போர் ஒருங்கிணைந்து செயல்புரிந்து இலக்கை நோக்கி ஓர் அலகாக முன்னேறுகிறார்கள் | 13 |
| படம் 3.2: வழிப்படுத்துதலில் பங்கேற்றுச் செயல்படுவோர் | 14 |
| படம் 3.3: பங்குள்ளோரிடையே ஒருங்கிணைந்து செயல்புரிதலுக்கான கொள்கைகள் | 14 |
| படம் 3.4: பணித்திட்டத்தின் முக்கியமான கட்டங்கள் | 15 |
| படம் 5.1: வழிகாட்டுநர் வளர்ச்சிப் படிநிலை | 33 |
| படம் 5.2: வழிப்படுத்துதலுக்கான மதிப்பீட்டு அளவீடுகள் | 36 |
| படம் 6.1: தேசிய வழிப்படுத்துதல் உள்கட்டமைப்பின் வடிவமைப்புக் கொள்கைகள் | 42 |
| படம் 6.2: தொழில்நுட்ப உள்கட்டமைப்பில் இயக்கும் முக்கிய வினைகள் | 44 |
| படம் 6.3: ஒருங்கிணைந்த வழிப்படுத்துதல் பிணைப்பு – கூறு நிலை பார்வை | 45 |
| படம் 7.1: முன்னோக்கு வழி | 51 |


## அட்டவணைகளின் பட்டியல்


| | |
|---|---|
| அட்டவணை 4.1: திறன்கள், உட்கூறுகள் & விளக்கம் | 22 |
| அட்டவணை 4.2: வழிப்படுத்துதலின் முறைகள் | 25 |
| அட்டவணை 4.3: வழிகாட்டுநர் பயிற்சியும் திறன்களின் நிலையும் | 25 |
| அட்டவணை 4.4: வழிப்படுத்துதல் பரப்புகளும், வரையறையும் | 26 |
| அட்டவணை 5.1: பங்குள்ளோரும் கடமைக் கூறுகளும் | 34 |
| அட்டவணை 5.2: குறிக்கோளும் தாக்க அறிவிப்புக் குறியும் | 37 |
| அட்டவணை 5.3: ஊக்குவித்தல் வகைகள் | 39 |
| அட்டவணை 6.1: அளவுகோல்களும் வினாக்களும் | 47 |

## செயல்நிறைவேற்றச் சுருக்கம்

இந்தியாவின் பல்வேறு நிலைகளில் உள்ள கல்விச் செயல்பாட்டாளர்கள், மாணவர்களின் விரிவார்ந்த கற்றல் செயல்பாட்டிற்குத் திறம்பட ஆசிரியர்கள் பங்காற்ற தொடர் கற்றலும் வளர்ச்சியும் அவசியம் என்பதை வலியுறுத்தியுள்ளனர். *'வழிப்படுத்துதலுக்கான செயல்வழிமுறை நூல்' (The Bluebook on Mentoring)* அதிகரித்து வரும் இந்தத் தேவையை நிறைவுசெய்வதற்கான முயற்சியின் விளைவாகும். 'வழிப்படுத்துதல் (வழிகாட்டுதல்)', என்பது அனுபவமுள்ள ஒருவருக்கும் (வழிப்படுத்துகிற வழி காட்டுநர் - *Mentor*) அந்த அனுபவத்திலிருந்து கற்றுக்கொள்ள விரும்பும் (வழிப்படுத்தப்படும் வழிப் படுநர் - *Mentee*) ஒருவருக்கும் இடையிலான இணைந்து செயலாற்றுவதற்கான கட்டமைப்பைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் சொல்லாகும். அதுவே, இந்த வழிமுறை நூலின் மையமாக அமைகிறது. கல்வி உலகின் பல்வேறு பங்குள்ளோருக்கு அமைப்பிலிருந்து பெறப்படும் திறன்களைப் பயன்படுத்துவதற்கு 'வழிப்படுத்துதலை' ஒரு தீர்வாக எடுத்துக்கொள்ள இந்நூல் வழிகாட்டுகிறது.

இந்தச் செயல்வழிமுறை நூல் ஏழு இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

***இயல் I*** இந்தியாவின் கல்வி நிலை பற்றிச் சுருங்கக் கூறுகிறது. கல்வி வளர்ச்சிக்காக அரசு இதுவரை மேற்கொண்ட முன்முயற்சிகளின் வெற்றிகளை இது உள்ளடக்கி உள்ளது. கல்வியில் நடப்பிலிருக்கும் நாடு தழுவிய கொள்கைகள் மற்றும் திட்டங்களின் நோக்கங்களையும் அவற்றின் தாக்கங்களையும் எடுத்துக் கூறுகிறது. கல்வி அமைப்பில் வளர்ந்து வரும் சவால்களையும் *NEP 2020* உடன் இணைந்து சீரமைக்க வழிப்படுத்துதலின் அவசியத்தையும் இது கோடிட்டுக் காட்டுகிறது.

***இயல் II*** வழிப்படுத்துதல் என்ற கருத்துருவாக்கத்தில் கவனம் செலுத்துகிறது. வழிப்படுத்துதல் திட்டத்தை உருவாக்குவதற்கான கொள்கைகளை இது எடுத்துக்காட்டுகிறது. இந்தப் பகுதி வழிப்படுத்துதல் பற்றிய பொதுவான வெற்றுப் புனைவுகளையும் குறிப்பிடுகிறது.

***இயல் III*** 'தேசிய வழிப்படுத்துதல் பணித்திட்டம்' என்பதன் தேவையை எடுத்துக் கூறுகிறது. இது வழிப்படுத்துதல் திட்டத்தின் மூன்று முக்கிய பங்கேற்பாளர்களாக விளங்கும் 'வழிகாட்டுநர்கள்', 'வழிப்படுநர்கள்', 'நிருவாகம்' ஆகியோரை அடையாளம் கண்டு அவர்களுக்கிடையேயான தொடர்புகளைப் பற்றிக் கூறுகிறது. மேலும், பல்வேறு நிலைகளாகக் கட்டமைத்து செயல்படுத்துவதன் வாயிலாகவே இந்தப் பணித்திட்டம் அதன் இலக்கை அடைய முடியும் என்று பரிந்துரைக்கிறது.

***இயல் IV*** வழிகாட்டுநர்கள் தெரிவு, வழிகாட்டுநர்கள் மற்றும் வழிப்படுநர்களின் பண்புகள் போன்ற பல்வேறு கூறுகளை ஆராய்கிறது. இது வழிப்படுத்துதல் திறன்கள், வழிப்படுத்துதலின் வகை, வழிகாட்டுநர்களின் தொடர்ச்சியான தொழில்முறை மேம்பாடு ஆகியவற்றின் அடித்தளத்திலும் கவனம் செலுத்துகிறது. மேலும், இந்தப் பிரிவு வழிப்படுத்துதலை மேற்கொள்ளக்கூடிய முக்கியமான பரப்புகளை எடுத்துக் கூறுகிறது.

***இயல் V*** திட்ட வடிவமைப்பும், திட்டமிடுதலும், திட்ட மேலாண்மை, பங்குள்ளோரின் பணிப் பொறுப்புகளும் கடமைக்கூறுகளும், வழிப்படுத்துதல் திட்டத்தின் பல்வேறு கட்டச் செயல்பாட்டிற்கான பரிந்துரை, திட்ட மதிப்பீடு மற்றும் பள்ளி/நிறுவனங்களில் திட்டத்தின் தாக்கம். திட்டத்தின் நிறுவனமயமாக்கல், ஊக்குவிப்பு ஆகியவற்றையும் எடுத்துக் கூறுகிறது.

***இயல் VI*** தேசிய வழிப்படுத்துதல் உள்கட்டமைப்பு *(NMI)* நிறுவுதல், அதன் வடிவமைப்புக் கொள்கைகள் தொழில்நுட்பக் கூறுகள் ஆகியவற்றை எடுத்துக் கூறுகிறது; ஒருங்கிணைந்த வழிப்படுத்துதல் இடைமுகத்தையும் *(UMI)* ஆகியவற்றையும் இது குறிப்பிடுகிறது.

***இயல் VII*** *NMM*இன் பயணம் மற்றும் முன்னோக்குப் பாதையினைப் பற்றி கூறுகிறது.

NMM
NATIONAL MISSION FOR
MENTORING

# இயல் I

# இந்தியாவில் கல்வி




# இயல்-*I:* இந்தியாவில் கல்வி

## *1.1* இந்தியாவில் கல்வி: தற்போதைய நிலை

இந்தியாவின் கல்வி முன்னெடுப்புகள் நன்கு விவாதிக்கப்பட்ட கொள்கைகளால் வழிநடத்தப்படுகின்றன. இவற்றால் வளர்ச்சிக்கு முக்கியமாகத் தேவைப்படும் பலன்களைப் பெற முடியும். கடந்த காலங்களில் புதுமையான பல கல்வி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றைச் செயல்படுத்துவதில் ஏற்பட்ட சிக்கல்களைக் கடந்து அவை ஆக்கப்பூர்வமான மாற்றங்களுக்கு வழிவகுத்துள்ளன. அவற்றில், தொடக்கக் கல்வி நிலையில் வலுவான அடித்தளத்தை உறுதிசெய்யும் அதே வேளையில், கல்வியை அனைவருக்கும் கிடைக்கச் செய்வதிலும் கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. சிறப்பாகவும், தன்னம்பிக்கை கொண்ட இணக்க மிக்கப் பெரியவர்களாகவும் வளருவதற்கு ஏற்ற சூழலைக் குழந்தைகளுக்கு உருவாக்கித்தருவது நடைமுறையில் இருந்துள்ளது. ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டமைப்புகள் மாணவர்கள் தங்கள் முன்னேற்றத்தை அளவிட உதவுகின்றனவாக இருத்தல் வேண்டும். அதே வேளையில், ஆசிரியர்களைத் தங்கள் முன்னேற்றத்திற்கு வழிவகுப்பவர்களாகவும் காட்ட வேண்டும். அத்துடன், ஒன்றுகூடி செயல்புரிவதற்கு உதவிகரமாகவும் இருக்கும்போது அக்கட்டமைப்புகள் பயனுள்ளவையாகின்றன.

கல்வி முறையின் சூழ்நிலைக் கூறுகளை முற்றிலும் மாற்றியமைத்து சீரான தரம், அணுகல், சமத்துவம் ஆகியவற்றுக்கான சவால்களை எதிர்கொள்ளுவதற்கான சூழலை ஊக்கப்படுத்தக்கூடிய முக்கியக் காரணியாக ஆசிரியர்களின் பங்கு உருவெடுத்துள்ளது என்பதில் சந்தேகமில்லை. *UDISE* இன் தற்காலிகத் தரவுகளின் படி, இந்தியாவில் உள்ள பள்ளிகளில் நிரந்தர, ஒப்பந்த, இணை *(para teachers)* நிலை ஆசிரியர்களை (சிக்ஷா மித்ரா மற்றும் நியோஜித் ஷிக்ஷக்) உள்ளடக்கிய சுமார் *95* இலட்சம் ஆசிரியர்கள் உள்ளனர். கல்வியின் தரத்தையும், தேசிய வளர்ச்சிக்கான அதன் பங்களிப்பையும் தீர்மானிப்பதில் ஆசிரியர்களின் திறனும், பண்புகளும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. ஆசிரியர்களின் தொடர்ச்சியான தொழில்முறை மேம்பாட்டுக்கும் பயிற்சிக்குக்கும் *NEP 2020* முக்கியத்துவம் அளித்துள்ளது. இதில் ஆசிரியர் கல்வித் திட்டங்களின் பல்வேறு பண்புகூறுகளுக்கு வழிகாட்டும் விதத்தில் ஆசிரியர் கல்விக்கான தேசிய கலைத்திட்ட வடிவமைப்பை *(NCFTE)* வகுப்பதும் அடங்கும். பள்ளியின் இலக்குகளையும், கொள்கைகளையும் நிர்ணயிப்பதில் ஆசிரியர்கள் பங்கேற்பதற்கும், 'என்ன கற்பிக்க வேண்டும்', 'எப்படி கற்பிக்க வேண்டும்' என்பதை முடிவுசெய்ய தங்களின் தொழில்முறை சார்ந்த அறிவைப் பயன்படுத்துவதற்கும் ஆசிரியர்களுக்கு உரிமை அளிக்கும் வகையில், ஆசிரியருக்கான அதிகாரமளித்தலுக்கு *('Enculturation of Teacher Empowerment')* உரிய முக்கியத்துவம் அளிக்கப்படும்.




படம் *1.1* இந்தியாவில் கல்வி

*NEP 2020, ஐக்கிய நாடுகள் சபையின் SDG 4 (sustainable development goal – நீடிப்புதிற வளர்ச்சி இலக்கு 4) இரண்டுமே அனைவருக்கும் தரமான கல்வி, வாழ்நாள் முழுதும் தொடர்ந்து கற்றல் ஆகியவற்றை இலக்குகளாகக் கொண்டவை. மேலும், SDG 4 அனைவருக்கும் எளிமையாக கிடைக்கும் வகையில் செலவு குறைந்த, தரமான கல்விக்கான வாய்ப்புகளை மேம்படுத்துதல், கல்வியில் பாகுபாடுகளை நீக்குதல், அடிப்படை எழுத்தறிவையும் எண்ணறிவையும் அடைதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது. இந்திய அரசின் முதன்மைத் திட்டங்களான சமக்ரா சிக்ஷா மற்றும் நிபுன் பாரத் (NIPUN Bharat) ஆகியவை மாணவர்கள் அனைவருக்கும் தரமான கல்வி அளித்தலை நோக்கமாகக் கொண்டுள்ளன. ஊட்டச்சத்து ஆதரவு, உயர்கல்வி, ஆசிரியர் கல்வி ஆகியன குறித்த இலக்குத் திட்டங்கள் இந்த முயற்சியை நிறைவு செய்கின்றன. உள்கட்டமைப்பு மட்டத்திலுள்ள தடைகளை அகற்றுவதற்கென கணினி வழிக்கற்றல், உள்கட்டமைப்பு, திறன் மேம்பாடு ஆகியவற்றுக்கான அலகுகளை அமைத்திட வள ஆதாரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.*

*பள்ளிகள் மூடப்பட்டபோது கணினி வள ஆதாரங்களே கல்வியின் உயிர்நாடிகளாக இருந்தன. பெருந் தொற்றுநோய் பரவல் வலுக்கட்டாயமாக இணையவழி கற்றல் கற்பித்தல் சூழலுக்கு விரைவாக நம்மை மாற்றியது. பெருந்தொற்றுநோய் காலக்கட்டங்களில் ஒரு தற்காலிகத் தீர்வாகப் பயன்படுவதற்கும் அப்பாற் பட்டு கணினித் தொழில்நுட்பங்கள் நன்கு செயல்பட்டன. இதன் மூலம் கல்வியாளர்கள், தலைவர்கள் மற்றும் ஒட்டுமொத்த சமூகமும் மக்கள் எதை, எப்படி, எப்போது, எங்கு கற்கிறார்கள் என்பதைப் பற்றிய புரிதலை வளர்த்துக் கொள்ள முடிந்தது. கல்வியாளர்களின் பங்கு, அறிவை வழங்குபவர்கள் என்பதிலிருந்து, அறிவின் இணை படைப்பாளிகள், வழிகாட்டிகள், வழிகாட்டுநர்கள், மதிப்பீட்டாளர்கள் என உருவெடுத்தது.*

## *1.2 ஆசிரியர்களின் பங்கு*

*மாணவர்களை மையமாகக் கொண்டிருப்பதால், கற்றல் பலன்களை அடைவதற்கான பொறுப்பு பொதுவாக ஆசிரியரைச் சார்ந்து உள்ளது. இந்த ஆசிரியர்கள் தங்களுடைய பள்ளிகளுடையது மட்டுமின்றி தங்கள் பகுதிகளில் உள்ள பிற பள்ளிகளின் அடிப்படை பண்பாட்டு அடையாளங்களையும் பண்புகளையும் வரையறுப்பதிலும் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். எந்தச் சவாலான சூழ்நிலைகளையும் சமாளிக்க அவை நடந்தபின் நடவடிக்கை எடுக்காமல், முன்கூட்டியே திட்டமிட்டுச் செயல்படுவதில் இவர்கள் தொடர்ந்து கவனம் செலுத்த வேண்டியுள்ளது. ஆக்கபூர்வமான மாற்றத்தைக் கொண்டுவருதல், அம்மாற்றத்தைக் கொண்டு வருதலால் ஏற்படும் விளைவுகளைத் திறம்பட நிருவகித்தல் என்பன இவர்களிடமிருந்தான மிகவும் பொதுவான எதிர்பார்ப்புகளாகும். பள்ளியின் கட்டமைப்புகள், கொள்கைகள், பின்பற்றப்படும் வாரியங்கள் அல்லது நடைமுறைகள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு பார்க்கையில் கற்பித்தல் கற்றல் செயல்முறையில் ஆசிரியர்களே மிக முக்கியப் பங்கு வகிக்கின்றனர்.*




*படம் 1.2: ஆசிரியர்களின் பங்கு*

தொடர்ச்சியாக கற்றல் மற்றும் திறன்களை வளர்ப்பதன் அவசியத்தைக் கடந்த காலச் சவால்களிலிருந்து பெறப்பட்ட அனுபவங்கள் மீண்டும் உறுதிப்படுத்துகின்றன. ஆசிரியர்களின் திறன் மேம்பாடு, அவர்களது தொடர்ச்சியான தொழில்முறை மேம்பாடு ஆகியவற்றில் கவனம் செலுத்தும் பல முயற்சிகள் முன்பே நடைபெற்றுள்ளன. தொடர்ச்சியான கற்றல் மற்றும் வளர்ச்சியின் நோக்கத்தைச் செயல்படுத்தும் பல கட்டமைப்புகள் இருந்தபோதிலும், நமது ஆசிரியர்கள் தொடர்ந்து எதிர்கொள்ளும் சில சவால்கள் இன்னும் உள்ளன. அவை பரவலாக்கப்பட்ட, சூழல் சார்ந்த திறன்களை வளர்ப்பதற்குத் தடைகளாக செயல் படுகின்றன.

## *1.3 சிக்கலான, வளர்ந்து வரும் சவால்கள்*

ஆசிரியர்களுக்கான கற்றல் வாய்ப்புகள் குறிப்பிட்ட காலத் தேவைகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டு பரிந்துரைக்கப்பட்டுள்ளன. இருப்பினும், அவர்களின் தொழில்முறை வளர்ச்சியின் ஒரு பகுதியாக விவாதங் கள், அமர்வுகள் அல்லது கற்றல் வட்டங்களைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பினை மிகக் சில நேரங்களில் மட்டுமே பெறுகிறார்கள். தனித்துறை சிறப்புத் திறமை பதனக்குழியிலிடப்பட்டதுபோல் சமூகங்களுக் குள்ளேயே முடங்கிக் கிடக்கின்றது. இதனால் அத்திறமையைச் சிறந்த வழியில் பயன்படுத்திப் பயனடை வதும் கடினமாகிறது

கற்றலில் ஆர்வமுள்ள ஆசிரியர்கள், வெவ்வேறு மாறுபட்ட சூழல்களைச் சார்ந்தவர்களாக உள்ளனர். எனவே, இதுபோன்ற இடர்ப்பாடுகளைச் சந்திப்பவர்களுக்குக்கூட மாறுபட்டவர்களுடன் ஒன்றாகச் செயல்படுவது, விவாதிப்பது, சிக்கலைத் தீர்ப்பதற்கான திறன்களை வளர்ப்பது ஆகியவை எளிதன்று. கடினமான, புதுமையான, தொடர்ந்து வளர்ந்து வரும் சிக்கல்களை ஒருவர் கையாளும் போது, அவர் தனிமைப்படுத்தப்பட்டதாகவும், ஊக்கமிழக்கச் செய்யப்பட்டதாகவும் நெருடலாகவும் உணர்கிறார். இது நிலைமையை மேலும் சிக்கலாக்கும். பொதுவான பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கென, கற்றல் முறைகள், அனுபவங்கள், சவால்கள், தீர்வுகள் போன்றவை குறி பகிர்ந்துகொண்டு சமூகம் துடிப்பாக செயல்பட வேண்டிய தேவையைப் பெருந்தொற்றுநோய் மேலும் வலுப்படுத்தியுள்ளது. சில நேரங்களில் ஆசிரியர்கள் தாங்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதில் பின்னடைவும் தாமதமும் ஏற்படுகின்றன. செயல்தளத்தை எவ்வாறு அணுகுவது, தொழில்நுட்பம் அல்லது குறிப்பிட்ட ஆதரவை வழங்கக்கூடிய நிபுணர்களை எப்படி அணுகுவது என்பது குறித்து ஆசிரியர்களுக்குத் தெரியாததால், தொடக்கத்தில் இந்தப் பின்னடைவுகள் ஏற்படுகின்றன.

ஆசிரியர்கள் தங்களின் பங்களிப்பில் பல பொறுப்புகளை ஏற்றுக்கொள்கிறார்கள். திறன் மற்றும் தொழில் முறை மேம்பாட்டிற்கான நேரத்தை நிருவகித்து, அவர்களின் பங்களிப்பு குறிப்பாக அவர்கள் நேரடியாக இருத்தல் அவசியமாகத் தேவைப்படும் பணிகளைச் சமநிலைப்படுத்தல் மிகவும் சவாலானது.

## *1.4 தேவையும் சூழலும்*

பல்வேறு நாடுகள், பணிப்பொறுப்புகள், புலங்களைச் சார்ந்த ஆசிரியர்களின் தொழில்முறை மேம்பாட் டுக்கான தேவை, அவர்களுடைய சூழல்கள், சவால்கள், விருப்பங்கள் ஆகியவற்றின் அடிப் படையில் வேறுபடலாம். எனவே, ஒவ்வொரு ஆசிரியரும் தங்கள் பிரச்சினைகளைத் தீர்க்க வெவ்வேறு நோக்குநிலை யையும் தொடர்பு முறையையும் நாடலாம். ஆசிரியர்கள் சிலர் உடன் பணியாற்றுபவர்களிடமிருந்து நேரடியாகக் கற்றுக்கொள்வதை விரும்புகிறார்கள், மற்றவர்கள் இதேபோன்ற சவால்களை எதிர்கொள்ளும் சமூகத்தின் பெரிய குழுவுடன் இணைகிறார்கள். சில சூழ்நிலைகளில், வல்லுநரின் கருத்துகள் தீர்வுகாண அவர்களுக்கு உதவுகின்றன. எனவே, ஆசிரியர்கள் தொழில்முறை ஆதரவைப் பெறக்கூடிய ஒரு செயல்தளம் தேவையாகிறது.

## *1.5 தேசிய கல்விக் கொள்கை (2020) - வழிப்படுத்துதலுக்கான தொலைநோக்கு*

*NEP 2020* கல்விக் கட்டமைப்பின் அனைத்து அம்சங்களையும் தரமான கல்விக்கான *SDG 4*-க்கு ஒத்துப்போகும் வித்தில் மறுசீரமைக்க முன்மொழிகிறது.[1] இம்மாற்றங்களின் மூலம் பெறும் விளைவுகளின் தரத்தை மேம்ப டுத்த பல்வேறு மட்டங்களில் வழிப்படுத்துதலை அறிமுகப்படுத்துவதை ஒரு தீர்வாக இது முன்மொழிகிறது.

[1] Ministry of Human Resource Development. (2020, July 29). National Education Policy 2020. Government of India.

### *1.5.1 மாணவர்களுக்கு*

*பள்ளி மாணவர்களின் இடைநிற்றல் விகிதங்களைக் குறைப்பதற்கும், அனைவருக்கும் கல்வி கிடைப்ப தற்கான சூழலை உறுதி செய்வதற்கும், முன்னாள் மாணவர்களாலும், சமூக உறுப்பினர்களாலும் பள்ளி மாணவர்கள் வழிப்படுத்தப்படுவார்கள். இது மேம்பட்ட கற்றல் விளைவுகளுக்கும் நிலைத்த ஆர்வத்திற் கும் வழிவகுக்கும்.*

### *1.5.2 ஆசிரியர்களுக்கு*

*NEP 2020 "சிறந்த வழிகாட்டுநர்களின் மேற்பார்வையில் பன்முக பாடஅணுகுமுறைகள், பற்றிய நோக்கு, அறிவு, மனஇயல்புகள், மதிப்புறுநெறிகள் உருவாக்கம், சிறந்த வழிகாட்டுநர்களின் கீழ் பயிற்சி மேம்பாடு"[2] எனும் நிலைகளில் ஆசிரியர்களை மேம்படுத்தும் செயல்முறையை அங்கீகரித்துள்ளது. எனவே, நாடு முழுவதும் ஆசிரியர் மேம்பாட்டிற்கான துணைப் பொருளாக இது வழிப்படுத்துதலை முன்மொழிகிறது.*

*a. பள்ளிக் கல்வித் துறையின் திரள் (கிளஸ்டர்) வள மையங்கள் மூலம் அங்கன்வாடிகள்/ பால்வாடிகளில் ECCE ஆசிரியர்களுக்கான வழிகாட்டல் கட்டமைப்பை நிறுவுவதுடன், தொடர்ச்சியான மதிப்பீட்டிற்கான மாதாந்திர கூட்டங்களையும் இது பரிந்துரைக்கிறது. தொழில் ரீதியாகத் தகுதியான ECCE கல்வியாளர்களை உருவாக்குவதற்கான நீண்ட கால முன்மொழிவில், தொழில்முறைப் பயிற்சி, வழிப்படுத்துதல் வழிமுறைகள், பணிவாய்ப்பு நிலை ஆகியவை கூட்டாக செயல்படுத்தப்படும்.*

*b. பணியில் இருக்கும் பயிற்சி ஆசிரியர்களுக்கு, பொருத்தமான, வலுவான வழிப்படுத்துதல் ஏற்பாடுகள் செய்து தரப்படும். கூடுதலாக செய்முறைப் பயிற்சிகளின் வாயிலாக அவர்களின் தகுதிகளை மேம்படுத்திக்கொள்ள இவை வாய்ப்பாக அமையும்.*

*c. ஆசிரியர்களுக்கு நீண்டகால தொழில்முறை ஆதரவை வழங்க தேசிய வழிப்படுத்துதல் பணித் திட்டம் நிறுவப்படும், திறன்வாய்ந்த வல்லுநர்களின் வழியாக இது நிறைவேற்றப்படும்.*

### *1.5.3 பள்ளித் தலைவர்களுக்கு*

*கற்றல் - கற்பித்தல் செயல்முறையை நிருவகிப்பதற்கும், தொடர்ச்சியான தர மேம்பாட்டிற்கான விதிமுறை களை நிறுவுவதற்கும், ஆசிரியர் மேம்பாட்டிற்கான நிலையான ஆதரவை வழங்குவதற்கும், கூட்டுக் கற்றல் அமைப்பை உருவாக்குவதற்குமான பள்ளித் தலைவர்களின் திறனை வளர்ப்பதற்கான வழிப்படுத்துதல் கட்டமைப்புகளை இது பரிந்துரைக்கிறது.*

### *1.5.4 கல்வித் தலைவர்களுக்கும் நிறுவனங்களுக்கும்*

*NEP 2020, வழிப்படுத்துதல் பணியில் அனைத்து கல்வி நிறுவனங்களிலும் கல்வித் தலைவர்களை ஈடுபடச் செய்வதன் அவசியத்தை வலியுறுத்துகிறது. உயர்கல்வி நிறுவனங்கள் குறித்து தேசிய கல்விக் கொள்கை 2020-இன் முதன்மை நோக்கம் பயனுள்ள நிருவாகம் மற்றும் சிறந்த தலைமைத்துவத்திற்குமான வழிப்படுத்து தலின் மூலம் அவற்றை மறுசீரமைப்பதும் ஒருங்கிணைப்பதுமாகும்.*

*a. உயர்கல்வி நிறுவனங்களுக்குள் அதிகாரமளித்தல், தன்னுரிமையாகப் புத்தாக்கம் மேற்கொள் ளல் ஆகிய பண்பாட்டினை உயர்த்திட, உயர் தர அங்கீகாரம் வழங்கும் முறை நிறுவப்பெறும். அதற்கு கல்லூரிகள் பொது வரையளவு மீது தங்களைச் சமமாக்கிக் கொள்வதற்கு வழிப்படுத்தப் படும். ஒவ்வொரு பல்கலைக்கழகமும் அதனுடன் இணைந்த கல்லூரிகளுக்கு "கல்வி, பாடத் திட்ட உருவாக்கங்கள், கற்பித்தல், மதிப்பீடு; நிருவாகச் சீர்திருத்தங்கள், நிதி உறுதிப்பாடு; நிர்வாகத் திறன்" ஆகியவற்றில் திறன்களை வளர்த்துக் கொள்ள உதவும் வகையில் வழிகாட்டி யாகவும் இறுதியில் பட்டம் வழங்கும் தன்னாட்சிக் கல்லூரிகளாக மாற்றவும் வழிவகை செய்தல்.*

*b. மேலும், அனைத்து துறைகளிலும் தரமான கல்வி ஆராய்ச்சியை ஊக்குவிப்பதற்காக கல்வி நிறுவனங்களுக்கு வழிகாட்டுவது NRF இன் முதன்மைச் செயல்பாடுகளில் ஒன்றாகும்.*

[2] Ministry of Human Resource Development. (2020, July 29). National Education Policy 2020. Government of India.

## வழிப்படுத்துதல் - செயல்வழிமுறை நூல்

*NEP 2020 வழங்கிய பரிந்துரைகளுக்கு மேலதிகமாக, இந்தியாவில் உள்ள கல்விச் சூழல் அமைப்பு முழுவதற்கும் பல்வேறு நோக்கங்களைக் கொண்ட வழிப்படுத்துதல் கட்டமைப்புகளை நிறுவுவதற்கு மிகப்பெரிய வாய்ப்பு உள்ளது. இதில் பங்குள்ள பலரிடமும் உள்ள அறிவுச்செல்வத்தையும் வல்லறிவையும், கல்விச் சூழல் அமைப்பின் பல்வேறு பணியாளர்களுக்குப் பயனுள்ள வகையில் திறம்பட வழிகாட்டவும் தகவல்களைக் கொண்டுசெல்லவும் பயன்படுத்தலாம்.*

# இயல் II

# வழிப்படுத்துதல் – ஓர் அறிமுகம்



# இயல்-II: வழிப்படுத்துதல் (MENTORING) – ஓர் அறிமுகம்

## 2.1 வழிப்படுத்துதல் கருத்துரு

*வழிப்படுத்துதல் - என்பது தன் வேலையில் அனுபவம் வாய்ந்த ஒருவருக்கும் அந்த அனுபவத்திலிருந்து கற்றுக்கொள்ள விரும்பும் ஒருவருக்கும் இடையிலான தொடர்புகளை விவரிக்க நீண்ட காலமாக பயன்படுத் தப்படுகிறது. இந்தச் சொல் நீண்ட காலமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. வழிகாட்டுநர், வழிப்படுநர்[3] ஆகிய இருவருக்குமிடையேயான தனிப்பட்ட மற்றும் தொழில்முறை வளர்ச்சியை அடைய இது ஒரு சிறந்த வழியாக நம்பப்படுகிறது. இந்தத் தொடர்புச் செயல்பாடுகளில், வழிப்படுநர் கேட்கும் கேள்விகளுக்குப் பதிலளிப்பது, ஆதரவை வழங்குதல், ஆழமான ஆலோசனைகளை வழங்குதல், சிக்கலான, சவாலான பிரச்ச னைகளுக்குத் தீர்வளிப்பது போன்றவை இருக்கலாம். வழிப்படுத்துதல் உறவு என்பது நீண்ட, கட்டமைக்கப் பட்ட இணைதிறக் கூட்டுவாழ்வு உறவாகும். இது ஒத்த துறைகளைச் சேர்ந்த தொழில் முறையாளர்களுடன் பொருத்தமான தொடர்புகளை ஏற்படுத்துவதன் வாயிலாக வழிப்படுநர்களின் இலக்கை நோக்கிய தொழில் முறைசார்ந்த வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது.*

**<u>வழிகாட்டுநர்-வழிப்படுநர் உறவின் புனைவுகள்</u>**

*உலகெங்கிலும் உள்ள பண்டைய வரலாறுகளில் வழிப்படுத்துதலுக்கான வேர்கள் உள்ளன. "Mentor" என்ற ஆங்கிலச் சொல்லின் முதல் ஆவணச் சான்றினை கிரேக்க மொழியில் காணமுடிகிறது. மகாபாரதத்தில், ஸ்ரீ கிருஷ்ணர் அர்ஜுனனுக்கு தர்மத்தின் பாதையைப் பின்பற்றவும், போர்க்களத்தில் தனது கடமைகளை நியாயமான முறையில் செய்யவும் வழிப்படுத்தினார். பௌத்தத்தில் உள்ள தாமரை சூத்ரா, "மக்களின் மகிழ்ச்சிக்காகவும், துன்பங்களிலிருந்து அவர்கள் விடுதலை பெறுவதற்காகவும் இணைந்து பணியாற்று வதற்கான உறுதிமொழியை"[4] வழிகாட்டுநர் - வழிப்படுநர் உறவின் அடிப்படையாகக் கருதுகிறது.*

*வழிப்படுத்துதல் என்பது தனிமனிதர்களிடையே பகிர்ந்துகொள்ளப்படும் உரையாடலாக முன்வைக்கப் படுகிறது, அவர்களில் ஒருவர் சிந்தனையைத் தூண்டும் கேள்விகளை முன்வைக்கிறார், மற்றவர் தன்னுடைய தனிப்பட்ட கேள்விகளைக் கேட்கிறார். இது விவாதத்தின் மூலமாக திறனாய்வுச் சிந்தனையை வளர்க்கும் 'சாக்ரடிஸ்' முறையைப் போன்றது. இந்திய வரலாற்றில் கல்வி வழிப்படுத்து தலுக்குக் குருகுல முறை முக்கியப் பங்காற்றியுள்ளது. வழிகாட்டுநர் குரு என்றும், வழிப்படுநர் சிஷ்யர் என்றும் அழைக்கப்பட்டனர். இந்த அமைப்பு அகத்தூண்டுதல், ஊக்கப்படுத்துதல் ஆகியவை மூலம் வழிப்படுநர்களை வழிநடத்தியது,[5] அவர்களின் உள்ளார்ந்த திறனை உணர்ந்து கொள்ள இது அவர்களுக்கு உதவியது. சாணக்கியரின் வழிப்படுத்துதலே சந்திரகுப்த மௌரியர் பாடலிபுத்திரத்தின் அரசராகவும் அதன்பின் ஒரு பெரிய பேரரசராகவும் ஆவதற்கு காரணம் என்று பல்வேறு இலக்கியக் குறிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*பண்டைய வரலாற்றைத் தாண்டி, நவீன வரலாற்றில் வெற்றிபெற்ற அனைத்து பொது நபர்களுக்கும் அவர்களின் வாழ்க்கையில் வழிகாட்டுநர்கள் முக்கிய பங்கு வகித்துள்ளனர் - அரிஸ்டாட்டில் பேரரசன் அலெக்சாண்டரை வழிப்படுத்தினார். டாக்டர் பெஞ்சமின் எலிஜா மேஸ் மார்ட்டின் லூதர் கிங்கினை வழிப்படுத்தினார். கற்றல் மற்றும் திறன் மேம்பாட்டிற்கான ஒரு முக்கியமான, பயனுள்ள முறையாக வழிப்படுத்துதல் மீண்டும் வெளிப்படத் தொடங்கியுள்ளது.[6]*

[3] Together Platform. "Mentor Handbook, "Together Platform".

[4] Soka Gakkai. (2020). The Oneness of Mentor and Disciple. Soka Gakkai (Global).

[5] Kukreja, S., Arora, R., & Singh, T. (2020). Mentorship Program: A Modern Outlook of Traditional Knowledge. International Journal of Applied & Basic Medical Research.

[6] Hansman, C. A. (2002). Critical Perspectives on Mentoring. Center on Education and Training for Employment College of Education, The Ohio State University

வழிப்படுத்துதலானது தனிமனிதரின் தனிப்பட்ட பயன்பாட்டுக்கும் தொழில்முறைத் தேவைகளுக்கும் ஏற்ப தளர்வான தழுவல்களைக் கொண்டிருந்தாலும், அது "மக்கள் தங்களின் கற்றலை நிருவகிப்பதற்கு ஆதரித்து ஊக்குவித்தல்; உள்ளார்ந்த திறனை வெளிக்கொணர்தல்; திறன்களை மேம்படுத்துதல்; அவர்களின் செயல் திறனை உயர்த்துவதன் வழி தாங்கள் இருக்க விரும்பும் நபராக மாறுதல்"[7] என வரையறுக்கப்படுகிறது

## 2.2 வழிப்படுத்துதல் கோட்பாடுகள்

பங்கேற்பாளர்கள் தொடர்புகளின்போது பங்கேற்பவர்களின் தேவைகளுக்கு ஏற்ப வழிப்படுத்துதல் பல்வேறு வகைகளாக அமையலாம். சில வழிப்படுத்தும் கொள்கைகள் கட்டமைப்பின் சாராம்சத்தைப் பராமரிக்க உதவும். வழிகாட்டுநர், வழிப்படுநர் ஆகிய இருவரும் ஒருங்கிணைந்து ஈடுபாடு காட்டும்போது வழிப்படுத்துதல் கட்டமைப்பு மிகவும் வெற்றிகரமாக அமையும். பின்வரும் கொள்கைகளின் பட்டியல் நோல்ஸ்[2] அவர்களால் பரிந்துரைக்கப்பட்ட வயது வந்தோருக்கான கற்றல் கோட்பாடுகளுடன் பொருந்தும் வகையில் தொகுக்கப்பட்டுள்ளன. வழிப்படுத்துதல் கட்டமைப்பில் பங்கேற்பாளர்களுக்குத் தேவையான ஈடுபாட்டினை அவை ஊக்குவிக்கும் என்பதை மனதில் வைத்துக் கொண்டு இவ்வாறு செய்யப்பட்டுள்ளது.

a. வழிப்படுநரை மையப்படுத்தியது: தாங்கள் கற்றதைத் திட்டமிடுதல், செயல்படுத்துதல், மதிப்பீடு செய்தல் ஆகியவற்றில் வழிப்படுநர்கள் ஈடுபடல் வேண்டும். வழிப்படுநர்களின் உறவை மேம்படுத்தி அவர்களின் வளர்ச்சிக்கான பொறுப்பை அதிகரிக்கும்படியாக ஊக்குவித்தல் வேண்டும். வழிப்படுத்துதல் இணைந்த செயல்பாட்டின்போது வழிப்படுநர்கள் செயல் திட்டத்துக்குட்பட்டோ அல்லது வற்புறுத்தலுக்குட்பட்டோ செயல்படும்படியான நெருக்கடிகள் இருத்தல் கூடாது. ஒரு வழிகாட்டுநர் வழிப்படுநருக்கான சொந்த இலக்குகளை அமைத்துக் கொள்ள வழிகாட்ட வேண்டும். சவால்களைக் கண்டறிந்து, வழிப்படுநர்களின் தேவைகளுக்கு ஏற்ப முன்னுரிமை அளித்துக் கொள்ள வழிகாட்ட வேண்டும்.

b. கிளை அனுபவங்கள்: வழிப்படுத்துதல் செயல்பாடுகளின் போது வழிப்படுநர்களின் வாழ்க்கை அனுபவங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும். வழிப்படுநர்கள் தாங்கள் பெற்ற அனுபவங்களைப் பற்றி சிந்திக்க இது உதவ வேண்டும்.

c. செயல்முறை தொடர்பானது: வழிப்படுத்துதல் என்பது இயல்பு வாழ்க்கையில் ஏற்படும் நடைமுறைப் பிரச்சனைகளுக்கு உள்ளார்ந்த நிலையில் செயல்பட்டு உதவிட வேண்டும்.

d. எளிதாக்கத் துணை செய்தல்: தனித்தியங்கல், கிளைச் செயல்கள், செயல்முறை சார்ந்த வழிப்படுத்துதல் அனுபவத்திற்கு அவசியமான நிலைமைகளை ஆதரிக்கவும் ஊக்குவிக்கவுமான வாய்ப்புகளை எளிதாக்கிட துணை நிற்பதற்கு வழிகாட்டுநர்கள் கவனம் செலுத்திட வேண்டும்.

e. பாதுகாப்பு: வழிப்படுத்துதல் அனுபவம் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் தன் விருப்பமுள்ளதாக இருத்தல் வேண்டும். அவரவருக்கான இடங்களைப் பாதுகாப்பு கொண்டவையாக மாற்ற தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். நம்பிக்கை, இரகசியத்தன்மை, ஒருவருக்கொருவர் மரியாதை, உணர்வுகள் ஆகியவை நிலைபெற கட்டமைப்பு அனுமதிக்க வேண்டும். வழிகாட்டுநர்கள் தங்களுக்கு இடையே உள்ள எல்லைகளையும் அடிப்படை விதிகளையும் ஒப்புக்கொள்ளுதல் வேண்டும். வழிப்படுநர்கள் உடனான அதிகார வேறுபாடுகளை ஈடுசெய்ய வேண்டும்.

f. இணைதிறக்கூட்டு வாழ்வு: வழிகாட்டுநர், வழிப்படுநர் ஆகிய இருவருக்குமான தொடர் வளர்ச்சியில் வழிப்படுத்துதல் செயல்முறை கவனம் செலுத்துதல் வேண்டும். வழிகாட்டல் ஆக்கப்பூர்வ இடைத்தொடர்புகளை மேலும் மேம்படுத்த அவர்களின் ஆலோசனையையும், உதவியையும் தேவையானபோது நாடலாம். இந்த முறைகளால் ஆதாயம் பெறலாம் என்பதை ஒப்புக்கொள்ளுவதன் வாயிலாக வழிகாட்டுநர்கள் பயனடைவார்கள்.

---

[7] Parsloe, E., & Leedham, M. (2009). Coaching and mentoring: Practical conversations to improve learning. Kogan Page Publishers.

[2] Knowles, M. S. (1980). The modern practice of adult education: From pedagogy to andragogy. Englewood Cliffs, NJ: Cambridge Adult Education

## *2.3 வழிப்படுத்துதலுடன் தொடர்புடைய பொதுவான வெற்றுப் புனைவுகள்*

*வழிப்படுத்துதலுடன் தொடர்புடைய பொதுவான வெற்றுப் புனைவுகள் பின்வருமாறு:*

*a.* **வழிப்படுத்துதல் உறவில் வழிப்படுநர்கள் மட்டுமே பயனடைகிறார்கள்.** *வழிப்படுநருக்கு மிகவும் வெளிப்படையான பலன்கள் இருந்தபோதிலும். வழிப்படுத்துதல் என்பது வழிகாட்டு நர், வழிப்படுநர் ஆகிய இருவரும் ஒருவருக்கொருவர் கற்றுக் கொள்ளும் ஓர் இணைதிறக் கூட்டுவாழ்வு ஏற்பாடாகும்.*

*b.* **வழிப்படுத்துதல் உறவு நேருக்கு நேரானது.** *வழிப்படுத்துதலில் நேருக்கு நேரான ஆக்கப்பூர்வ தொடர்பு அதற்குரிய தனிப்பட்ட நன்மைகளைக் கொண்டுள்ளது, இருப்பினும் வழிப்படுத்துதல் உறவை நிலைநாட்டிட கால இசைவற்ற முறைகளையும் இணையவழி முறைகளையும் பயன் படுத்தலாம்.*

*c.* **ஒரு நேரத்தில் ஒரு வழிப்படுநருக்கு ஒரு வழிகாட்டுநர் மட்டுமே இருக்க முடியும்.** *வெவ்வேறு வழிகாட்டுநர்கள் தங்கள் சிறப்பு அறிவையும் திறன்களையும் ஒரு வழிப்படுத்துதல் உறவில் சேர்க்கிறார்கள், இது ஒருவரின் தொழில்முறை அனுபவத்தைக் கணிசமாக மேம்படுத்திட முடியும்.*


*d.* **வழிப்படுத்துதல் உறவைத் தேவைப்படும்போது அணுக முடியாது.** *வழிப்படுத்துதல் உறவு இயற்கையாக உருவாகிறது தேவைப்படும்போது அதனை அணுகலாம். முறையாக அமைக்கப் பட்டுள்ள வழிப்படுத்துதல் உறவில் முன்னரே தீர்மானிக்கப்பட்ட எண்ணிக்கையிலான சந்திப்பு களும் இறுதியில் முடிக்கப்பட வேண்டிய குறிக்கோள்களின் பட்டியலும் வழங்கப்பட்டிருக்கும்.*

*e.* **வழிகாட்டுநர்கள் வழிப்படுநர்களை விட வயதானவர்களாக இருக்க வேண்டும்.** *வழிப்படுத்துப வர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான சிறந்த வழி, அவர்களின் அறிவு நுணுக்கம், செயல்திறன்கள், நற்சான்றுகள், ஒன்றாகக் கற்பதற்கான மனநிலை ஆகியவற்றின் அடிப்படையில் அவர்களை மதிப்பீடு செய்தலாகும்.*

*f.* **ஒருவரே வழிகாட்டுநராகவோ வழிப்படுநராகவோ மட்டுமே இருக்க முடியும்.** *பயனுள்ள வழிப்படுத்துதல் தொடர்புகளை உருவாக்குவதற்குத் தேவையான திறன்களை வழிகாட்டுநர்கள் பெற்றுக் கொள்வதற்கு அவர்களுக்கும் வழிகாட்டுநர்கள் தேவை. வழிகாட்டுநர்களும் அவர் களின் தொழில்முறை வளர்ச்சியில் உதவுகிற வழிகாட்டுநர்களைக் கொண்டிருப்பார்கள்.*

# இயல் III

# தேசிய வழிப்படுத்துதல் பணித்திட்ட அறிமுகம்



# இயல்-*III:* தேசிய வழிப்படுத்துதல் பணித்திட்ட அறிமுகம்

ஒருவருக்கொருவர் தொழில்முறை மேம்பாட்டுக்காக கருத்துகளைக் கட்டமைக்கப்பட்ட முறையில் பகிர்ந்து கொள்ள உதவுவதற்கான தேசியவழிப்படுத்துதல் பணித்திட்டம் தற்போது இருக்கும் வளங்களையே பயன் படுத்தி இந்திய கல்வி முறையின் விரைவான வளர்ச்சியை எளிதாக்கிட துணைநிற்கும். அதற்கிணங்க, பள்ளி ஆசிரியர்கள் அறிவையும் திறனையும், மதிப்புறு நெறிகளையும் பெறவதையும், பகிர்வதையும் மேம்படுத்து வதற்கான நாடு தழுவிய வழிப்படுத்துதல் பணித்திட்டத்தை NCTE முன்வைக்கிறது.

## *3.1* தேசிய வழிப்படுத்துதல் பணித்திட்டத்துக்கான தேவை


முன்னெப்போதுமிருந்திடாத தேவைகளும் சவால்களும் நிறைந்த இன்றைய காலங்களில் ஆசிரியர்களுக்கு புதிய தீர்வுகள் தேவைப்படுகின்றன. கல்வித்துறையில் இயங்கக்கூடிய கல்வியாளர் சமூகம் திறமையான வர்களைக் கொண்டுள்ளது. அவர்கள் ஒத்த வயது மாணவர்களின் திறன்களை வளர்ப்பதற்கும் அவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் பங்காற்றக்கூடிய அறிவும், திறன்களும் அவர்களிடம் இருக்கின்றன. தொடர்ந்து மாறிவரும் சூழலுக்கு ஏற்றவாறு அமைப்புகளை மாற்றியமைப்பதன் வாயிலாக, குடிமக்களுக் குத் தனிப்பட்ட வாழ்க்கையையும் தொழில்சார் வாழ்க்கையையும் நிறைவுசெய்யும் வகையில் சரியான திறன்களைக் கலந்து வழங்க முடியும். இது உள்ளடக்கிய, நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக் கிறது. ஆகவே, தற்போதுள்ள இடைவெளிகளை மேலும், பரந்த முறையில் நிவர்த்தி செய்வதற்கான தீர்வினை வழிப்படுத்துதல் அமைப்பு வழங்குகிறது. இவற்றுள் தனித்துறை சிறப்பறிவு வல்லுநர்களை அணுகுவது, தொடர்ச்சியான தொழில்முறை மேம்பாடு, ஒத்த சூழல்களில் ஒத்தவயது உள்ளவர்களுடன் (ஒப்பார் குழு) இணைதல், கற்றல் பகிர்தலை மேம்படுத்துவதற்கான தளம் இல்லாதது ஆகியவை இடை வெளிகளாக உள்ளன. ஓர் அனுபவமிக்க நிபுணருடன் கற்றலில் ஈடுபடுவதற்கான வாய்ப்பினைத் தனிமனிதர்களுக்கு வழிப்படுத்துதல் அமைப்பு வழங்குகிறது. பல்வேறு வகையிலான வழிகாட்டுநர் - வழிப்படுநர் தொடர்புகளில் ஈடுபடுவதனால் ஆசிரியர்களின் திறனும் செயலாற்றலும் மேம்படும். மேலும், இது வல்லுநர்களுடன் இணையவும் கற்றல் அனுபவங்களையும், மிகச் சிறந்த நடைமுறைகளையும் பரிமாறிக் கொள்ளும் அமைப்புகளில் ஈடுபடவும் பள்ளியின் தலைமை, மேலாண்மை, கலைத்திட்டம், கற்பித்தல், கல்விக் கொள்கைகள், மதிப்பீடுகள் போன்ற பல்வேறு தளங்களில் கற்றவற்றையும் சிறந்த செயல்முறைப் பயிற்சிகளையும் பரப்புவதற்கு பகிர்ந்து கொள்ளக்கூடிய வாய்ப்புகளை வழங்குகிறது.

தகவல்களும் கற்றலும் படிநிலைகளாக, மேல்-கீழாக ஒரே திசையில் ஒத்தியல்புடன் ஒருங்கு சேர்க்கப் பட்டுள்ளன. பயிற்சி நிகழ்வுகளும்கூட அவ்வாறே வடிவமைக்கப்படுகின்றன. தற்போதைய கல்வி முறையில் இவை மிகவும் துயரமானவையாக இருந்து வருகின்றன. வழிப்படுத்துதல் பணியானது படிநிலை களின் தடுப்புகளை மென்மையாக்குவதற்கும் ஓர் அடிப்படை முன்னுதாரண மாற்றத்தைக் கொண்டு வருவதற்கும் வாய்ப்பினை வழங்குகிறது. இது கற்றலைச் சமுதாயத்தாலும் ஒத்த வயதினரால் வழிநடத்தப் படுவதாகவும் ஆக்கிவிடும். இது கற்றலை மேலும் தனியுரிமையாக்கி தொடரச் செய்யும்.

**வழிப்படுத்துதலானது பங்குள்ளோர்களுக்கான ஒரு கூட்டமைப்பு முகமையை உருவாக்குகிறது. அதில் உள்ளுணர்வோடு கற்றல், சிந்தித்தல், திறனுருவாக்கல் கட்டமைத்து பகிர்ந்து கொள்ளுதல் ஆகியவற்றை அச்சமூகம் பேணி வளர்க்கிறது.**

## *3.2* பணித்திட்டத்தின் நோக்கம் எவ்வாறு எய்தப்பெறும்?

பங்கேற்பாளர்கள் பலரும் ஒருமித்து இயங்குவதன் வழியாக ஒரு பொது இலக்கை அடையலாம். கல்வித் துறையின் அனைத்து மட்டங்களிலும் இதைச் செயல்படுத்துதல் வேண்டும்.





படம் 3.1: பங்கேற்போர் ஒருங்கிணைந்து செயல்புரிந்து இலக்கை நோக்கி ஓர் அலகாக முன்னேறுகிறார்கள்

### பங்கேற்போர்

இந்த வழிப்படுத்துதல் பணித்திட்டச் செயல்பாட்டில் முக்கிய பாத்திரங்கள் வழிகாட்டுநர்களும் வழிப்படு நர்களும் ஆவர். ஒரு குறிப்பிட்ட துறையில் தொழில்முறை மேம்பாட்டினைத் தேடும் கல்வித் துறையைச் சேர்ந்த தனிமனிதர்கள் வழிப்படுநர்கள் ஆவர். வழிகாட்டுநர் என்பவர்கள் ஒரே பணியிலோ ஒன்றுக்கும் மேற்பட்ட பணியிலோ உள்ள தனிமனிதர்கள் ஆவர். இவர்கள் ஒரே துறையில் தொழில்முறை மேம்பாட்டை நாடிச்செல்பவர்களாகவும் அந்தத் தேடுதலுக்கு ஏற்ற விவாதங்களையும் உரையாடல்களையும் எளிதாக்கிடத் துணை நிற்பதில் திறமையானவர்களாகவும் இருப்பர்.


சிறிய அளவிலான வழிப்படுத்துதல் நடவடிக்கைகளுக்கு வழிகாட்டுநர், வழிப்படுநர் ஆகிய பாத்திரங்கள் போதுமானது. எனினும் மிகப்பெரிய அளவில் வழிப்படுத்துதல் கட்டமைப்புகளை எளிதாக்குவதற்கும் நிலைநிறுத்துவதற்கும் இந்தப் பணியானது மூன்றாவது கூறு ஒன்றையும் ஈடுபடுத்துகிறது. வழிகாட்டுநர் களுக்கும் வழிப்படுநர்களுக்கும் இடையே அடிக்கடி நடைபெறும் அனைத்து செயல்பாடுகளின் தரத்தையும், எண்ணிக்கைகளையும் தொடர்ந்து மேம்படுத்துவது நிருவாகிகளின் (தனிமனிதர் அல்லது அலகு) பொறுப்பு. கூடுதலாக, வழிப்படுத்துதல் கட்டமைப்பின் தொடர்ச்சியான வளர்ச்சியையும் சூழல் அமைப்பால் அதன் நிறுவனமயமாக்கலையும் அவை உறுதி செய்கின்றன. கல்விச் சூழலில் எந்தவொரு வழிப்படுத்துதல் திட்டத்தின் அளவும் பரந்ததாக இருக்கக்கூடும் என்பதால், பிற அமைப்பின் பங்களிப்பாளர்கள் தொழில்நு ட்பம் மற்றும் இணையவழியான தளங்களை விரிவுபடுத்தி அனைத்து பங்கேற்பளர்களுக்கும் வழிப்படுத்து தலை ஒரு தடையற்ற அனுபவமாக அளிப்பதற்கான வாய்ப்பு உள்ளது.




*படம்.3.2: வழிப்படுத்தலில் பங்கேற்றுச் செயல்படுவோர்*

பங்கேற்போர் இடையேயான ஒருங்கிணைந்து செயல்புரியும் தொடர்புகளுள் முதன்மையானது அறிவு, திறன்கள், மதிப்புறுநெறி, சிறந்த பயிற்சிகள் ஆகியவற்றைப் பகிர்ந்து கொள்வதை மையமாகக் கொண்டிருக்கும். எடுத்துக்காட்டாக, புதிதாக வந்துள்ள ஆசிரியர்களுக்கு புத்தொளிப் பயிற்சி முறைகள் குறித்த கலந்துரையாடல்களை எளிதாக்க, வழிகாட்டுநர் ஒருவர் வழிப்படும் குழுவினருடன் உரையாடலில் ஈடுபடுவார்; ஒரு குறிப்பிட்ட நிகழ்வு அடிப்படையிலான கலந்துரையாடலை எவ்வாறு எளிதாக்குவது என்பதற்கான திறன் கட்டமைப்பு அமர்வில் இந்தக் கட்டமைப்பின் நிருவாகி, வழிகாட்டுநரைப் பங்கேற்கச் செய்வார்.

இந்த ஒருங்கிணைந்து செயல்புரிதலின் பயனுறுதன்மை நான்கு கூறுகளால் வழிநடத்தப்படுகின்றது. அவை, உத்திரவாதம், ஒருமித்த கருத்து, கட்டமைப்பு, கருவிகள் ஆகியனவாகும்.





*படம்.3.3: பங்குள்ளோரிடையே ஒருங்கிணைந்து செயல்புரிதலுக்கான கொள்கைகள்*

## *3.3 இந்தப் பணித்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் விளைபயன்கள் என்ன?*

*அறிவு, திறன்கள், விழுமியங்கள் ஆகியவற்றைப் பெறுவதையும் பரிமாறிக்கொள்வதையும் இந்தியக் கல்வி முறை முழுமைக்கும் மேம்படுத்துதல் என்னும் பொதுவான இலக்கை அடைய பங்கேற்பாளர்கள் ஒருவரோடொருவர் தொடர்பு கொள்ளுகிறார்கள். கல்விச் சூழலியலில் பேரளவிலான, தொழில்நுட்ப உதவியுடன் கூடிய பரந்துபட்ட வழிப்படுத்துதல் கட்டமைப்புகளை ஒருங்கிணைப்பதன் மூலம் இது வாய்க்கப்பெறும்.*

*மேம்படுத்தப்பட்ட, மையப்படுத்தப்படாத தலைமையின் மூலம் பள்ளிக் கல்வியை உயர்த்துவதே இதன் இறுதி இலக்காகும். எடுத்துக்காட்டாக, ஆசிரியர்களின் அறிவுத் தளத்தை விரிவுபடுத்துவதற்கென அவர்களின் திறன்களை வளர்த்துக்கொள்வதையும், வகுப்பறைகளில் ஏற்படும் சவால்களைச் சமாளிக்க அவர்களைச் சிறப்பாகத் தயார்படுத்துவதையும் துரிதப்படுத்த வழிப்படுத்துதலைப் பயன்படுத்த வேண்டும். இவற்றின் வழியாக அன்றாடம் ஒரு குறிப்பிட்ட அளவு மாணவர்களுக்கு கல்வி பரப்பப்படுவது மேம்படுகிறது. பள்ளிகள் சிறந்த கற்றல் நிறுவனங்களாக வளர இது ஒரு விரைவான பயனுள்ள வழியாகும். மாநில அல்லது மாவட்ட அளவில் பங்குள்ளோர்/நிறுவனங்கள் வழிப்படுத்துதலை உயர்த்திடும் பணியில் பங்கு வகிக்க அனுமதிப்பதன் மூலமாக ஆற்றல் வளர்ப்புக்கு மையப்படுத்தப்படாத அணுகுமுறையை அனுமதிக்கும் எளிமையான வாய்ப்பினை இது வழங்குகிறது. மேலும் எதிர்காலத்தில், பள்ளித் தலைவர்கள், கல்வி நிர்வாகிகள் ஆகியோருக்கான வழிப்படுத்துதலுக்கும் இப்பணி நீட்டிக்கப்படலாம். இந்த இலக்குகளை அடைவது ஒரு தொடர் பயணம் என்றாலும், இப்பணியின் சில உறுதியான நிலைகள் அதன் வளர்ச்சிக்கு வழிகாட்டும்.*




**படம்.3.4: பணித்திட்டத்தின் முக்கியமான கட்டங்கள்**

### *கட்டம் 1: முன்தயாரிப்பு*

*ஒரு திட்டத்திலுள்ள பங்குள்ளோர்கள் தொழில்முறை மேம்பாட்டுக்காக தேவைகள் மதிப்பீடு ஒன்றைச் செய்யலாம். தேவைகளை நிறைவேற்ற வழிப்படுத்துதல் திட்டத்தைச் செயற்படுத்துவதற்குப் போதுமான வளங்களுக்கான பரப்பை வரைபடமாக்கிக் கொள்ளலாம். இச்சமயத்தில், அமைப்பில் பங்கேற்போர் செயல் வழிமுறை நூல்கள் போன்ற இந்த வளங்களைப் பயன்படுத்தி, பெரிய அளவிலான வழிப்படுத்துதல் அமைப்பைச் செயல்படுத்துவதில் தங்களைத் தாங்களே புத்தாக்கம் செய்து கொள்ளலாம்.*

### *கட்டம் 2: திறனுருவாக்கம்*

*வழிகாட்டுநர்கள் பணியமர்த்தப்பட்டவுடன், முக்கிய வழிப்படுத்துதல் திறன்கள் மற்றும் தொழில்நுட்பங்களுடன் தொடர்புடைய துறைகளில் அவர்களின் திறமைகளைக் கட்டமைக்க இந்த இரண்டாம் கட்டம் அனுமதிக்கிறது.*

### கட்டம் 3: நெருங்கிய நட்பு / நட்புரிமை

இந்தக் கட்டத்தில், வழிகாட்டுநர்கள் கட்டம் 2-இல் கற்றுக்கொண்ட திறன்களை வரையறைக்குட்பட்ட சூழலில் பயிற்சி செய்யலாம். வழிப்படுத்துதல், திட்டத்தில் ஒருங்கிணைந்து செயல்புரியும் பயிற்சிகளின் தரம் மற்றும் மதிப்பு குறித்து வழிகாட்டுநர்களிடமிருந்தும் வழிப்படுநர்களிடமிருந்தும் வரும் பின்னூட்டத்தின் அடிப்படையில் கட்டம் 2-இன் திறன் வளர்ப்பிற்குப் பயன்படுத்தப்படும் அணுகுமுறையைச் செம்மைப்படுத்த நட்புரிமை நிலை பயன்படுத்தப்படலாம்.

### கட்டம் 4: வலுப்படுத்துதல்

வரையறுக்கப்பட்ட சூழலில் வழிப்படுத்துதல் கட்டமைப்புகளைப் பங்கேற்போர் நம்பிக்கையுடன் செயல்படுத்தினால், அவரவர் துறையின்கீழ் வழிப்படுத்துவதில் வழிகாட்டுநர்கள் அனுபவம் பெறத் தொடங்குகிறார்கள். இந்தக் கட்டம், திறன்-வளர்ப்பு அமர்வுகள் மூலம் வழிகாட்டுநர்களின் தொடர்ச்சியான வளர்ச்சிக்கு அனுமதிக்கிறது. இந்தச் சூழலில், வழிப்படுத்துதல் உறவின் இறுதி முடிவுகள் எண்ணவாக இருக்கும் என கண்காணிப்பதற்கான அளபுருக்கள், வழிப்படுத்துதல் கட்டமைப்பின் செயல்திறனைப் புரிந்துகொள்ளவும் நிர்ணயிக்கப்பட்ட விளைவுகளைப் பெற அதை மீண்டும் சீரமைக்கவும் உதவும்.

வழிப்படுத்துதல் திட்டத்தின் குறிக்கோள்களுடன் விளைபயன்கள் ஒத்துப்போகும் வகையில் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக ஒப்பார் வழிப்படுத்துதல் வட்டங்களின் மூலம் ஆசிரியர்கள் மாணவர்களின் அடிப்படை எழுத்தறிவு எண்ணறிவுத் திறன்கள் ஆகியவற்றில் கற்றல் முடிவுகளை அதிகரிக்கச் செய்வதற்கான திட்டத்தில் மாணவர்களின் எழுத்தறிவு, எண்ணறிவுகளின் அடிப்படைக் கற்றல் செயல்திறன்கள் எவ்வளவு விழுக்காடு (%) உயர்ந்துள்ளது என்பதை மதிப்பிட வேண்டும்.

### கட்டம் 5: வளர்ச்சியும் நிலைத்தன்மையும்

இந்தக் கட்டம் வழிப்படுத்துதல் கட்டமைப்பைப் பரிசோதித்துப் பார்ப்பதிலிருந்து ஒரு சமூகத்தை அதில் உருவாக்குவதற்கான செயல்பாடாக மாற்றுகிறது. தொடர்புடைய அனைத்து பங்குள்ளோர்களும் பங்கேற்பதையும் அவர்களின் தொடர் ஆர்வத்தையும் உறுதிசெய்யும் வகையில் வழிப்படுத்துதல் கட்டமைப்பை இப்போது விரிவாக்க முடியும். பின்வரும் வழிமுறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் இதை அடையலாம்:

a. மதிப்புறு நெறிகளை விளக்குவதன் மூலம் பங்கேற்பதற்கான தேவையைத் தூண்டுதல்

b. அனைவரும் பங்கேற்பதற்கு வகை செய்யும் நிறுவனமயமாக்குதல் மற்றும்

c. தகுந்த ஊக்குவிப்புகள் மூலம் கட்டமைப்புகளில் தொடர்ந்து பங்கேற்பதற்காக பங்குபெறுநர்களை ஊக்குவித்தல்.

மேற்குறிப்பிட்ட கட்டங்களாகப் பிரிக்கப்பட்ட இலட்சியப் பணியை நிறைவேற்றுவதற்கு, ஒரு வழிப்படுத்துதல் முறையில் செயல்படுவோர் அனைவருக்கும் இடையில் ஒருங்கிணைந்து செயல்புரிதலின் மதிப்பைப் பயன்மிக்க முறையில் உயர்த்திட சில அமைப்புகளைக் கீழ்க்காணும் பிரிவுகள் விளக்குகின்றன.

# இயல் IV வழிப்படுத்துதலுக்கான தீர்வுகள்



# இயல்-*IV*: வழிப்படுத்துதலுக்கான தீர்வுகள்

## *4.1* வழிகாட்டுநர் தெரிவு

ஒரு வழிப்படுத்துதல் கட்டமைப்பிற்கு, அதன் நீண்ட காலச் செயல்முறைகளைத் தக்கவைப்பதற்கும் அக்கட்டமைப்பினை எளிதாகத் துணை நிற்பதற்கும் நிருவாகியை (தனிமனிதர் அல்லது குழு) தவிர, அதற்கென நியமிக்கப்பட்ட வழிகாட்டுநர்களும் வழிப்படுநர்களும் தேவை. இந்தப் பகுதி வழிகாட்டுநர்களைத் தெரிவு செய்யும் செயல்முறைகள், எப்படியிருக்கும் என்பதையும், ஒரு வழிப்படுத்துதல் கட்டமைப்பை வெற்றிபெறச் செய்யும் வழிகாட்டுநர்கள், வழிப்படுநர்கள் ஆகியோரின் பண்புகள் ஆகியவற்றையும் உள்ளடக்கியது.

### *4.1.1* வழிகாட்டுநர் தெரிவு செயல்முறை

வழிப்படுத்துதல் உறவில் வழிகாட்டுநர் என்பவர் இக்கட்டமைப்பில் ஈடுபட்டுள்ள மற்ற பங்குள்ளோர்களால் நம்பப்பட வேண்டும். வழிகாட்டுநரைத் தேர்ந்தெடுப்பதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட செயல்முறை, வழிகாட்டுநர்கள் மீதான நம்பிக்கையை ஏற்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது, இதன் விளைவாக இதே வழியில் வழிப்படுத்துதல் தொடர்பு முறைகள் அணுகப்படுகின்றன. வழிகாட்டுநர்கள் தெரிவு செயல்முறையைப் பின்வருமாறு அனுமதிக்கலாம்:

*a.* ஒப்பார்குழு முன்மொழிதல், வாய்ப்புள்ள தகுதி வாய்ந்த வேட்பாளர்கள் விருப்பம் தெரிவித்தல்

*b.* வழிகாட்டுநர் தெரிவு அளவுகோல் மூலம் வேட்பாளரின் விண்ணப்பத்தை மதிப்பீடு செய்தல்

*c.* வழிகாட்டுநரின் ஆற்றுப்படுத்துப் பயிற்சியும் *(Orientation)* திறன் வளர்ப்பும் (திறனுருவாக்கம்)

சமூகவியலாளர்கள், உளவியலாளர்கள், பல்வேறு துறைகளைச் சேர்ந்த கல்வியாளர்கள் இணைந்து கொண்டு பொருத்தமான வழிகாட்டுநரைத் தேர்ந்தெடுக்கும் செயல்முறையை வடிவமைக்க உதவலாம். அமைப்பின் தேவைகளைப் பொருத்து சூழ்நிலைக்கேற்ப தெரிவு செயல்முறையை அமைக்க இது உதவும்.

வழிகாட்டுநர்களைத் தேர்ந்தெடுக்கும் செயல்முறை அனைத்து வேட்பாளர்களுக்கும் அணுகக்கூடியதாக இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, தொழில்நுட்ப வசதி இல்லாத அல்லது தொழில் நுட்பம் தெரியாத தகுதியான வேட்பாளர்கள் இருக்கலாம். அவ்வாறே, வழிப்படுத்துதல் அமைப்பு, பிற துறைகளில் இருந்து அகில இந்திய/மாநில சேவை அதிகாரிகள் போன்றவர்களை வழிகாட்டிகளாகத் தேர்ந்தெடுக்க விரும்பினால், அவர்கள் விண்ணப்பிக்க ஏற்றவகையில் தெரிவு செயல்முறை வெளிப்படையாக இருத்தல் வேண்டும். வழிகாட்டுநர் தெரிவு செயல்முறை தகுதியான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்க ஒரு தடையாக இருக்கக்கூடாது.

## *4.2* வழிகாட்டுநர்களின் பண்புகள்

வழிப்படுத்துதல் உறவிலிருந்து அதிகப்பட்ச பலன்களைப் பெறுவதற்கு செயல்பாட்டுக்கு முன்னும், செயல்பாட்டின்போதும் வழிகாட்டுநரும் வழிப்படுநரும் ஆயத்தமாகி கற்றுக்கொள்ள வேண்டியதற்குப் பெற்றிருக்க வேண்டிய சில பண்புக்கூறுகள் உள்ளன. செயல்பாட்டிலிருந்து கிடைக்குமென எதிர்பார்க்கப்படும் கற்றல் பயன் வெளிப்படுவதற்கு உயர்ந்த குணங்களை வழிகாட்டுநர்கள் கொண்டிருக்க வேண்டும். வழிப்படுத்துதல் உறவில் பங்கு பெறுவதற்கு அவசியமானதாகக் கருதப்படும் சில பண்புக்கூறுகள் உள்ளன, ஆனால் சில நேரங்களில் வழிகாட்டுநர்களுக்கான பயிற்சி மற்றும் தொடர்ச்சியான திறன்-வளர்ப்பு திட்டங்கள் மூலம் சில பண்புகளை உருவாக்கிக் கொள்ள முடியும்.

வழிப்படுத்துதல் அமைப்பின் சூழலைப் பொருத்து, வழிகாட்டுநர் தெரிவுக்கான தொடக்கப் புள்ளியாக செயல்படக்கூடிய பண்புகளின் பட்டியலும் வழிகாட்டுநர் பயிற்சிக்கான குறிப்புகளும் இங்கு தரப்பட்டுள்ளன.

***a.*** **வேற்றுமை குறித்த விழிப்புணர்வு:** வேற்றுமைகள் குறித்த விழிப்புணர்வு என்பது, வழிப்படுத்துதல் திட்ட செயல்பாடுகளின்போது ஒரு குறிப்பிட்ட சூழலில் பல்வேறு நபர்கள், குழுக்கள், அவர்களின் கருத்துகள் குறித்து அறிந்திருப்பதாகும். அது சமூக-பொருளாதார பின்னணிகள், பாலினம், வயது, கலாச்சாரம், சாதி, மதம், பலவகையான வழிகாட்டுநர்கள், வழிப்படுநர்கள் பற்றிய பிற அம்சங்கள் ஆகியவற்றுடன் தொடர்புடைய தனிப்பட்ட வேறுபாடுகளையும் உணர்வுகளையும் பற்றி அறிந்திருத்தலை உள்ளிட்டதாகும்.

*b.* ***பயனுறு தகவல் தொடர்பு:*** *பயனுறு தகவல் தொடர்பு என்பது ஒரு வழிகாட்டுநரின் முக்கியமான பண்பாகும். இது கருத்துகள், யோசனை, அறிவு, எண்ணம், உணர்வுகள் ஆகியவற்றைச் சுருக்கமாகவும் உறுதியான முறையிலும் பிறருக்குத் தெரிவிக்கும் திறன்களையும் உள்ளடக்கியது. மேலும், ஆர்வத்துடன் கேட்டல், புரிந்துகொள்ளல், பிறருக்கு பதிலளித்தல் போன்றவை வழிகாட்டுநர்களுக்கு முக்கியமானவையாகும். எனவே, திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கு பயனுள்ள தகவல் தொடர்பு அவசியம்.*

*c.* ***பரிவு:*** *வழிகாட்டுநர்கள் தங்களிடம் வழிப்படும் மனிதர்களிடம் பரிவோடு இருக்க வேண்டும். அவர்களின் நோக்கங்கள், உணர்வுகள், எண்ணங்கள், அனுபவங்களைப் புரிந்துகொண்டு வழிப்படுத்த வேண்டும். இந்தப் பரிவு வழிகாட்டுநர்கள் தகுந்த வழிப்படுத்துதலையும் ஆதரவையும் வழங்க அனுமதிக்கிறது.*

*d.* ***அனுபவம்:*** *இந்தச் செயலாக்கத்தில் ஈடுபடுவதற்கு வழிகாட்டுநர், வழிப்படுநர் ஆகிய இருவருக்கும் அனுபவம் முக்கியத் தேவையாகிறது. அனுபவம் என்பது வழிகாட்டுநர்கள் தங்களின் தொழில்முறை வளர்ச்சியின்போது பெற்ற அறிவு, திறன், தகுதி ஆகியவற்றைக் குறிக்கிறது. வழிப்படுநர்கள் தாங்கள் எதிர்கொள்ளும் சூழ்நிலைகள், சவால்கள் ஆகியவற்றைத் தொடர்புபடுத்துவதற்கும் சிறந்த பயிற்சிகளைப் பெறுவதற்கும் அவற்றைப் பகிர்ந்துகொள்வதற்கும் வழிகாட்டுநர்களின் வளமான அனுபவம் வழிப்படுநர்களுக்கு அவசியம்.*

*e.* ***தனித்துறை சிறப்பறிவுத்திறம்:*** *தனித்துறை சிறப்பறிவுத்திறம் என்பது குறிப்பிட்ட துறை அல்லது தொழில் ஆகியவற்றில் கூடுதல் அறிவு, திறன், முதலானவற்றில் முழுமைபெற்ற ஒருவரை விவரிக்கப் பயன்படுத்தப்படும் சொல் ஆகும். வழிப்படுநர்கள் தங்கள் துறைகளில் ஆழமான புரிதலை வளர்த்துக் கொள்ள, வழிகாட்டுநர் அந்தத் துறை குறித்த ஆழங்காற்பட்ட அறிவு உள்ளவர்களாக இருக்க வேண்டும். அப்போதுதான் ஆழ்ந்த முழுமையான பயிற்சியை வழங்க முடியும்.*

*f.* ***நெகிழ்வுத்தன்மை:*** *வழிப்படுத்துதல் அணுகுமுறையில் நெகிழ்வுத்தன்மையுடன் இருப்பது வழிகாட்டுநர்களின் முக்கியமான பண்புகளில் ஒன்றாகும். வழிப்படுத்துதல் திட்டத்தின் போது, வழிப்படுநர்களின் தேவைகளுக்கு ஏற்ப பொருளடக்கத்தையும் அணுகுமுறையையும் மாற்றவும், தகவமைத்துக்கொள்ளவும், வழிகாட்டுநர்கள் தயாராக இருக்க வேண்டும். வழிகாட்டுநர் பல வகைகளில் முன்மொழியப்படும் கருத்துகளை வழிப்படுநர்கள் எளிதாக அணுகுவதற்கேற்ப பல வழிகளைப் பயன்படுத்திடும் திறன் பெற்றவராக, (அவள்/அவர்) இருக்க வேண்டும். அணுகுமுறை மற்றும் செயல்முறைகளின் நெகிழ்வுத்தன்மை வழிப்படுத்துதல் திட்டத்தில் முக்கியப் பங்கு வகிக்கிறது.*

*g.* ***ஊக்கமளித்தல்:*** *ஒரு சிறந்த வழிகாட்டுநர், ஊக்கமளிக்கும் குணங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். வழிகாட்டுநரின் தூண்டுதல் வழிப்படுநர்கள் ஆர்வமாகவும், உற்சாகமாகவும் செயல்பட்டு மிகப்பெரிய திறனை அடைய உதவுகிறது. வழிகாட்டுநரின் ஊக்கம் வழிப்படுநருக்கு உந்துதலாக அமைந்து அவர்களின் செயல்திறனில் உயர்வான எதிர்பார்ப்புகளை ஏற்படுத்துகிறது. வழிகாட்டுநர்கள் தங்களுடைய தனித்துவமான செயல்கள், வெற்றிகள் ஆகியவற்றை எடுத்துக்காட்டுகளாக்கி அவ்வழியே உயர்வினை அடைய முடியும் என்று ஊக்கப்படுத்துவதன் வாயிலாக, வழிப்படுநர்கள் தங்களின் இயல்பான சூழலைக் கடந்து விரும்பும் குறிக்கோளை அடைய முடியும்.*

*h.* ***தலைமைத்துவத் திறன்கள்:*** *ஒரு பொதுவான குறிக்கோளை நோக்கி மற்றவர்களை வழிநடத்தவும், செல்வாக்கு செலுத்தவும், ஊக்குவிக்கவும் வழிகாட்டுநர்கள் தலைமைப் பண்புகளையும் நடத்தைகளையும் கொண்டிருக்க வேண்டும். வழிப்படுத்துதல் உறவில் வழிப்படுநர்களை ஊக்குவிக்கவும் அவர்களுக்கு வழிகாட்டவும் வழிகாட்டுநர்களுக்குத் தலைமைத்துவ திறன்கள் மிகமுக்கியம்.*

*i.* ***திறனாய்வுச் சிந்தனை:*** *வழிகாட்டுநர்கள், தர்க்கம் மற்றும் காரணங்களின் அடிப்படையில் கருத்துகள், எண்ணங்கள், சூழ்நிலைகள் போன்றவற்றைப் பகுத்தாய்ந்து மதிப்பீடு செய்வது முக்கியம். வழிகாட்டுநர்கள் எப்பொழுதும் பிரச்சினைகளைத் தர்க்க ரீதியாக அணுக வேண்டும். உண்மைகள் அல்லது தகவல்களின் அடிப்படையில் முடிவெடுத்தல் கூடாது. பலவேறு ஆதாரங்களை அலசி ஆராய வேண்டும், மேலும், வழிப்படுநர் சவால்களையும் தடைகளையும்*

தாண்டி முன்னேறவும் அவரின் அணுகுமுறைகளை மதிப்பிடவும் சூழ்நிலைக்குத் தக்கவாறு அவர் செயல்படவும் வழிகாட்டுநருக்கு திறனாய்வுச் சிந்தனை உதவுகிறது.

j. **படைப்பாற்றல்:** படைப்பாற்றல், வழிகாட்டுநர்களுக்கு புதிய சிந்தனைகளைக் கட்டமைக்கவும், சவால்களைச் சமாளிக்கும் வகையில் வழிப்படுநர்களுக்குப் புதுமையான தீர்வுகளை வழங்கவும் உதவுகிறது. வழிகாட்டுநர்களுக்கு இது மிகவும் வேண்டத் தக்கது. வழிப்படுநர்கள் தங்களது யோசனைகளையும், கருத்துகளையும் நோக்கங்களையும் பல்வேறு கண்ணோட்டங்களில் ஆராய்ந்து பரிசோதித்து புதுமையான தீர்வுகளைக் கொண்டு வர வழிகாட்டுநர்கள் ஊக்குவிப்பதும் முக்கியம்.

k. **சிந்தித்தல்:** உன்னிப்பான, ஆழ்ந்த சிந்தனை, திறன்கள் வழிகாட்டுநர்களுக்கு அவர்களின் எண்ணங்களையும் சிந்தனைகளையும் ஆழ்ந்த சுய-சிந்தனை செய்யவும் வழிப்படுத்துதல் அமர்வுகளை மதிப்பீடு செய்யவும், வழிப்படுநர்களிடமிருந்து செயல்பாட்டு பின்னூட்டங்களைப் பெறவும் தொடர்ந்து வழிகாட்டுநர்களாக வளரவும் உதவுகிறது. மேலும், வழிகாட்டுநர்கள் தங்களின் உத்திகளைச் செம்மைப்படுத்தவும், வழிப்படுநர்களின் தேவைகள் குறித்து ஆழமாகப் புரிந்து கொள்ளவும், பொருத்தமான வழிகாட்டலும் ஆதரவை வழங்கவும் உதவுகிறது. வழிப்படுநர்கள் தங்களது ஆழ்ந்து சிந்திக்கும் திறன்களை வளர்த்துக்கொள்வதற்கு வழிகாட்டுநர்கள் ஊக்குவிப்பதும் முக்கியம்.

மேற்கூறிய பண்புக்கூறுகளுக்கு மேலதிகமாக, வழிப்படுநர்களுக்கு ஏற்படும் சவால்களைப் புரிந்துகொள்வதற்கும், அவர்களுக்கு போதுமான அளவு ஆதரவளிப்பதற்கும் வழிகாட்டுநர் மிக உயர்ந்த உணர்வாளராக இருத்தல் வேண்டும். வழிகாட்டுநர் ஆளுமையின் சில எடுத்துக்காட்டுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

**வழிகாட்டுநர் ஆளுமை 1**

திருமதி அஸ்மிதா பந்த் கேந்திரிய வித்யாலயாவில் முதல்வராக உள்ளார். கடந்த 20 ஆண்டுகளாக இரண்டு பள்ளிகளில் தலைவராக பணியாற்றிய அவர், 10 ஆண்டுகளுக்கு முன்பு கேந்திரிய வித்யாலயாவில் முதல்வராகச் சேர்ந்தார். ஒரு ஆசிரியராக, அவர் காலப்போக்கில் கற்பித்தலில் திறன்களை வளர்த்துக் கொண்டார். மேலும், பள்ளியின் மேம்பாட்டினை ஆராய தனது அறிவையும் அனுபவத்தையும் பயன்படுத்த விரும்பினார். அவர் சில தலைமைத்துவப் பயிற்சித் தொகுப்புகளைப் பயின்று, நிருவாகிகளையும் நிறுவனங்களையும் பற்றிய தனது புரிதலை மேம்படுத்துவதன் மூலமும் இதனைத் செய்யத் தொடங்கினார். அவர் தனது பள்ளியின் ஆசிரியர்களும் ஊழியர்களும் கூறுவதைக் கவனமாக கேட்டு, முன்னேற்றம் தேவைப்படும் இடங்களைக் கண்டறிந்தார். சவாலான இடங்களைப் பற்றி ஆசிரியர்களிடமும் ஊழியர்களிடமும் பேசும்போது ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு பலமும் தனித்திறமையும் இருப்பதைப் புரிந்துகொண்டு திறந்த மனத்துடன் அவர்களிடம் கேட்பார். பின்னூட்டக் கருத்துகளை வழங்கும்போது, ஆக்கபூர்வமான விமர்சனங்களில் கவனம் செலுத்தி, பலம், தனித் திறன் ஆகிய இரண்டையும் அடையாளம் கண்டு ஆதாரங்களை வழங்குவதை அவர் உறுதி செய்வார். அவர் தன் செயல்கள், அவற்றின் விளைவுகளைப் பற்றி அடிக்கடி ஆழ்ந்து சிந்தித்து, அதன் பிரதிபலிப்பாக தன் செயல்களை மாற்றிக்கொண்டு, அவரது முன்னேற்றத்திற்கு தடை ஏற்படுத்தும், எதிர்மறையான வளர்ச்சிக்கு வழிவகுக்கும் வடிவங்களை உடைந்தெறிந்தார்.

எப்பொழுதும் அதிகம் கற்றலை விரும்பும் அவர், கற்றல் தொடர்ந்து நடைபெற்றால் எவ்வாறெல்லாம் முன்னேற்றம் அடையலாம் என்பதற்கான சான்றுகளை விளக்கி, தனது பள்ளி ஊழியர்களுக்குப் பயிற்சிப் பட்டறைகளை நடத்தி அதன் மூலம் தனது பள்ளியில் உள்ள மற்றவர்களையும் தொடர்ந்து கற்கத் தூண்டுவார். ஆசிரியர்களுக்கான பாதுகாப்பையும் வசதியையும் உறுதி செய்து, அவர்களுடைய தேவைகளுக்குத் தன்னை எப்போது வேண்டுமானாலும் அணுகலாம் என்பதையும் தனது வழியில் செயல்படுத்துவார். அவரது பேச்சுத் திறன், அவர் என்ன சொல்ல வருகிறார் என்பதை அனைவரும் கேட்டு அதன்படி செயல்படத் தூண்டும். பள்ளி மேம்பாட்டுத் திட்டங்களில் பல வருட அனுபவமுள்ள பள்ளித் தலைவராக, நாடு முழுவதும் உள்ள பள்ளித் தலைவர்களுக்கு அவர்களின் வெவ்வேறு சூழல்களில் இருந்து மேலும் கற்றுக்கொள்ளவும், சிறந்த பள்ளிகளை உருவாக்கும் பயணத்திற்கு பள்ளித் தலைவர்கள் பங்களிப்பாளர்களாக அமைவதற்கும் வழிப்படுத்துவதில் ஆர்வமாக உள்ளார்.

**வழிகாட்டுநர் ஆளுமை 2**

*திரு. அமர்பால் பலேங் CBSE அங்கீகாரம் பெற்ற பள்ளியில் புவியியல் ஆசிரியராக உள்ளார். அவர் 20 ஆண்டுகளாகக் கற்பித்தல் பணியினைச் செய்து வருகிறார். மேலும் அவரது பள்ளியில் மற்ற ஆசிரியர்களுக்கு அகத்தூண்டுதல் செய்பவராக முன்னுதாரணமாகத் திகழ்ந்து வருகிறார். ஆசிரியராக தனது திறமைகளுக்கு அப்பால், அவர் பிற ஆசிரியர்களின் வார்த்தைகளுக்குச் செவிசாய்க்கிறார். பள்ளியின் கலாச்சாரச் சூழலுக்குள் எளிதாகச் செய்வதற்குப் புதிய ஆசிரியர்களுக்கு உறுதுணையாக இருக்கிறார். அவர் தன்னுடைய நிறுவனத்தில் பணிபுரிகிற அனைத்து உறுப்பினர்களுக்கும் ஆதரவான, பாதுகாப்பான சூழலை உருவாக்கிப் பராமாரிப்பதற்கான திறமை பெற்றவர், பிறருக்குத் தூண்டுதலாய் அமையும் முன்மாதிரித் தலைவராக அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளார். பணியிடத்தின் பணி நெறிமுறைகள், பாதுகாப்பு, தொழில் அறம், பணியின் உயர் தரத்தின் முக்கியத்துவத்தையும், அதன் நன்மைகளையும் அவர் புரிந்து வைத்துள்ளார். மேலும், அவர் தனது செயல்கள் மூலம் அதை நடைமுறைப் படுத்துகிறார். தனது தனித்துறை சிறப்புத் திறன்களைப் பயன்படுத்தி மற்ற ஆசிரியர்கள் தாங்கள் ஆதரவளிக்கப் படுவதாகவும், வழிகாட்டப்படுவதாகவும், பள்ளிகளில் கடுமையின்றி எளிதாக உணரவும் செய்கிறார். அவர்களின் தொழில்முறை வாழ்க்கையை நிறைவு செய்யும் பயணத்தில் ஒரு பங்காற்றுநராகவும் இருக்கவும் விரும்புகிறார்.*

## *4.3* வழிப்படுநரின் பண்புக்கூறுகள்

*ஒரு வழிப்படுத்துதல் உறவு வெற்றிகரமாக அமைய, வழிப்படுநர் இலக்கு-நோக்கியவராக, முன்முயற்சி மேற்கொள்பவராக, சவால்களை எதிர்கொள்பவராக புதியனவற்றைக் கற்றுக்கொள்வதற்கும் பொறுப்புகளை ஏற்றுக்கொள்வதற்கும் ஆர்வத்தைக் காட்டுபவராக இருத்தல் வேண்டும். அவர்கள் பங்கேற்று சுறுசுறுப்பாக இயங்க வேண்டும், திறனாய்வுத் திறன்களைத் தக்கவைத்துக்கொள்ள வேண்டும், அறிவினை மேம்படுத்த கூடுதலான புதிய திறன் தேடலும் வேண்டும், பொறுப்புகளைத் திறந்த மனத்துடன் ஏற்றுக் கொள்ள வேண்டும். வெற்றிக்கான பல செல்வாக்குகளுக்கும் திறந்த மனத்துடன் இருக்க வேண்டும்[3]. வழிப்படுநர் ஆளுமைக்குச் சான்றுகள் பின்வருமாறு:*

**வழிகாட்டுநர் ஆளுமை 1**

*திரு. செல்வ குமார் கேந்திரிய வித்யாலயா பள்ளியின் ஆசிரியர். இப்பள்ளியில் 12 ஆண்டுகளாக ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். மேலும் பலவற்றைக் கற்றுக்கொள்வதில் உள்ள அவரது ஆர்வத்தின் காரணமாகவும் முன்னேற வேண்டும் என்கிற அவரது விருப்பத்தின் காரணமாகவும் பள்ளிக் கல்வியில் சில படிப்புகளை மேற்கொண்டுள்ளார். அடிப்படை நிலையிலிருந்து உயர் சிறப்புநிலையை அடையச் செய்வதற்கும் மாணவர்கள் அனைவருக்கும் மிகச்சிறந்த அனுபவங்களை உருவாக்குவதற்கும் அப்பள்ளியில் நிறைய வாய்ப்புகள் இருப்பதைக் காண்கிறார். இப்போது தனது பள்ளியின் மேம்பாட்டிற்கு வழிகாட்டுநர்களிடமிருந்து வழிகாட்டுதலை நாடுகிறார். இந்தப் பயணத்தில் தான் கற்றுக் கொள்வதைக் குறித்தும் உற்சாகமாக உள்ளார்.*

**வழிகாட்டுநர் ஆளுமை 2**

*திருமதி சங்கீதா பிரதான், ஜவஹர் நவோதயா வித்யாலயாவில் ஆங்கில ஆசிரியராக உள்ளார். அவரது ஆசிரியர் பயிற்சிக்குப் பிறகு இதுவே அவரது முதல் முழுநேரப் பணியாகும். அவர் பணியில் சேர்ந்த உடன் தான் ஆசிரியர் பயிற்சியில் கற்றுக்கொண்டதை தனது வகுப்பறையில் பயன்படுத்த சிறிது காலம் எடுத்துக்கொண்டார். 7 மற்றும் 8 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு குறிப்பாக, கற்றல் திறனில் வேறுபாடுள்ள மாணவர்களுக்கு வகுப்பெடுப்பதில், பல்வேறு சவால்கள் இருந்தன. திருமதி. பிரதான், பள்ளியிலும் அவரது வட்டத்திலும் உள்ள மற்ற ஆசிரியர்களை உணர்வுபூர்வமாக அணுகுவதற்கு நேரத்தை ஒதுக்க முடிவு செய்தார். கற்பதிலும், வழிப்படுத்துதலைப் பெறுவதிலும் ஆர்வமாக இருந்த அவர், வகுப்பறையில் உள்ள சிரமங்களைத் தன் சக நண்பர்களுடனான கலந்துரையாடல், அவர் கலந்து கொண்ட பயிற்சிப் பட்டறைகள் ஆழ்ந்த தொடர் சிந்தனை ஆகியவை வாயிலாக அறிந்துகொண்டார்.*

---

[3] National Institute of Technical Teachers Training and Research. (2020, September). Making Mentoring Relevant: NEP 2020 PERSPECTIVE.

## 4.4. வழிகாட்டுநர் மேம்பாடு

வழிப்படுத்துதல் உறவுகளை அதிகரிக்கவும் வெற்றிகரமாக செயல்படுத்தவும் வழிகாட்டுநர்களுக்கு கருவிகளும் வாய்ப்புகளும் வழங்க வேண்டும். வழிகாட்டுநர் மேம்பாடு அனைத்து வழிப்படுத்துதல் திட்டங்களிலும் பின்வரும் இரண்டு நிலைகளில் இடம்பெற வேண்டும்.

a. வழிகாட்டுநர் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன், வழிப்படுத்துதல் பயிற்சியைச் சிறப்பாக செயல்படுத்துவதற்கும் வழிகாட்டுநர் தொடர்புகளை எளிதாகிடத் துணை நிற்கவும் வழிப்படுத்துதல் திட்டம் உதவுதல் வேண்டும்.

b. வழிப்படுத்துதல் திட்ட செயல்முறை வகுப்பு தொடரும் போது, தொடர்ச்சியான தொழில்முறை மேம்பாட்டு (CPD) வாய்ப்புகள் வழிகாட்டுநர்களுக்கு ஆதரவான உணர்வையும் அவர்கள் வழிகாட்டுநர்களாக வளரவும் உதவும்.

### 4.4.1 வழிகாட்டுநர் பயிற்சித் திட்டம்

வழிகாட்டுநர்கள் பல்வேறு வகையான தொழில் நுட்பத் திறன்களைப் பெற்றிருத்தல் வேண்டும். சான்றாக, துறைசார்ந்த அறிவு, தகவல் தொடர்புத் திறன், பரிவு, உணர்ச்சி சார்ந்த நுண்ணறிவு, சிக்கலைத் தீர்க்கும் திறன், நேர மேலாண்மை, தலைமைத்துவத் திறன்கள் போன்றவையாகும். இந்தத் தொழில்முறைத் திறன்கள் வழிப்படுத்துதல் பயிற்சியின்போது வழிப்படுநர்களுக்கு ஆதரவையும் வழிகாட்டுதலையும் வழிகாட்டுநர்கள் வழங்கிட உதவுகின்றன. வழிப்படுத்துதல் பயிற்சித் திட்டம் வழிகாட்டுநருக்கு இரண்டு வகைகளில் உதவ வேண்டும்: அவை, அடிப்படை வழிப்படுத்துதல் திறன்களின் வளர்ச்சியும் வழிப்படுத்துதல் வகைகளைக் குறித்த புரிதலும் ஆகும்.

#### 4.4.1.1 வழிப்படுத்துதலின் அடிப்படைகள் (முக்கியமான மையத் திறன்கள்)

இந்தப் பயிற்சிமூலம் வளர்க்கக்கூடிய சில திறன்கள்:

அட்டவணை 4.1: திறன்கள், உட்கூறுகள் & விளக்கம்

| திறன்கள் | உட்கூறுகள் | விளக்கம் |
|---|---|---|
| **தகவல் தொடர்பு** | ஆர்வத்துடன் கேட்டல் | வழிப்படுத்துதலில் புரிந்து கொள்ளக் கடினமான உரையாடல்களை, கருத்துகளைச் செவிமடுத்துக் கேட்பதன் முக்கியத்துவமும், முக்கியமான கூறுகளும். |
| | ஆழ்ந்து சிந்திக்கவும், இரகசியமான தகவல்களைக் கண்டறியும் விதமான வினாக்களை எழுப்புதல் | வெவ்வேறு சூழ்நிலைகளுக்கு ஏற்ப பல்வேறு வகையான வினாக்களைக் கேட்பதன் மூலம் அர்த்தமுள்ள உரையாடல்களை வழிநடத்துதல் |
| | பின்னூட்டங்களை வழங்குதலும் பெற்றுக்கொள்ளலும் | ஆக்கப்பூர்வமான பின்னூட்டங்களைத் திறம்பட எடுத்துக் கொள்ளவும் வழங்கவுமான உதவித் குறிப்புகள் |
| **தலைமைத்-துவம்** | நிருவாக மாற்றம் | அமைப்பு ரீதியான மாற்றத்தின் மூலமாக மக்களை ஊக்கப்படுத்தி எதிர்மறை உணர்வின்றி வழிநடத்திச் செல்வதற்கான வழிகளும், அதுபற்றிய தகவலைத் தெரிவித்தலும் |
| | தொலைநோக்குப் பார்வையும், இலக்குகளும் அமைத்தல் | வழிப்படுத்துதல் உறவுக்கான அர்த்தமுள்ள தொலைநோக்குப் பார்வை மற்றும் திறன்சார்ந்த (SMART) இலக்குகளை அமைத்தல் |
| | பொறுப்புணர்வை உருவாக்குதல் | குழுக்களுடைய பொறுப்புணர்வை வெற்றிகரமாக உருவாக்குதல் மற்றும் பணி ஒப்படைப்பு, கண்காணிப்பு, பின்னூட்டம் ஆகியவற்றில் திறமைகளை வெளிப்படுத்துதல் |

| | | |
|---|---|---|
| | வளர்ச்சிக்கான மனப்பான்மையை வளர்த்தல் | வளர்ச்சி மனப்பான்மையின் அவசியத்தை வெளிப்படுத்துதல் மேலும், தங்களின் சொந்த வளர்ச்சியையும் தனது வழிகாட்டுநரின் வளர்ச்சி மனப்பான்மையையும் மேம்படுத்த கூட்டு உத்திகளை உருவாக்குதல் |
| | நேர மேலாண்மை | நேரத்தையும் பணிகளையும் நிருவகிப்பதற்கும் முன்னுரிமை அளிப்பதற்குமான உதவிக் குறிப்புகள் |
| | பண்பாட்டு உருவாக்கம் | சிறந்த கூட்டாளி /வழிப்படுநர்களின் குழு பண்பாட்டை உருவாக்குவதற்கான வழிகளை அடையாளம் காணுதல் |
| **வெளிப்படும் பிற திறன்கள்** | தொடர்புகள் | உருவாக்கப்படும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான கருவியாக தொடர்பின் முக்கியத்துவத்தை உணர்தல் |
| | வழிப்படுத்துதலும் அதன் சாரமும் | வழிப்படுத்துதலையும் அதன் முக்கியத்துவத்தையும், வழிகாட்டுநரின் செயல்பாடுகளோடு வரையறுத்தல். |

### 4.4.1.2 வழிப்படுத்துதல் - வகைகள்

வழிப்படுத்துதல் ஒருங்கிணைந்து செயல்புரிதலை இணையம் அல்லது நேரடியான முறையில் ஒரே காலத்தில் நிகழ்கிற அல்லது கால இசைவற்ற (ஒரே காலத்தில் நிகழாத) முறையிலோ நடத்தலாம். வழிப்ப டுத்துதலைப் பின்வரும் வகைகளாகப் பிரிக்கலாம்:

வழிகாட்டுநர் மற்றும் வழிப்படுநர்களுக்கான வழிப்படுத்துதல் அனுபவங்கள் ஆக்கப்பூர்வமானதாக அமைய நான்கு முக்கிய செயல்களாவன; **கற்றல், பகிர்தல்,** குறிப்பிட்ட சூழலில் வழிப்படுநர்களின் சிக்கலைத் **தீர்த்து** அவர்களை மீட்டெடுத்து **இணைத்தல்** ஆகியனவாகும். கீழே விளக்கப்பட்டுள்ள பல்வேறு வகையான வழிப்படுத்துதல்கள் மூலம் இதைச் செயலாக்கலாம்.

#### a. தனிமனிதரை வழிப்படுத்துதல்

தனிமனிதரை வழிப்படுத்துதல் என்பது தனியொருவரின், அறிவுப் பகிர்வு உரையாடலாகும், இதில் பங்கேற்பாளர்கள் தங்களுக்கு விருப்பமான தலைப்பைத் தேர்ந்தெடுக்கலாம். இது வழிகாட்டுநர் மற்றும் வழிப்படுநர் ஆகியோர் இடையேயான கலந்துரையாடல்களை மையப்படுத்துகின்றன. நம்பிக்கைக்குரிய தனிமனிதருடன் (வழிகாட்டுநர் அல்லது ஒப்பார் குழுவினர்) இணைவதற்கான வாய்ப்பையும் பகிர்தல், கற்றல், கலந்துரையாடுதல் ஆகிய வாய்ப்பையும் வழிப்படுநர் பெறுகிறார். அவர்கள் பெற்றுள்ள திறன்கள் மற்றும் அறிவை வலுப்படுத்தவும் சவால்களை எதிர்கொண்டு தங்களின் அறிவையும் திறனையும் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதற்கும் வழிகாட்டுநர்கள் உதவுகிறார்கள்.

ஒருவருக்கொருவர் வழிப்படுத்துதல் முறையில் ஈடுபடுவது வழிப்படுநர்களுக்கு ஓர் உள்நோக்குப் பயணமாக அமையும். ஏனெனில், இது அவர்களின் திறன்களில் வலுவான நம்பிக்கையை வளர்க்கிறது. அதே வேளையில் தனிப்பட்ட முறையிலும் மற்றும் தொழில் ரீதியான வளர்ச்சிக்கும் இது உதவுகிறது. இது வழிப்படுநர்களின் கூடுதல் வளர்ச்சியை மேம்படுத்திட உதவுகிறது. ஒரு வழிகாட்டுநரைப் பொறுத்தவரை, அவர் சார்ந்துள்ள சமுதாயத்திற்குப் பங்களிப்பதற்கான வாய்ப்பினை வழங்க உதவுகிறது.

#### b. குழு வழிப்படுத்துதல்

குழு வழிப்படுத்துதல் முறையில், ஒரே மாதிரியான சவால்களை எதிர்கொள்கிற வழிபடுநர்களைக் குழுவாகச் சேர்க்கிறார்கள். ஒத்த வயதினர் அல்லது சமநிலையினரிடமிருந்து கற்றுக்கொள்ளவும் பிணைப்பைக் கட்டமைக்கவும் விரும்புகிற வழிப்படுநர்களுக்கு இது உதவியாக அமையும்.

#### i. குழு விவாதம் (அறிவுப் பரிமாற்ற வழிப்படுத்துதல்)

குழு விவாதங்களின் வழியாக (வழிப்படுத்துதல் குழுக்கள்), கருத்துருக்கள் (கொள்கைகள், திட்டங்கள் போன்றவை) மற்றும் சமுதாயத்தின் தேவைகள் தொடர்பான சிறந்த செயல்பாடுகளை எளிதாகத் துணை நிற்கலாம். வழிகாட்டுநர் பணியினை ஏற்கும் வல்லுநர்கள் தங்கள் அறிவு, அனுபவங்கள்

கற்றல்கள் முதலானவற்றை எளிதாக்குவதற்கும் பகிர்ந்து கொள்வதற்கும் இது இடமளிக்கிறது. வழிப்படுத்துதல் குழுக்கள் வழிப்படுத்துதலின் அழகைக் கற்றல் செயல் கூறுகளுடன் இணைக் கின்றன. கூட்டாகக் கற்றலுக்கும் முன்னேற்றத்திற்கும் வழிப்படுநர்களை ஊக்குவிக்கவும் இந்தக் குழுக்களைப் பயன்படுத்திக்கொள்ளலாம். மேலும், அந்தக் குறிப்பிட்டக் கருத்துருவில் அறிவு, அனுபவம் திறமை உள்ள ஒருவரால் வழிகாட்டப்பட்டு வழிப்படுத்தப்படும் போது, சவால்களை எதிர்கொள்பவர்கள் அல்லது கூட்டு அறிவை உருவாக்க முற்படுபவர்கள் ஆராய்ந்து விவாதித்து ஒன்று படுவதற்கான வழியை ஏற்படுத்துகிறது. வழிகாட்டுநர் குழுக்களைத் தெரிவு செய்யும் வாய்ப்பில், அவர்கள் எதைக் கற்க விரும்புகிறார்கள், யாரிடமிருந்து கற்றுக்கொள்ள விரும்புகிறார்கள் என்பதை வழிப்படுநர்களின் முகவர்களோடு இணைந்து தெரிவுசெய்ய விரும்புகிறார்கள்.

*ii.* **ஒப்பார் குழுவினர் (தோழமை) வழிப்படுத்துதல்**

இந்த முறையில், குறிப்பிட்ட சவால்களை வெற்றிகரமாக கடந்துவந்த அல்லது குறிப்பிட்ட துறை களில் நிபுணத்துவம் பெற்றுவிட்ட வல்லுநர்களின் குழு, அவர்களின் ஒப்பார் குழுவினருடன் (தோழமை) விவாதிக்கவும் அவர்களுக்கு வழிப்படுத்தவும் இடமளிக்கிறது. ஒப்பார் (தோழமை) வழிப் படுத்துதல் அமர்வுகள் வெவ்வேறு கண்ணோட்டங்களில் இருந்து அறிவையும் அனுபவத்தையும் பகிர்ந்துகொள்வதன் மூலம் சமநிலையினரான தோழர்களிடையே ஆதரவான உறவுகளை மேம்படுத் தும் வாய்ப்புவழியைக் கொண்டுள்ளன. இது அவர்களின் சிறந்த நடைமுறையைப் பகிர்ந்துகொள்ளும் அதே வேளையில் அவர்களின் அறிவையும் கூட்டுகிறது. மேலும், ஒத்த சூழல்களைக் கொண்டவர் களின் நம்பகமான தொடர்புகளை வழிப்படுநர்களுக்கு வழங்குகிறது. சமநிலையினர் வழிப்படுத்துதல் என்பது இருவழியிலான, ஒருவருக்கொருவர் பயன்தரும் கற்றல் முறையைக் குறிக்கிறது. வழிகாட்டு நர், வழிப்படுநர் ஆகிய இருவரும் தங்களின் அறிவையும் அனுபவத்தையும் பகிர்ந்து கொள்வதால், இவ்விரு தரப்பினருக்கும் இது பயனளிக்கிறது. ஒப்பார் (தோழமை) வழிகாட்டுநர்கள் வழிப்படுநர்க ளுக்கு ஆதரவளிப்பதால், அவர்கள் கற்றுக் கொள்ள உதவும் பல்வேறு வழிகளில் தங்களது அறிவைப் பயன்படுத்தி அதனைப் புரிந்து கொள்ள முயற்சி செய்கிறார்கள். இது 'சிறந்த பயிற்சிப் பகிர்வு'க்கான மன்றமாகவும் செயல்படுகிறது.

*iii.* **சூழல் அடிப்படையிலான விவாதங்கள் (சூழ்நிலை வழிப்படுத்துதல்)**

இந்த முறையில், வழிப்படுநர்கள் கூட்டாக எதிர்கொள்ளக்கூடிய குறிப்பிட்ட பொதுவான பிரச்சனைக ளுக்குத் தீர்வுகாணும் நோக்கில் வழிகாட்டுநர்களை அணுகுகிறார்கள். சிக்கலைக்கூட்டாகத் தீர்க்க இந்த வகை ஒரு சிறந்த பெரிய வாய்ப்பாக உள்ளது.

*iv.* **தற்காலிக வழிப்படுத்துதல்**

தற்காலிக வழிப்படுத்தல் என்பது குறுகிய கால வழிப்படுத்துதலாகும். இது குறுகிய காலத்தில் குறைந்த நேரத்தில் நிகழ்வதாகும். ஒரு குறிப்பிட்ட பிரச்சனை அல்லது தலைப்பில் தனிமனிதர்களுக்கு விரைவான வழிப்படுத்துதல் தேவைப்படும் சூழ்நிலைகளில் இம்முறையில் தீர்வு காணப்படுகிறது. குறுகிய காலத்தில் நுணுக்கமான வழிப்படுத்துதல் உதவிகளைப் பெற இது ஒரு நெகிழ்வான, திறமை யான வழியாகும்.

மேலே, குறிப்பிடப்பட்ட வகைகள் வழிகாட்டுநர்களுக்கும் வழிப்படுநர்களுக்கும் இடையேயான தொடர்பு களை ஊக்குவிப்பதாக இருந்தாலும், வழிப்படுத்துதல் தொடர்புகளைச் செயல்படுத்த கூடுதல் வழிகள் உள் ளன. இது பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளபடி, ஒரே காலத்தில் நிகழ்கிற அல்லது ஒரே காலத் தில் நிகழாத (கால இசைவற்ற) முறைகளைப் பயன்படுத்தி இணையம் மற்றும் நேரடித் தொடர்புகளின் வழி அமையலாம்.

அட்டவணை 4.2: வழிப்படுத்துதலின் முறைகள்

| முறைகள் → வழிகள்↓ | ஒரே காலத்தில் நிகழ்வன | கால இசைவற்றவை |
|---|---|---|
| இணையவழித் தொடர்பு (ஆன்லைன்) | மேலே விவரிக்கப்பட்டுள்ள அனைத்து முறைகளும் இணையவழி சாதனங்களைப் பயன்படுத்திக் கூட்டப்படுதல்.<br>பேரளவிலான வழிப்படுத்துதல் நிகழ்வுகளுக்கு இம்முறை மிகவும் பயனுள்ளதாக அமையலாம், இம்முறையில் நேருக்குநேர் (தனிப்பட்ட) அமர்வுகள் நடைபெற முடியாதவையாகும். ஏனெனில் வழிகாட்டுநர்களும் வழிப்படுநர்களும் நேரெதிர் தொடர்பின்றி வெவ்வேறு இடங்களில் இருப்பார்கள். | பணியை ஒப்படைப்பதற்கான இணையதள கருவிகள், பின்னூட்டப் பரிமாற்றம் ஆழ்ந்து சிந்திக்கச் செய்யும் ஒப்படைப்புகள், தொடர்புடைய கேள்விகள் இன்ன பிற நிகழ்வுகளுடன் ஆய்வு,<br>சுயவெளிப்பாடு, சுயகற்றல் ஆகியவற்றை ஊக்குவிக்க ஒரே காலத்தில் நிகழ்கிற இணையவழி திட்டத்துடன் இணைத்து பயன்படுத்தப்படலாம். |
| நேரடித் தொடர்பு (ஆஃப்லைன்) | நேரடித் தொடர்பில் அமைந்த மேலே விவரிக்கப்பட்டுள்ள அனைத்து முறைகளும்.<br>இந்த முறையானது சிறிய அளவிலான வழிகாட்டல் நிகழ்வுகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இணையவழி முறைகளுக்கு மட்டுமே என தகவல் தொடர்புகளை மட்டுப்படுத்தாமல் வழிப்படுத்துதல் தொடர்புகளை மேம்படுத்தும். | செயல்பாட்டுக் கருவிகள், நூல்கள், அனுபவம்சார் நிகழ்ச்சிகள் போன்ற நேரடித் தொடர்புக் கருவிகள் ஒதுக்கப்படலாம்.<br>சுய-கற்றலை ஊக்குவிக்க, வழக்கமான இணையம்/ நேரடித் தொடர்பு போன்ற ஒரே காலத்தில் நிகழ்கிற வழிப்படுத்துதலுடன் கூடுதலாக இந்த முறை பயன்படுத்தப்படலாம். |

### 4.4.2 வழிகாட்டுநர்களுக்கான தொடர் தொழில்முறை வளர்ச்சி

வழிகாட்டுநர் பயிற்சியைப் படிப்படியாக திட்டமிட்டு நடத்த வேண்டும். வழிகாட்டுநர்கள் இன்னும் கூடுதல் வழிப்படுத்துதல் தொடர்புகளைத் தொடர்வதைப் பொறுத்து அடுத்த கட்டங்களுக்குச் செல்ல வேண்டும். எடுத்துக்காட்டாக, வழிகாட்டுநர் பயிற்சி பல்வேறு நிலைகளில் நடத்தப்படலாம், இது பல்வேறு திறன்களை அவர்களுக்கு அறிமுகப்படுத்துகிறது. இதன் மூலம் வழிகாட்டுநர்களின் தொடர் திறன் வளர்ப்புக்கு இது உதவும்.

அட்டவணை 4.3: வழிகாட்டுநர் பயிற்சியும் திறன்களின் நிலையும்

| நிலை 1 | நிலை 2 | நிலை 3 |
|---|---|---|
| வழிப்படுத்தல் மற்றும் அதன் சாரம் | கலந்துரையாடல் குழுக்கள் | பொறுப்புணர்வை உருவாக்குதல் |
| தொலைநோக்கையும் இலக்குகளையும் அமைத்தல் | பண்பாட்டுக் கட்டமைப்பு | பிணைப்புகள் |
| குழு உதவுதல் | தனிமனிதர் வழிப்படுத்துதல் | சமநிலையினர் வழிப்படுத்துதல் |
| தனி நிகழ்வு அடிப்படையிலான விவாதங்கள் | இரகசியத் தகவல்களைக் கண்டறியும் விதமான வினாக்களை எழுப்புதல் | மாறுதல்கள் |
| உடனுக்குடனான உதவுதல் | பின்னூட்டங்களை வழங்குதலும் | வளர்ச்சி மனப்பான்மை |

| | | |
|---|---|---|
| | பெறுதலும் | |
| ஆர்வத்துடன் கேட்டல் | | நேர மேலாண்மை |
| பின்தொடர் செயல்பாட்டு உதவுதல் | | |
| துருவி வினவுதல் | | |

*மேலும், வழிப்படுநர்களுடனான கலந்துரையாடல் எல்லைகளை விரிவுபடுத்துவதற்கும் அவர்களைப் பல வேறு அணுகுமுறைகளில் ஈடுபடுத்துவதற்கும் நிருவாகத்தினர் வழங்கும் வசதி வாய்ப்புகளைத் தாண்டி வழி காட்டுநர்கள் அவர்களின் திறன் வளர்ப்புக்கான வாய்ப்புகளைப் பெற வேண்டும். ஒவ்வொரு கால கட்டத்தி லும் CPDயில் வழிகாட்டுநர்களை ஈடுபடுத்துவதற்கான ஓர் அமைப்பு அவசியமாகும். வல்லுநர் அமர்வுகள், இணையவழி கருத்தரங்குகள், திறன் வளர்ப்புக்கான இணையவழிப் படிப்புகள் போன்றவற்றின் வாயிலாக இதை ஏற்படுத்தலாம்.*

## 4.5 வழிப்படுத்தலுக்கான பரப்புகள்

*வெவ்வேறு பகுதிகளில் வழிப்படுத்தலுக்கு அடிப்படையாக மேற்கூறிய வழிப்படுத்துதல் வகைகள் பயன் படுத்தப்படலாம். வழிப்படுத்துதல் திட்டத்தின் நோக்கம், பங்குள்ளோர்களின் தேவை மற்றும் சூழலைப் பொறுத்து, எந்தப் பகுதியிலும் வழிப்படுத்துதல் வழங்கப்படலாம். அமர்வுக்குப் பொருத்தமான வழிப்படுத் துதல் தலைப்புகளைக் கண்டறிய பின்வரும் பகுதிகள் (அட்டவணை 4.4) உள்ளனவற்றைச் சான்றாகப் பயன் கொள்ளலாம். இங்கு அடையாளம் காணப்பட்ட பகுதிகள் NEP 2020 இல் அடங்கி உள்ளன. பிற பகுதிகள் அடையாளம் காணப்பட்டு திட்டத்தின் தொடர்ச்சியாக இணைக்கப்படும்.*

**அட்டவணை 4.4: வழிப்படுத்துதல் பரப்புகளும் வரையறையும்**

| வழிப்படுத்துதல் பரப்புகள் | வரையறைகள் |
|---|---|
| **கற்பித்தல் முறை சார்ந்தப் பாடப்பொருள் அறிவு (PCK) பள்ளி பாடங்கள்/ துறைகளின் உள்ளடக்கத்தை அறிதலும் புரிதலும்** | *PCK எனும் சொற்றொடர் ஆசிரியரின் துறைசார்ந்த பல்பொருள் கற்பித்தல் முறை பற்றிய அறிவினை விளக்குகிறது.*<br><br>*பாடப்பொருள் அறிவு என்பது குறிப்பிட்ட பாடம் / துறை சார்ந்த கருத்துகள், உண்மைகள், கொள்கைகள், கோட்பாடுகள் ஆகியவற்றைப் புரிந்து கொள்ளுதலைக் குறிக்கிறது. பல்பொருள் அறிவோடு தொடர்புடையது. எ.கா. கணிதம், அறிவியல், சமூக அறிவியல், கலை முதலியன. மறுபுறம், கற்பித்தல் முறைபற்றிய அறிவு என்பது கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளில் கற்பவருக்கு உதவுவதற்கு ஆசிரியர் பயன்படுத்தும் உத்திகளைக் குறிக்கிறது.* |
| **அடிப்படை எழுத்தறிவும் எண்ணறிவும்** | *2025 ஆம் ஆண்டிற்குள் ஆரம்பப் பள்ளி அளவில் அனைவருக்கும் அடிப்படையான எழுத்தறிவு எண்ணறிவு சாதனைகளை அடைய முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்று NEP 2020 கூறுகிறது. மாணவர் நிலை 3ஐ (மூன்றாம் வகுப்பு நிலையை) அடையும் பொழுது, அவன் / அவள் பொருள் புரிந்து வாசித்தல், எழுதுதல் மற்றும் எண்ணறிவு தொடர்பான அடிப்படை புரிதலை வளர்த்துக் கொள்வதில் திறமையானவர்களாக இருத்தல் வேண்டும். வகுப்பறைகளுக்கு அப்பால், பள்ளி மற்றும் அவர்களின் வாழ்க்கையை ஒருங்கிணைப்பதன் மூலம் அடிப்படை எழுத்தறிவு எண்ணறிவு ஆகியவற்றை அடைய முடியும்.* |

| | |
|---|---|
| **சமச்சீரான கல்வியும் உள்ளடக்கிய கல்வியும்** | *குழந்தைகள் அனைவருக்கும் தரமான கல்வி கிடைக்கப்பெற வேண்டும் என்ற கருத்தில் சமச்சீரான மற்றும் உள்ளடக்கிய கல்வியை NEP 2020 அழுத்தமாக வலியுறுத்துகிறது. பின்தங்கிய குழுவினரிடையே ஏற்படும் சவால்களை அது கவனத்தில் கொண்டுள்ளது. (பெண்கள், திருநங்கைகள், அட்டவணைச் சாதியினர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், திவ்யாங், பிற பின்தங்கிய குழுக்கள்) குழந்தைகள் அனைவருக்குமான உள்ளடக்கிய கற்றல் சூழலை உருவாக்குவதை இந்தக் கொள்கை உறுதி செய்கிறது.* |
| **தகுதி/திறமை அடிப்படையிலான கல்வி** | *தகுதி / திறமை அடிப்படையிலான கல்வி என்பது உறுதியாகப் பின்பற்ற வேண்டிய கலைத்திட்டம் அல்லது கால வரம்பு வாயிலாகத் தொடருவதைவிட கண்காணிக்கத் தக்கதாகவும் அளவிடத் தக்கதாகவும் இருக்கக்கூடிய வளர்ச்சி மனநிலை, அறிவு, திறன்கள் முதலானவற்றை வளர்ப்பதில் கவனம் செலுத்தும் அணுகுமுறையாகும். நடப்பு வாழ்க்கை சூழ்நிலைகளில் மாணவர்கள் தங்கள் அறிவைப் பயன்படுத்துவதற்கான திறன்களைக் கொண்டிருப்பதை உறுதி செய்வதே தகுதி/திறன் அடிப்படையிலான கல்வியின் நோக்கமாகும்.* |
| **கதை சொல்லல் முறையும் விளையாட்டுப் பொருட்களைக் கொண்டு கற்பித்தல் முறையும்** | *NEP 2020, தேசிய அடிப்படைப் பாடத்திட்ட வரைவமைப்பு, 2022 ஆகியவை குழந்தைகளின் அடிப்படைக் கற்றல் நிலையில் கதைசொல்லல் மற்றும் விளையாட்டு பொருட்களைக் கொண்டு கற்பித்தல் முறையை மிகவும் பரிந்துரைக்கின்றன. விளையாட்டுப் பொருட்களைக் கொண்டு கற்பித்தல் மூலம் குழந்தைகளின் கருத்தியல் புரிதலைத் தொடக்கத்திலிருந்தே வலுப்படுத்த முடியும். இது குழந்தைகளின் சமூக- உணர்வு வளர்ச்சி, அறிவுக் கூர்மை, படைப்பாற்றல் முதலானவற்றை ஊக்குவிக்கும்.* |
| **அனுபவம் சார்ந்து கற்றல்** | *NEP 2020, அனுபவ அடிப்படையிலான கற்றலைப் பரிந்துரைக்கிறது. கைகளால் செய்து கற்றல், கலை, விளையாட்டோடு ஒருங்கிணைந்து கற்பித்தல், கதைசொல்லல் முறையிலான கற்பித்தல் ஆகியவற்றினை ஒருங்கிணைக்கும் தரமான கல்விமுறை ஒவ்வொரு பாடத்திற்குள்ளும் இருத்தல் வேண்டும்.* |
| **இந்திய அறிவு** | *அறிவு, மெய்யறிவு, (மதிநுட்பம்), உண்மை ஆகியவற்றைத் தேடுதலைக் கல்வியின் ஒரு பகுதியாக இந்திய அறிவும் சிந்தனையும் எப்போதும் கருதுகின்றன. இந்திய அறிவில் கல்வியின் உயர்ந்த நோக்கமானது, தன்னுணர்வும் அடிமைத் தளையிலிருந்து விடுதலை ஆகியவற்றோடு தனிமனிதனை வாழ்க்கைக்குத் தயார் படுத்துதலும் ஆகும். பண்டைய இந்திய அறிவின் கூறுகள் அறிவியல் முறையில் அமைந்தவையாகும்.* |
| **செயல் ஆராய்ச்சி** | *செயல் ஆராய்ச்சி என்பது முறைப்படுத்தப்பட்ட ஒரு வகை விசாரணை ஆகும். இது வகுப்பறையிலும் பள்ளியிலும் ஏற்படும் குறிப்பிட்ட பிரச்சனைகளைத் தீர்ப்பதில் கவனம் செலுத்துகிறது. செயல் உத்திகளைப் பற்றி மேலும் அறிந்து கொள்வதற்கும், கற்றல்-கற்பித்தல் சூழலில் முடிவெடுக்கவும் கல்வியாளர்களால் இந்த ஆராய்ச்சி நடத்தப்பெறுகிறது.* |
| **அறம், ஒழுக்கம், அரசியலமைப்பு விழுமியங்கள்** | *ஒரு நல்ல கல்விமுறையானது அறம், ஒழுக்கம் அரசியலமைப்பு விழுமியங்கள் ஆகிய கொள்கைகளால் வழிநடத்தப்படுகின்றது. அவை கருணை, பிறரை மதித்தல், தூய்மை, நாகரிகப் பண்பு, ஜனநாயக உணர்வு, பொதுச் சொத்துகளுக்கு மதிப்பளித்தல், அறிவியல் மனப்பான்மை, சுதந்திரம், பொறுப்புணர்வு, பன்மைத்துவம், சமத்துவம் நீதி ஆகியவற்றைக் குறித்து நிற்கின்றன.* |

| | |
|---|---|
| **எண்ணிய கல்வி எழுத்தறிவு** | அனைவருக்கும் தரமான கல்வி வழங்குவதற்கு தொழில்நுட்ப நன்மைகளைத் துணை வலுவாக ஆக்கிக் கொள்வதன் முக்கியத்துவத்தை NEP 2020 ஏற்றுக் கொள்கிறது. வருங்கால கல்வித் தளங்களில் ஏற்படும் சவால்களைச் சந்திக்க ICT அடிப்படையாகக் கொண்ட கல்வி முன்னெடுப்பு முயற்சிகளும் டிஜிட்டல் கல்வித் தளங்களும் ஊக்கப்படுத்தி விரிவாக்கப்பட வேண்யடிது அவசியமாகும். |
| **தொழில்சார் வெளிப்பாடும் திறன்களும்** | தொழிற் கல்விக்கும் அறிவுசார் கல்விக்குமிடையே அதிகப்படியான வேறுபாடு இல்லாது இருத்தலை NEP 2020, ஊக்கப்படுத்துகிறது. மாணவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப அவர்களுக்கான பாடங்களைத் தெரிவு செய்து கொள்வதனால், தங்களுக்கான தனிவழியை எதிர்காலத்தில் அவர்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ள அது உதவுகிறது. தச்சர், தோட்டப் பராமரிப்பாளர், குயவர், ஓவியர் போன்ற பல்வேறு துறைகளில் தேர்ச்சி பெற்ற மாணவர்களிடம் உள்ளுறைப் பயிற்சியாளர்களாக இருக்கும் வாய்ப்புகள் வாயிலாக மாணவர்கள் தொழில் வல்லுநர்களாக வெளிப்படுவதற்கு தொழிற்பயிற்சிகள் வாய்ப்பளிக்கின்றன. |
| **கலையோடு ஒருங்கிணைந்த கல்வி** | கல்வி முறைகளில் ஒருங்கிணைந்த கலைக் கல்வியை இணைப்பது குழந்தைகளுக்கு மகிழ்ச்சியையும் குதூகலமான கற்றல் சூழலை உருவாக்கும். ஒருங்கிணைந்த இந்திய கலையும் பண்பாடுகளும் தம்வசமுள்ள நெறிமுறைகளையும் விழுமியங்களையும் கற்றலில் உயர்த்திப் பிடித்து கல்விக்கும் பண்பாட்டிற்கும் இடையிலான பிணைப்பை மேலும் வலுப்படுத்துகின்றன. எந்த நாட்டின் கல்வி முறைக்கும் மிக முக்கியமான அம்சம் இதுவாகும். |
| **விளையாட்டோடு ஒருங்கிணைந்த கல்வி** | NEP 2020 பரிந்துரையின்படி "உள்நாட்டு விளையாட்டுகளின் வழியாக உடற்கல்வியை வளர்த்தலே விளையாட்டோடு ஒருங்கிணைந்த கற்பித்தல் அணுகுமுறையாகும். இது ஒத்துழைப்பு, சுய-முயற்சி, சுய-இயக்கம், சுய-ஒழுக்கம், கூட்டு முயற்சி, பொறுப்பு போன்ற திறன்களை மாணவர்கள் வளர்த்துக்கொள்ள உதவுகிறது". |
| **சமுதாய ஈடுபாடு** | ஒரு குழந்தை ஆரோக்கியமான கற்றலுக்கான, கல்விச் செயல்பாட்டில் சமுதாயத்தின் ஈடுபாட்டினைப் பல்வேறு ஆய்வுகள் ஆதரித்துள்ளன. சமுதாய பொருள்பொதிந்த பல்வகை ஈடுபாடு காரணமாக, பண்பாடு மீதான மரியாதையையும் சமூக-உணர்வையும் குழந்தைகள் கற்றுக் கொள்வார்கள். பள்ளிக்கு வெளியே உள்ள சமுதாய இயங்குநிலையைக் கற்றுக் கொள்ள அவர்களுக்கு இது உதவும். |
| **21ஆம் நூற்றாண்டுத் திறன்கள்** | இது வளர்ந்து வரும் சமூகத்திலும் உலகிலும் தனிமனிதர்கள் செழித்து வளரத் தேவையான பரந்த அளவிலான திறன்கள் அல்லது ஆற்றல்களைக் குறிக்கிறது. இந்தத் திறன்கள், படைப்பாற்றல், கணினித் தொழில்நுட்ப அறிவு, சிக்கல் தீர்க்கும் திறன், தகவல் தொடர்பு, புதுமையாக்கம், சூழலுக்கு ஏற்ப தகவமைதல் ஆகியவற்றை உள்ளடக்கியவை. புதிய வளர்ந்து வரும் தொழில்நுட்பத்துடன் உலக குடிமகன்களாக தனிமனிதர்கள் முன்னேறுவதற்கு இந்தத் திறன்கள் தற்போது மிகவும் முக்கியமானவை. |
| **360 பாகை (டிகிரி) மதிப்பீட்டை உருவாக்குதலும் செயல்படுத்துதலும் (முழுமையான மதிப்பீடு)** | NEP 2020, குழந்தைகளுக்கான 360 பாகை (டிகிரி) பன்முகப் பரிமாண மதிப்பீட்டைப் பரிந்துரைத்துள்ளது. ஆசிரியர்கள், பெற்றோர்கள், சமநிலையினரான தோழர்கள் ஆகியோராலும் சுய மதிப்பீட்டின் மூலமும் முழுமையான முறையில் குழந்தைகள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். இது அறியும் ஆற்றல், மன வளர்ச்சி பாதிப்பு ஆகிய அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியது. |

| | |
|---|---|
| **ஆசிரியர்களின் மன நலன்** | தற்போதைய கல்விச் சூழலில், ஆசிரியர்கள் முக்கியமான பங்காற்றிக் கொண்டு இருப்பதால் அவர்களின் பணி கவனம் கொள்ளத்தக்கதாக உள்ளது. உணர்ச்சித் தேவைகள், வாழ்க்கை மற்றும் பணியின் சமநிலை, செயல்நிறைவேற்ற அழுத்தம் ஆகியவை பள்ளி ஆசிரியர்களின் மன நலத்தினைப் பாதிக்கும் சில காரணிகளாகும். எனவே, பள்ளிகளில் ஆதரவான ஆரோக்கியமான கற்றல் சூழலை உருவாக்குவதற்கு ஆசிரியர்களின் மனநலன் பிரச்சனைகளைக் கவனத்தில் கொண்டு செயல்படுதல் முக்கியம். |

## 4.6 வழிப்படுத்துதல் தொடர்பு

ஆக்கபூர்வமான வழிப்படுத்துதல் தொடர்பு என்பது ஒரு வெற்றிகரமான வழிப்படுத்துதல் உறவுக்கு முக்கிய மானதாகும். இது வழிகாட்டுநர், வழிப்படுநர் ஆகிய இருவருக்கும் பயனளிக்கிறது; எனினும் இவ்விருவருக் கும் இடையிலான உறவு காலப்போக்கில் உருவாகிறது. முழுமையாக தொடர்பு கொண்டு செயல்படும் போது, வழிகாட்டுநருக்கும் வழிப்படுநருக்கும் இடையேயான உறவு நிலையானதாகவும் நம்பகமானதாக வும் இருத்தல் வேண்டும். மேலும், வழிப்படுத்துதல் உறவில் பங்கேற்க அவர்கள் தேர்ந்தெடுத்த காரணங் களைப் பற்றி சிந்தித்தல் வேண்டும். வழிப்படுத்துதல் திட்டத்தின் வெற்றி இலக்குகள் என்பன வழிகாட்டுநர், வழிப்படுநர் ஆகிய இருவரும் தொடர்புகொண்டு செயல்படுதல் சார்ந்தது. இந்தத் தொடர்பு பின்வருவன வற்றை உள்ளடக்கியது:

a. நம்பிக்கையையும் நல்லுறவையும் வளர்த்தல்

b. இலக்குகளை அமைப்பதற்கான கூட்டு முயற்சிகள்

c. வழிகாட்டுநர், வழிப்படுநர் ஆகிய இருவரும் அடிக்கடி சந்தித்தல்

d. ஒருவருக்கொருவர் பாராட்டுதல் ஊக்கப்படுத்தல்

e. தனிப்பட்டவர் வளர்ச்சியும்தொழில்முறை வளர்ச்சியும்

f. ஆதரவான வழிகாட்டலும் பின்னூட்டமும்

# இயல் V

# வழிப்படுத்துதல் செயல்முறைத் திட்டத்தின் கூறுகள்



## இயல்-*V*: வழிப்படுத்துதல் செயல்முறைத் திட்டத்தின் கூறுகள்

வழிப்படுத்துதல் செயல்முறைத் திட்டம் ஒரு சிக்கலான அமைப்பில் இருப்பதால் அதனை வடிவமைக்கும் போது பல அம்சங்களைக் கருத்தில்கொள்ள வேண்டியுள்ளது. திட்டத்தைத் திறம்பட வடிவமைத்து செயல் படுத்துவதற்குக் கீழ்க்காணும் பண்புக்கூறுகள் உதவும்:

### *5.1* செயல்முறைத் திட்ட வடிவமைப்பும் திட்டமிடலும்

*a.* இலக்கு குழு (வழிப்படுநர்கள்)

*b.* வழிப்படுத்துதல் செயல்முறைத் திட்டத்தின் தன்மை

*c.* செயலாக்கத் தகுதிவாய்ந்த வழிகாட்டுநர்கள்

*d.* ஈடுபட்டுள்ள பங்குள்ளோர்கள் (வழிகாட்டுநர், வழிப்படுநர், நிருவாகி முதலானோர்) அனைவருக்கும் தொலைநோக்கு, இலக்குகள், எதிர்பார்க்கப்படும் விளைபயன்கள்.

*e.* அமர்வுகளின் கால அளவும் கால இடைவெளியும்

*f.* வழிப்படுத்தலுக்கான தொடர்புகொண்டு செயல்புரியும் முறைகள்

*g.* செயல்முறைத் திட்டம் தொடர்பான தகவல்களைப் பரப்புதல்


*h.* கண்காணிப்பும் மதிப்பீடும்

*i.* பின்னூட்டமிடுதலும் தொடர் செயல்பாடும்

#### *5.1.1* வழிகாட்டுநர்களின் வளர்ச்சிப் படிநிலை

வழிப்படுத்துதல் செயல்முறைத் திட்டம் என்பது வழிகாட்டுநர்களுக்கும் வழிப்படுநர்களுக்கும் இடையே யான உறவை மட்டும் குறிப்பதன்று, மாறாக, வழிகாட்டுநர்களை இவ்வமைப்பில் தொடர்ந்து பங்காற்று பவர்களாகவும் குறைவு நலிவுகளுக்குப் பொறுப்புள்ளவர்களாவும் ஆக்குகிறது. நிலைத்த தன்மையை ஆத ரிக்கும் வகையில் வழிப்படுத்துதல் அமைப்பினை வடிவமைக்கப்படுதல் வேண்டும். அமைப்பு தொடர்ந்து செயல்பட எப்போதும் புற வளங்களைச் சார்ந்து இருத்தல் கூடாது. எடுத்துக்காட்டாக, வழிகாட்டுநர்கள் ஒரு குறிப்பிட்ட அளவிலான பயிற்சியைப் பெற்ற பிறகு புதிய வழிகாட்டுநர்களுக்கு அவர்களாகவே பயிற்று விக்க முடியும். செயல்பாட்டின் நான்கு படி நிலைகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

வழிப்படுத்துதல் செயல்முறைத் திட்டத்தின் வளர்ச்சிப் படிநிலையானது வழிப்படுத்துதல் தொடர்பின் வளர்ச்சிப் படிநிலைகளை மனத்தில் கொண்டு வடிவமைக்கப்படுதல் வேண்டும்.




*படம்.5.1: வழிகாட்டுநர் வளர்ச்சிப் படிநிலை*

## *5.2 செயல்முறைத் திட்ட மேலாண்மை*

*வழிப்படுத்துதல் செயல்முறைத் திட்டத்தை திறம்பட செயல்படுத்த, கீழ்க்காணும் கூறுகள் அடங்கிய திட்ட மேலாண்மைக் குழு (PMU) அல்லது நிருவாகக் குழுவை அமைக்கலாம்.*

a. ஆலோசனைக் குழுவை அமைத்தல்
b. செயல்முறைத் திட்டத்தை நிர்வகிப்பதற்கான அமைப்பு
c. செயல்முறைத் திட்ட மேம்பாடும் வள வடிவமைப்பும்
d. செயல்முறைத் திட்டத்தைக் கண்காணிக்க அமைப்பு
e. செயல்முறைத் திட்டம், பங்குள்ளோர்கள், நிறுவனங்கள் ஆகியோருக்கான பின்னூட்ட வழிமுறை
f. மனித வள மேம்பாட்டுக்கான உத்திகள்
g. பயனுள்ள மக்கள் தொடர்புகளும் தகவல் தொடர்பு முயற்சிகளும்
h. செயல்முறைத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான நிதி ஒதுக்கீடு

## *5.3 செயல்முறைத் திட்டத்தின் செயல்பாடுகள்*

*செயல்பாடுகளின் நடைமுறைகள் குறித்து கவனத்தில் கொள்ள வேண்டியவை:*

a. வழிகாட்டுநர்கள், வழிப்படுநர்கள், செயல்முறைத் திட்டப் பணியாளர்கள் யாரேனும் தன்னார்வலர்கள் இருப்பின் அவர்களையும் இணைத்து ஒரு குழுவை உருவாக்குதல்
b. தகுதிவாய்ந்த வழிகாட்டுநர்களை அடையாளம் காணலும் வழிப்படுத்தப்பட்டவர்களை மதிப்பிடுதலும்

c. வழிகாட்டுநர்கள், வழிப்படுநர்கள், திட்டப் பணியாளர்கள் ஆகியோருக்கு புத்தொளிப் பயிற்சியை வழங்குதல்.
d. வழிகாட்டுநர்களையும் வழிப்படுநர்களையும் பிணைத்தல்
e. நிறுவப்பட்ட வரையறைக்குள் வழிகாட்டுநர்களுக்கும் வழிப்படுநர்களுக்குமான செயல்பாடுகளையும் அமர்வுகளையும் அமைத்தல்.
f. வழிப்படுத்துதல் செயல்முறைத் திட்டத்தைக் கண்காணிப்பதற்கான துணை வழிமுறை
g. செயல்முறைத் திட்டம் முழுமையும் பங்கேற்பாளர்களின் பங்களிப்புகளை அங்கீகரித்தல்
h. இலக்குகளை அடைய வழிகாட்டுநர்களுக்கும் வழிப்படுநர்களுக்குமான சூழல்களை எளிதாக்குதல்

### 5.3.1 பணிப்பொறுப்புகளும் கடமைக் கூறுகளும்

வழிப்படுத்துதல் செயல்முறைத் திட்டத்தில் பல்வேறு பங்குள்ளோர்களுக்குப் பரிந்துரைக்கப்படும் பொறுப்புகளும் பங்களிப்புகளும் கீழே உள்ளன:

**அட்டவணை 5.1: பங்குள்ளோரும் கடமைக் கூறுகளும்**

| பங்குள்ளோர் | கடமைக் கூறுகள் |
|---|---|
| மூத்த அதிகாரிகள்/ PMU | a. செயல்முறைத் திட்டத்தையும், அதன் பாதையையும் வடிவமைத்தல், வழிகாட்டுநருக்கான பயிற்சிப் பாடங்களை வடிவமைத்தல்<br>b. வழிகாட்டுநர்களைத் தேர்ந்தெடுத்தல்<br>c. வழிகாட்டுநர்களின் திறனை வளர்த்தெடுத்தல்<br>d. வழிகாட்டுநர்களின் தொடர் திறன் வளர்ப்புக்கு ஆதரவு வழங்கல்<br>e. மன உறுதியை வலிமையாக வைத்திருக்கவும் வழிப்படுத்துதல் பற்றிய அவர்களின் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ளவும் சிறந்த பேச்சாளர்களைக் கொண்டு அவர்களிடையே உரையாற்றச் செய்தல்.<br>f. செயல்முறைத் திட்டம் திறம்பட செயல்படுவதையும் செயல்படுத்தப்படுவதையும் உறுதி செய்தல்<br>g. செயல்முறைத் திட்டத்தைக் கண்காணித்து மதிப்பீடு செய்தல் |
| வழிகாட்டுநர் | a. வழிகாட்டுநர் சான்றிதழ் பயிற்சியை நிறைவுசெய்தல்<br>b. பிற ஆசிரியர்களுக்கான வழிப்படுத்துதல் கட்டமைப்புகளை ஒருங்கிணைத்து வசதிகளை ஏற்படுத்தல்<br>c. வழிப்படுத்தல் திறன்கள் பற்றிய பரிந்துரைகளையும் பின்னூட்டங்களையும் வழிப்படுநர்களிடமிருந்து பெறுதல்<br>d. தொடர்ந்து திறன்களை வளர்த்துக் கொள்வதற்கு பயிற்சிப் பட்டறைகளில் கலந்து கொள்ளுதல் |
| வழிப்படுநர் | a. வழிப்படுத்துதல் அமைப்புகளில் கலந்து கொள்ளுதல்<br>b. கற்றல், பகிர்தல், தீர்வுகாணல், தொடர்ச்சியான தொழில்முறை மேம்பாட்டை நோக்கி இணைதல் |

### 5.3.2 வழிப்படுத்துதல் செயல்முறைத் திட்டத்தின் பல்வேறுகட்ட செயல்பாடுகளுக்கான பரிந்துரைகள்

#### a. திட்டத்தை அறிமுகப்படுத்துதல்

i. நாடு, மாநிலம், அமைப்பு முழுமையும் உள்ள தொழில் வல்லுநர்கள் வழிகாட்டுநர்களாக மாறுவதற்கான தெரிவு செயல்முறையை வடிவமைத்தல்
ii. வழிகாட்டுநராக பட்டியலில் பெயரைச் சேர்ப்பதற்கான அளவுகோல்களை வெளியிடல்
iii. அமைப்பில் பங்குள்ளோர் அளவுகோல்கள், தெரிவு செய்வதற்கான காலஅளவுகளை வெளியிடல்

### *b.* வழிகாட்டுநர் தேர்வு செயல்முறை (பின்னிணைப்பு IIஐ பார்க்கவும்)

வழிகாட்டுநர் தெரிவு செயல்முறை கீழ்க்காணும் இரண்டு நிலைகளில் செயல்படுத்தப்படலாம்:

i. நிலை 1: விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பிப்பவரின் பின்புல விவரங்கள், இணையவழி கற்றல் அமைப்பில் உருவாகும் சவால்களைத் தீர்ப்பதற்கு அவரது திறமையை மதிப்பிடும் தனிநிகழ்வாய்வு ஆகியன கேட்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் நிலை 2 க்குச் செல்வார்கள்.

ii. நிலை 2: தகவல் தொடர்புத் திறன், ஊக்குவிக்கும் திறன், துறைசார்ந்த அறிவு ஆகியவை நேர்காணல்/ கலந்துரையாடல் வழி மதிப்பிடப்படும். வல்லுநர் குழு நேர்காணலை நடத்தும். தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் வழிகாட்டுநர் தளத்தில் வழிகாட்டுநர்களாக சேர்க்கப்படுவார்கள்.

ஒரு குறிப்பிட்ட துறையில் புகழ்பெற்ற தொழில் வல்லுநர்கள் NCTE ஆல் NMM க்காக நேரடியாகவும் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

### *c.* வழிகாட்டுநர் திறன் வளர்ப்பு

i. வழிப்படுத்துவதைச் சிறந்த முறையில் செய்வதற்கு கருத்துகள், திறன்கள் மற்றும் தொழில்நுட்பம் பற்றிய அறிவை வளர்ப்பதனை நோக்கமாகக் கொண்ட வழிகாட்டுநர்களுக்கான பட்டறைகளை வடிவமைத்தல் வேண்டும். எ.கா. எளிதாக்கத் துணைநிற்கும் திறன் வாய்ப்புகள், இரகசிய தகவல்களைக் கண்டறியும் விதமான வினாக்கள் எழுப்புதல், வழிகாட்டுநர் குழுவிற்குள் ஒரு பண்பாட்டினை உருவாக்குதல் போன்றவை.

ii. வழிப்படுத்துதல் கலந்துரையாடல்கள் தொடங்குவதற்கு முன் ஆதாரமான படக்காட்சிகள், திட்டமிட்ட செயல்பாடுகள் ஆகியவற்றின் வழியே துறைபோகிய வல்லுநர்களைக் கொண்டு ஆற்றல் வளர்ப்பு, ஆற்றுப்படுத்தல் பயிற்சி அளிப்பதற்கான பயிலரங்குகள் தொடங்குதல் வேண்டும்.

### *d.* வழிகாட்டுநராகச் சேர்ந்துகொள்வதற்கான செயல்முறை

i. வழிப்படுத்துதல் தளத்தில் (NMM தளம்/ அலைபேசிச் செயலி) வழிகாட்டுநர்களைச் சேர்ப்பதற்கான வழிகாட்டுநெறிமுறைகளைத் தயாரித்து அவர்களுடன் பகிர்ந்துகொள்ளுதல்.

ii. வழிகாட்டுநர்கள் தங்கள் சுயவிவரங்களை உருவாக்கி தேவைப்படும் தகவல்களை வழங்குவார்கள்.

### *e.* வழிப்படுநர் சேர்ந்துகொள்வதற்கான செயல்முறை

i. வழிப்படுத்துதல் தளத்தில் வழிப்படுநர்கள் சேர்ந்துக்கொள்வதற்கான வழிகாட்டுநெறிமுறைகளைத் தயாரித்து அவர்களுடன் பகிர்ந்து கொள்ளுதல்.

ii. வழிப்படுநர்களைச் சேர்க்கும் செயல்முறையைக் கண்காணிப்பதற்கென ஆவணங்களைப் பராமரித்தல்.

### *f.* வழிப்படுத்துதல் கலந்துரையாடல்கள் (ஒன்றிணைந்து செயல்புரிதல்)

i. வழிகாட்டுநர்கள் இக்களத்தில் குழு வழிப்படுத்துதல் அமர்வுகளைத் திட்டமிட்டு நடத்தலாம்

ii. வழிகாட்டுநர்களையும், குழு வழிப்படுத்துதல் அமர்வுகளையும் குறித்து இந்த தளத்தில் வழிப்படுநர்கள் தேடலாம். அவ்வமர்வுகளில் பங்கேற்கப் பதிவுசெய்து கொள்ளலாம்.

iii. வழிப்படுநர்கள் தங்கள் ஐய வினாக்களுடன் சம்பந்தப்பட்ட துறையின் வழிகாட்டுநர்களைத் தனித்தனியாக அணுகலாம். வழிகாட்டுநர், வழிப்படுநர் ஆகிய இருவரும் ஒருமித்து வழிப்படுத்துதல் கலந்துரையாடல்களுக்கான நேரத்தைத் திட்டமிடலாம்.

iv. வழிப்படுநர்கள் வழிகாட்டுநர்களுக்கு மதிப்பீடுகளையும் பின்னூட்டங்களையும் வழங்கலாம்

வழிப்படுத்துதலில் சேர்ந்து இடம் பெற்று இயங்குதல் அல்லது வழிப்படுத்துதல் கலந்துரையாடல்களின்போது எதிர்கொள்ளக் கூடிய தொழில்நுட்பக் கோளாறுகளைத் தீர்ப்பதில் IT குழு துணைநிற்கும்.

### *g.* கண்காணிப்பும் பகுப்பாய்வும்

i. களத்தில் வழிப்படுத்துதல் செயல்பாடுகளைக் கண்காணித்து, தேவையான மாதாந்திர காலாண்டு அறிக்கைகளை உருவாக்குதல்.


ii. வழிப்படுத்துதல் செயல்முறைத் திட்டத்தைப் பகுப்பாய்வு செய்வதற்காக அனைத்து அறிக்கைகளையும் கண்காணித்து தொகுக்கவும், அதற்கேற்ப தேவையான நடவடிக்கைகளைப் பரிந்துரைத்தல்

## 5.4 செயல்முறைத் திட்ட மதிப்பீடு

வழிப்படுத்துதல் செயல்முறைத் திட்டத்தின் தொடர் தர மேம்பாட்டிற்கான மதிப்பீட்டிற்கு பின்வருவன தேவையாகின்றன.

a. செயல்முறைத் திட்டத்தின் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான வழிமுறை
b. செயல்முறைத் திட்டத்தின் எதிர்பார்க்கப்படும் வெளிப்பாடுகளை அளவிடுவதற்கான செயல் முறை
c. செயல்முறைத் திட்டத்தின் பரவல், முடிவுகள், மதிப்பீடு குறித்த விரிவான அறிக்கை.

செயல்முறைத் திட்டத்தின் வெற்றியை மூன்று அளவீடுகள் மூலம் மதிப்பிட முடியும்.




படம் 5.2 வழிப்படுத்துதலுக்கான மதிப்பீட்டு அளவீடுகள்

a. **அணுகல்:** வழிப்படுத்துதல் செயல்முறைத் திட்டம் பயன்பட வேண்டுமென தேவைப்பட்ட அனைத்து பங்குள்ளோர்களையும் உள்ளடக்கிச் செயல்படுகிறதா?

திட்டத்தினை மதிப்பிடும்போது அதன் அணுகல்தன்மையைக் கருத்தில்கொள்வது மிகவும் முக்கிய அம்சமாகும் குறிப்பிட்ட தரநிலையில் உள்ள உறுப்பினர்கள் அனைவரும் வழிப்படுத்துதலைப் பயன் படுத்துவதற்கான வாய்ப்பைப் பெற உரிமை வேண்டும். ஏனெனில் விரிவான வழக்கமான தொழில் முறை மேம்பாட்டில் ஈடுபடுவதற்கான வாய்ப்பை இது வழங்குகிறது. இதன் அடிப்படையில், பங்குள் ளோர்களின் தரவுத்தளங்களில் உள்ள தரவுகளைக் கொண்டு இந்த அறிவிப்புக் குறியை மதிப்பிட முடி யும். பன்முக சூழல்களைக் கொண்ட நாட்டில் திட்டம் வெற்றியடைய அனைத்தையும் உள்ளடக்குதல், பன்முகத்தன்மை, தேவைக்கேற்ப விரிவாக்கும் தன்மை, மொழி, அணுகல்தன்மை முதலான முக்கிய மான கூறுகளையும் உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.

இந்தத் திட்டம், பங்குள்ளோர்களுக்கு வழிப்படுத்துதலை இன்றியமையாதாகவோ சரியான வாய்ப்பா கவோ ஆக்கும்போது, வழிப்படுத்தலிலிருந்து பலன் பெறுகின்ற பங்குள்ளோர்தான் இதை அதிகமாக அணுக் கூடியவர்களாக உள்ளனரா? என்ற கேள்வியை எழுப்புவது முக்கியமானதாகிறது. இதற்கு வழிப் படுத்துதல் செயல்முறைத் திட்டமானது விதியமைப்பையும் தெரிவையும் அடிப்படையாகக் கொண்ட கலவையாக இருக்க வேண்டியுள்ளது. எந்தவொரு அமைப்பிலும் புதிய நடைமுறைகளை இணைத்துக் கொண்டு செயல்படுவது சவாலானது. மேலும், கிடைக்கும் வாய்ப்புகள் மற்றும் உட்புகுதல் உரிமை ஆகியவற்றை அளவிட்டு உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளைத் தேவைக்கேற்ப செய்தல் வேண்டும்.

b. **மனநிறைவு:** வழிகாட்டுநர்கள், வழிப்படுநர்கள் அவரவரின் பள்ளிகள்/ நிறுவனங்கள் இத்திட்டத்தின் வாயிலாக எப்படி மனநிறைவு அடைந்துள்ளனர்?

வழிப்படுத்துதலில் ஒன்றிணைந்து செயல்புரியும் தொடர்புகளின் தரத்தில் இந்த அளவீடு கவனம் செலுத்துகிறது. திட்டம் தொடருவதற்கும் நாடப்படுவதற்கும், பங்குபெறும் அனைத்து பங்குள்ளோர்களின் மனநிறைவையும் உறுதி செய்வது அவசியம். வழிகாட்டுநர்கள் மற்றும் வழிப்படுநர்களின் மனநிறைவிற்காக, அவர்களின் தொழில்முறை வாழ்வுக்கு இந்தத் திட்டம் சேர்க்கும் மதிப்பும் அவர்கள் செலவிட்ட நேரத்தால் பெற்ற பயன் ஆகியவற்றைப் பற்றி அவ்வப்போது ஆய்வுசெய்து அளவிடலாம். பங்குள்ளோர்களின் மனநிறைவினைப் பின்வரும் இரு தனிவழிகளில் அளவிடலாம்

i. எளிதாக்கப்பட்ட தொடர்புகளின் தரம் - இது வழிப்படுத்துதல் உரையாடல் கட்டமைப்பில் வழிகாட்டுநர்களும் வழிப்படுநர்களும் மகிழ்வோடு ஈடுபடுவதற்கும், இந்த செயல்பாடுகளில் செலவிடும் நேரத்தை அதிகரிக்க இரு தரப்பிலிருந்தும் போதுமான ஈடுபாடு இருப்பதையும் உறுதிசெய்வதாகும்.

ii. ஒன்றிணைந்து செயல்புரியும் தொடர்புகளின் மூலம் வழங்கப்படும் உள்ளடக்கத்தின் தரம் - இந்த இடைவினைகளின் போது வழங்கப்படும் பொருண்மைகள் பங்குள்ளோர்களின் தொழில்முறை வாழ்வுக்கு மதிப்பு சேர்க்கிறது. பங்குள்ளோர்கள் தங்களுடைய தற்போதைய அறிவுத் தளத்துடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வதற்குப் போதுமான அளவு தெரிந்திருக்க வேண்டும். இருந்த போதிலும், அவர்களின் சிந்தனையைப் புதிய திசையில் திருப்பும் அளவிற்கு இது சவாலானது.

*c.* ***தாக்கம்:*** பள்ளி/ நிறுவனத்தில் இத்திட்டத்தினால் ஏற்படும் தாக்கம் என்ன?

இந்த அளகோலின்வழி வழிப்படுத்துதல் அமைப்பின் தாக்கத்தை மதிப்பிடுவது கடினமாகும். வழிப்படுத்துதல் செயல்முறைத் திட்டத்தின் நோக்கத்தைப் பொருத்து, மாணவர்களுக்கு பள்ளி கலாச்சாரத்திலும் ஏற்பட்டுள்ள மாற்றங்களின் தாக்கத்தை மதிப்பீடு செய்ய வேண்டியிருக்கலாம். இது ஒரு நீண்ட கால அளவீடு ஆகும். திட்டத்தின் தொடக்கக் கட்டங்களில் இது இயலாதது என்றாலும், அன்றாட நடைமுறைகளில் ஏற்படும் தாக்கம் குறித்து பெறப்படும் பின்னூட்டத்தின் வாயிலாக திட்டத்தில் மாற்றங்களைக் கொண்டுவந்து சரியான பாதையில் தொடர்ந்து பயணித்து இலக்குகளை அடைய முடியும்.

நீண்ட காலத்தில் செயல்முறைத் திட்டத்தின் வெற்றியும், அந்த வெற்றியுடன் அதைத் தொடரும் முடிவுகளும், அந்தத் திட்டத்தின் தாக்கத்தை அடிப்படையாகக்கொண்டு அமைதல் வேண்டும். இத்திட்டத்தில் ஒரு குறிப்பிட்ட காலத்தைச் செலவிடப்பட்ட பிறகு மட்டுமே இதை அளவிட முடியும். என்றாலும், இது திட்ட வெற்றியின் மிக முக்கியமான அறிவிப்புக் குறியாகும். பள்ளி மேம்பாடு, புதிய பணி சூழலுக்கு மாறும் ஆயத்தநிலை, மேம்பட்ட கற்றல் விளைபயன்கள் முதலான தாக்கங்களைச் சரியான வெற்றிக் குறிகாட்டிகளைப் பயன்படுத்தி அளவீடு செய்யப்பட வேண்டும் இது திட்டத்தில் போதுமான மாறுதலை ஏற்படுத்தும். சில சான்றுகள்:

*அட்டவணை 5.2: குறிக்கோளும் தாக்க அறிவிப்புக் குறியும்*

| **வழிப்படுத்துதல் செயல்முறைத் திட்டத்தின் குறிக்கோள்** | **பயன்கொள்ளத்தக்க தாக்க அறிவிப்புக் குறிகள்** |
|---|---|
| பணியாளர் தொகுதிக்குள் பணி – முந்திய ஆசிரியர்கள் மாறிச் செல்வதை எளிதாக்கிட ஏற்கனவே பணியிலுள்ள ஆசிரியர்கள் மூலமாக வழிப்படுத்தப்படுவார்கள் | *a.* அவர்கள் பணிக்குழுவில் சேரும்போது ஆசிரியர்களின் மனநிறைவு விழுக்காடு உயரும்<br>*b.* புதிய ஆசிரியர்களின் மாணவர்களின் கற்றல் விளைபயன்கள் விழுக்காடு அதிகரிக்கும்<br>*c.* புதிய ஆசிரியர்களின் மாணவர்களின் மனநிறைவு விழுக்காடு உயரும்<br>*d.* பணியில் உள்ள ஆசிரியர்-வழிகாட்டுநர்களுக்கான செயல்திறன் அறிவிப்புக் குறிகள் விழுக்காடு உயரும் |

| | |
|---|---|
| அடிப்படை எழுத்தறிவு எண்ணறிவு ஆகியவற்றில் மாணவர்களின் கற்றல் பயன்களை மேம்படுத்த, ஆசிரியர்கள் ஒருங்கிணைந்த ஒப்பார் (தோழமை) வழிப்படுத்துதல் வட்டங்களை உருவாக்குதல். | a. எழுத்தறிவு எண்ணறிவு அடித்தள மதிப்பீடுகளில் மாணவர் செயல்திறன் விழுக்காடு உயருதல்.<br>b. தொடர்புடைய கற்றல் - கற்பித்தல் பொருட்களைக் கொண்டு வகுப்பறை கண்காணிப்புகளில் ஈடுபடும்போது அதன் செயல்திறன் விழுக்காடு உயரும்.<br>c. ஆசிரியரின் சமுதாய உணர்வும் மனநிறைவு விழுக்காடும் உயர்தல். |

SDG-4 (தரமான கல்வி)னால் தூண்டப்பட்டாலும் SDG செயல்பாட்டின் காலவரிசைக்கு NMM கட்டுப்படுத்தப் படவில்லை. குறிப்பிட்ட அமைப்பிற்குள் தொடர்ச்சியான செயல்முறைகளை உருவாக்கும் நோக்கத்துடன் வழிப்படுத்துதலுக்கான இந்தப் பணி அறிமுகப்படுத்தப்படுகிறது. மேலே பட்டியலிடப்பட்டுள்ள தாக்க அறிவிப்புக் குறிகள் இந்தச் செயல்முறைத் திட்டத்தின் குறிக்கோள்களிலும் இலக்குகளிலும் உரிய நேரத்தில் மாற்றங்களை மேற்கொள்வதற்கு உதவியாக அமையும்.

நேர்ப்பட்ட, எதிர்மறையல்லாத மாற்றத்தை உண்டாக்க வலுசேர்க்கும் முயற்சியில், நல்வாய்ப்பு ஆக்கமிக்க தாக்கத்திற்கு வழிவகுக்கும் பங்களிப்பாளர்கள் அனைவரின் பணிகளுக்கும் உரிய மதிப்பும் ஊக்கமும் அளிக் கப்பட வேண்டும். இது வழிப்படுத்துதல் செயல்முறைத் திட்டத்தால் ஏற்படும் மாற்றம் மற்றும் நல்வாய்ப்பு ஆக்கமிக்க தாக்கத்தின் மீதும் இதனோடு கூடிய கூடுதல் பயன் மீதும், தொடர்ந்து கவனம் செலுத்துவதை உறுதி செய்யும். இந்தியக் கல்வியில் ஆக்கமிக்க மாற்றங்களைக் கொண்டுவருவதற்கு வழிப்படுத்துதல் செயல்முறைத் திட்டம் அதன் திறனைக் கொண்டு மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

## 5.5 நிறுவனமயமாக்கல்

நிறுவனமயமாக்கம், குழுமயமாக்கம், தனிப்பட்ட தொழில்முறை இலக்குகள் ஆகியவற்றை அடைய சிறந்த வழி வழிப்படுத்துதல் ஆகும். அமைப்பின் கூட்டு மதிப்பு வழங்கலை மேம்படுத்துவதற்கு தற்போதுள்ள சூழல் அமைப்பில் உள்ள வளங்களை இது பயன்படுத்துகிறது. கல்வி முறையின் அனைத்து மட்டங்களிலும் இன்றியமையாத செயல்பாடாக இது கருதப்படவேண்டும். இந்த இன்றியமையாத செயல்பாடு அனைத்து பங்குள்ளோர்களுக்கும் தினசரி நடைமுறைகளில் நிலையாக இணைக்கப்பட்ட ஒரு தொடர் செயல்முறை யாக இருக்க வேண்டும்.

வழிப்படுத்துதல் திட்டம் அதன் பயனாளர்களிடையேயான தோழமை உணர்வு காரணமாக ஆரம்பத்தில் பங்குள்ளோர்களுக்கு மிகுந்த மனநிறைவினை அளித்திருக்கலாம். இருப்பினும், வழிப்படுத்துதல் திட்டத்தை செயல்படுத்த, வழிகாட்டுநருக்கும், வழிப்படுநருக்கும் நிருவாகத்திற்கும் போதிய நேரமும் முயற்சியும் தேவை. ஆகவே. அத்தகைய திட்டம் தொடர, வழிப்படுத்துதல் செயல்முறைத் திட்டம் நிறுவனமயமாக்கப் பட வேண்டியது அவசியமாகிறது.

நிறுவனமயமாக்கல் என்பது ஒரு நிறுவனம் அல்லது பண்பாட்டில் குறிப்பிட்ட மரபு அல்லது விதிமுறையை நிறுவும் செயல் ஆகும். வழிப்படுத்துதல் திட்டத்தில் உள்ள அனைத்துக் கட்டமைப்புகளும் நிறுவனமய மாக்க வழிமுறைகளுடனும் பயன்களுடனும் இணைக்கப்பட வேண்டும். அதன் பயனாக நிலையானதா கவும் குறிக்கத்தக்க அளவுகளிலும் செயல்பட முடியும். வெற்றிகரமான நிறுவனமய வழிப்படுத்துதலுக்கு இரண்டு வழிகள் உள்ளன.

## 5.6 ஊக்குவித்தல்

இந்தக் கல்வி அமைப்பின் தற்போதைய கட்டமைப்பில் வழிகாட்டுநர்கள், வழிப்படுநர்கள், அவர்களுடன் இணைந்துள்ள நிறுவனங்கள் தழைத்தோங்குவதற்கு உதவும் விதத்தில் பங்கேற்பதற்கான நிதிசாரா ஊக்கு வித்தல்களை இந்தத் திட்டம் பயன்படுத்துகிறது.

வழிகாட்டுநர்கள் அல்லது வழிப்படுநர்களை எவ்வாறு ஊக்குவிக்கலாம் என்பதற்கான சில சான்றுகள் இங்கே உள்ளன:

அட்டவணை 5.3.: ஊக்குவித்தல் வகைகள்

| சான்று எண். | ஊக்குவித்தல் வகை | விளக்கம் |
|---|---|---|
| சான்று 1 | வழிகாட்டுநர்களை முதன்மைப் படுத்துதல் | a. சிறந்த செயல்திறன் கொண்ட வழிகாட்டுநர்களுக்கு ஒரு புகழ்வாய்ந்த நிறுவனத்தில் சிறப்பு தலைமைத்துவ மேம்பாட்டு கல்வியை கற்பதற்கான வாய்ப்பு.<br>b. ஆசிரியர்களுக்கான தேசிய தொழில்முறை (NPST) தரநிலைகளுடன் NMMயை இணைத்தல். |
| சான்று 2 | சிறந்த செயல்திறன் கொண்ட வழிகாட்டுநர்களை அங்கீகரித்தல் | a. பாராட்டுச் சான்றிதழ்கள்<br>b. தனித்துவப்படுத்தல், சான்றாக, சிறப்பாக செயல்படும் வழிகாட்டுநர்களின் கதைகளை இணையதளத்தில் இடம்பெறுச் செய்வது, போன்றவை.<br>c. NMM பற்றிய ஆண்டிறுதிக் கருத்தரங்கில் சிறந்த நடைமுறைகளை வெளிப்படுத்தும் வாய்ப்பு |

வழிப்படுநர்களின் சிறந்த செயல்திறன்களை அங்கீகரித்து பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படும்.

## 5.7 வழிப்படுத்துதல் திட்டத்துக்கு சவால்கள்

வழிப்படுத்துதல் செயல்முறைத் திட்டம் பலவேறு தடைகளைக் கொண்டது. வழிப்படுத்துதல் திட்டத்தை வடிவமைத்து செயல்படுத்துவதில் அதன் தனிப்பட்ட சவால்களே நிறைய உள்ளன. எனினும், நாம் விழிப் போடு இருந்தால், இந்தச் சவால்களை எளிய வழிகளில் எதிர்கொள்ள முடியும்.

### 5.7.1 பொருந்தாத எதிர்பார்ப்புகள்

எந்தவொரு வழிப்படுத்தல் கட்டமைப்பிலும் இன்றியமையாத கூறு எதிர்பார்ப்புகளையும் இலக்குகளையும் தெளிவாக அமைத்தலாகும். பங்குள்ளோர் அனைவரின் ஒருங்கிணைந்த ஈடுபாட்டுடன் இதை அடையலாம். வழிகாட்டுநர் அல்லது வழிப்படுநர் ஆகியோர் வழிப்படுத்துதல் வரம்பிற்குள் என்ன செய்து முடிக்க விரும்பு கிறார்கள் என்பது பற்றி தெளிவாக இல்லாதபோது, இலக்குகளை அமைப்பதும் எதிர்பார்ப்புகளைச் சீரமைப் பதும் சவாலாக மாறும்.

இந்தத் தடையை முற்றிலுமாகத் தவிர்க்க, வழிப்படுத்துதல் செயல்முறைத் திட்டம் முழுவதும் எதிர்பார்ப்பு களைத் தொடர்ந்து தெரிவிப்பது அவசியமாகிறது. அனைவரும் ஒருங்கிணைந்து செயல்படுவதை உறுதி செய்ய நேரடி சோதனைகளில் ஈடுபட வேண்டும்.

### 5.7.2 வழிப்படுநர்கள் விலகல்

வழிப்படுநர்கள் வழிப்படுத்துதல் திட்டங்களில் பங்கேற்பதும் அவற்றைப் பயன்படுத்திக்கொள்வதும் முக்கி யம் என்றாலும், இந்த இணைப்பில் நிலைத்து இருக்க அவர்களை ஊக்குவிப்பதும் முக்கியம். வழிப்படுநர் விலகுதற்கு பல அடிப்படைக் காரணங்கள் இருக்கலாம். எனினும், இது வழிகாட்டுநர்- வழிப்படுநர் ஆகியோ ரின் ஈடுபாட்டுத் தரத்தைப் பாதிக்கிறது. வெவ்வேறு பங்கேற்பாளர்கள் எடுக்கும் முயற்சிகளைப் புறக்கணிக் கிறது. விலகிய வழிப்படுநர்கள் இந்த வழிப்படுத்தல் திட்டத்தால் அதிகபட்ச பலன்களைப் பெற வழிகாட்டு நரால் ஊக்கப்படுத்தப்பட வேண்டும்.

### 5.7.3 வழிகாட்டுநர்களிடம் ஊக்கமின்மை

திட்டத்திற்கான சரியான எண்ணிக்கையில் வழிகாட்டுநர்களைத் தேர்ந்தெடுப்பது மிகவும் பொதுவான சவா லாகும். அந்த சவால் முக்கியமானது என்றாலும், வழிகாட்டுநர்களின் ஊக்கமும் தனித்துறை நிபுணத்துவமும் அதேபோன்று முக்கியமானவை. ஊக்கமின்மை, வழிகாட்டுநர்களுக்கு குறைந்த ஈடுபாட்டுணர்வையும் செயலற்ற தன்மையினையும் ஏற்படுத்தும். இது வழிப்படுத்தல் முறையின் தோல்விக்கும் வழிப்படுநர் களுக்கு மோசமான பயன்களுக்கும் வழிவகுக்கும்.

எனவே, திட்டத்தின் தொடக்கத்தில் பொருத்தமான வழிகாட்டுநர்களைத் தேர்ந்தெடுப்பது முக்கியமானது. இதனுடன், வழிகாட்டுநர்களுக்கு முறையான பயிற்சியை வழங்குவதும், திட்டம் முழுவதும் அவர்களுடன் தொடர்பில் இருப்பதும் முக்கியமானதாகிறது.

### 5.7.4 கூடுதலான அல்லது போதிய கட்டமைப்பின்மை

வழிப்படுநர்களின் தனிப்பட்ட தேவைகளை அங்கீகரிப்பது முக்கியம். சில வழிகாட்டுநர்களும் வழிப்படுநர்களும் பலவிதமான கருவிகளையும் வளங்களையும் அணுகுதற்கு விருப்பத்துடன் இருக்கலாம். அதே சமயம் வேறுசிலர் அவற்றைப் பயன்படுத்தக் கட்டாயப்படுத்தும்போது அழுத்தத்தையும் உணரலாம். வழிகாட்டுநர்/ வழிப்படுநர் தங்களின் தேவைகளுக்கும் வசதிக்குமேற்ப வளங்களை அணுகும் வகையில் செயல்முறைத் திட்டத்தின் வடிவமைப்பைச் சமநிலைப்படுத்துவதற்கான வழியைக் கண்டுபிடிப்பது முக்கியமானது.

### 5.7.5 புறக்கணிக்கப்பட்ட சோதனை முறைகள்

வழிப்படுத்துதல் திட்டத்தின் தெளிவான சோதனை முறைகள், வழிகாட்டுநருக்கும் வழிப்படுநருக்கும் திட்டத்தின் தொடக்கம் முதல் முடிவு வரை நன்கு வரையறுக்கப்பட்ட வழிகாட்டலை வழங்குகின்றன. இது வழிகாட்டுநர், வழிப்படுநர் ஆகிய இருவருக்கும் மனநிறைவை அளிக்கிறது. எடுத்துக்காட்டாக, வழிப்படுத்துதல் உறவில் ஒரு இணக்கமான சூழல் இல்லையெனில் வழிகாட்டுநரும் வழிப்படுநரும் திருப்தியின்றி பின்னர் விலக நேரிடலாம். அதன் காரணமாக, கற்றலை எவ்வாறு முன்னெடுத்துச் செல்வது என்று தெரியாமல் குழப்பமும் உறுதியற்ற தன்மையும் ஏற்படலாம்.

### 5.7.6 வழிப்படுத்துதல் குறித்த தவறான கருத்துருக்கள்

வழிப்படுத்துதல் குறித்த சில தவறான கருத்துருக்கள் தடைகளை உருவாக்கலாம். வழிப்படுத்துதல்பற்றி பரப்பப்பட்ட வெற்றுப் புனைவுகள் தடைகளை ஏற்படுத்தி, பங்கேற்பாளர்கள் அனுபவம் வாயிலாக சிறப்பாகப் பெறுவதையும் அடைய முடியாமல் சோர்வடையச் செய்யலாம். பொதுவாகக் கூறப்படும் வெற்றுப் புனைவுகள் பின்வருவனவற்றுள் அடங்கும்:

- "வழிப்படுத்துதல் என்பது அதிக நேரத்தை எடுத்துக்கொள்ளும் செயலாகும்"
- "தனிப்பட்ட வாழ்க்கை அல்லது தொழிலுக்கு வழிப்படுத்துதல் முறையினால் பயன் இல்லை"
- "வழிப்படுத்தலினால் பலன் பெறுவது வழிப்படுநர்கள் மட்டுமே, வழிகாட்டுநருக்கு அதனால் பலன் இல்லை"

வரையறுக்கப்பட்ட பங்கேற்புகள், பொறுப்புகள் விளைவுகள் முதலானவை குறித்து திட்டத்தின் தொடக்கத்தில் தெளிவான எதிர்பார்ப்புகளை அமைப்பது தவறான புரிதல்களைப் புறந்தள்ள உதவுகிறது. சரியான திட்டமிடலும் ஆதரவும் இருப்பின் வழிப்படுத்துதல் திட்டம் நீண்ட காலத்திற்கு தொடர்ந்து நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தலாம். திட்டம் வேகம் அடைந்தவுடன், வழிப்படுத்துதல் பண்பாடு புகுத்தப்படுகிறது. முறைசாரா வழிப்படுத்துதல் பெரும்பாலும் முறையான திட்டங்களுடன் செழித்து வளருகிறது.

### 5.7.7 அணுக இயலாத வழிப்படுத்துதல்


எந்தவொரு வழிப்படுத்துதல் அமைப்பும் வழிப்படுத்துதல் தொடர்புகளுக்கான அணுகல்களைக் கருத்தில் கொண்டு வடிவமைக்கப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக, பள்ளிக்குள் வழிப்படுத்தலை நிகழ்த்தும்போது நேரடியாக குறிப்பிட்ட இடைவெளிகளில் நிகழ்த்தலாம், இதனால் அனைத்து வழிகாட்டுநர்களும் வழிப்படுநர்களும் எளிதாக பங்குபெற முடியும். இருப்பினும், நாடு தழுவிய வழிப்படுத்துதல் திட்டத்தின் நோக்கங்களைப் பூர்த்தி செய்ய தொழில்நுட்பத் தளம் போன்ற பெரிய உள்கட்டமைப்பு தேவைப்படலாம். செயல்முறைகளையும் வழிமுறைகளையும் வடிவமைக்கும்போது பலதரப்பட்ட அணுகுமுறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் வழிப்படுத்துதலை எளிதில் அணுகக்கூடியதாக மாற்றலாம்.

## 5.8 குறை தீர்க்கும் செயல்முறைமை

NMM தொடர்பான குறைகளை அதிக வெளிப்படைத்தன்மையுடன் நிருவகிப்பதற்கும், நிவர்த்தி செய்வதற்கும் NCTE ஆல் குறை தீர்க்கும் குழு அமைக்கப்படும். வழிகாட்டுநர்/வழிப்படுநர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளில் தலையிட்டு முறையாகத் தீர்ப்பதற்கு இது உதவும். வழிகாட்டுநர்/வழிப்படுநர்களின் ஆலோசனைகளையும் கவலைகளையும் பகிர்ந்து கொள்ளவும் அவர்களின் தேவைகளுக்கு பொறுப்பாக பதிலளிக்கக் கூடிய வகையிலும் வழிப்படுத்தல் அமைப்பை உருவாக்குவதற்கும் இது வாய்ப்பை வழங்கும்.

# இயல் VI

# தேசிய வழிப்படுத்துதல் உள்கட்டமைப்பு



# இயல்-VI: தேசிய வழிப்படுத்துதல் உள்கட்டமைப்பு


## 6.1 அறிமுகம்

வழிப்படுத்துதலைப் பரந்த அளவில் வெற்றிகரமாக செயல்படுத்துவதை NMM நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தத் தொழில்நுட்பத்தைச் செயல்படுத்துவது அதன் முன்னேற்றத்திற்கு முக்கியமானது. தேசிய வழிப்படுத்துதல் உள்கட்டமைப்பு (NMI - National Mentoring Infrastructure) என்பது ஒன்றுடன் ஒன்று இணைத்து அமைப்பதற்கான NDEAR கட்டமைப்பிற்கேற்ற வெளிப்படை/திறவூற்றுப் பிரிவுத்தொகுதிகளாகும். இவை விரிவாக்க முடிந்தவையாகவும் உறுதியானவையாகவும் உருவாக்கப்பட்டுள்ளன. வழிப்படுத்தலுக்கானத் தீர்வுகள் அல்லது அமைப்புகளை வழங்குவதற்கு தற்போது வரையறுக்கப்பட்ட வெளிப்படையான மரபு வரிசைமுறைகள் இல்லாததால், இணைப்பற்ற, கூறுப்படுத்தப்பட்ட வழிப்படுத்துதல் தீர்வுகள் பல உள்ளன. வழிகாட்டுநர்களைக் கண்டடைய வழிப்படுநர்கள் பல்வேறு தீர்வுகள் அல்லது வழிமுறைகளைப் பயன்படுத்துகின்றனர். Beckn DSEP நெறிமுறையில் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த வழிப்படுத்துதல் தொடர்புகளை (UMI) வரையறுத்து செயல்படுத்துவதன் மூலம் இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்வதை NMI நோக்கமாகக் கொண்டுள்ளது. UMI ஆனது பல்வேறு வழிப்படுத்துதல் சேவைகள், தீர்வுகளின் இடை இயங்குதன்மை செயல்படுத்துவதற்கு உதவுதலை நோக்கமாகக் கொண்டுள்ளது, திறந்த நெறிமுறைகள்/விவரக் குறிப்புகள், ஒருங்கிணைப்புகள் ஆகியன மூலம் பல்வேறு சேவைகளில் வழிகாட்டுநர்களையும் வழிப்படுத்துதல் செயல்முறைத் திட்டங்களையும் கண்டறிதலை வெளிப்படுத்துகிறது. புதுமை, பன்முகத்தன்மை, சூழல்மயமாக்கம் ஆகியவற்றைக் கொண்டுவருவதற்கு சூழல் அமைப்பை உற்சாகப்படுத்துவது அவசியம். பல்வேறு சூழல்களில் பங்குள்ளோர்கள் தீர்வுகளை உருவாக்கி அவற்றைப் பயன்படுத்தலாம். வழிப்படுத்துதலுக்காக அவர்களின் தீர்வுகள் / சேவைகளை நீட்டிக்கலாம். UMI ஆனது ஒருங்கிணைந்த வழிப்படுத்துதல் இணைப்புகளை (UMN) உருவாக்க உதவுகிறது.

வழிகாட்டுநர்களுக்கும் வழிப்படுநர்களுக்கும் ஏற்படும் மாறுபட்ட சூழல்களில் வழிப்படுத்துதல் சேவைகளையும் தீர்வுகளையும் அவர்கள் எளிதாக ஏற்றுக்கொள்வதை உறுதி செய்வதை NMI நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த சிறப்பியல்புகள் அதன் கொள்கைகளும் தொழில்நுட்ப கூறுகளும் உட்பட வடிவமைப்பின் ஒவ்வொரு கட்டத்திலும் வலுப்படுத்தப்படுகின்றன.

## 6.2 வடிவமைப்புக் கொள்கைகள்

இந்தப் பிரிவு, NMI இன் கணினிமய உள்கட்டமைப்பு அம்சங்களில் கவனம் செலுத்துகிறது. மேலும், அடிப்படை வடிவமைப்புக் கோட்பாடுகள் மற்றும் சிறந்த நடைமுறைகளைக் கோடிட்டுக் காட்டுகிறது.




படம் 6.1: தேசிய வழிப்படுத்துதல் உள்கட்டமைப்பின் வடிவமைப்புக் கொள்கைகள்

a. **நுண்சேவை கட்டுமானம்:** அளவு, பன்முகத் தன்மை ஆகிய சிக்கல்களைத் தீர்க்க தேவைக்கேற்ப சிறு பிரிவுத்தொகுதிச் சேவைகளை ஒன்று சேர்த்துக் கட்டலாம் அல்லது கட்டப்பட்டுள்ளவற்றைப் பிரித்துக் கொள்ளலாம். இந்த நுண்சேவைகள் மேலோட்டமாக இணைப்பட்டிருப்பது மாறிவரும் தேவைகளுக்கும் சூழலுக்கும் ஏற்ப இதன் செயல்பாட்டை மாற்றிக்கொள்ள உதவுகிறது.

b. **நம்பிக்கையும் பாதுகாப்பும்:** பாதுகாப்பையும் தனியுரிமையையும் நிருவகிப்பது முக்கியம். இது வடிவமைப்பின் முக்கிய பகுதியாகும். உள்கட்டமைப்பு, தரவு செயலாக்கத்தை வழங்க வடிவமைக்கப்படுகிறது. அதன் பயனர்களுக்கு தரவுப் பாதுகாப்பும் தனியுரிமையையும் உறுதி செய்தலையும் உறுதி செய்கிறது.

c. **வெளிப்படையான தரநிலைகள்:** பல்வேறு செயல்பாடுகளில் துணையாக இருப்பதை உறுதிப்படுத்த வெளிப்படையான தரநிலைகள், இடை இயங்குதன்மை ஆகியவை உள்கட்டமைப்பின் வடிவமைப்பிற்கு இன்றியமையாதவையாகும். NMI ஆனது திறந்த நெறிமுறைகள் மற்றும் APIகளைப் பயன்படுத்தி கட்டமைக்கப்பட்டுள்ளது, அவை குறிப்பிட்ட இயங்குதளங்கள், பிணைய தொழில்நுட்பங்கள் மற்றும் மொழிகளுடன் தொடர்பு இல்லாமல் இடைஇயங்கு தன்மைகளை உறுதி செய்கின்றன. இதற்கு இடை இயங்குதலை வழங்குவதும் தரநிலைகள் அடிப்படையாகும். எனவே, திறந்தநிலை APIக்கள், பன்முகத் தொழில்நுட்பங்களில் ஒன்றிணைந்து செயல்பட, கட்டமைக்கப்பட்ட பலதரப்பட்ட வழிப்படுத்துதல் தீர்வுகளுக்கு துணைநிற்கும்.

d. **விரிவாக்கக்கூடியது, மீள்தன்மையுடையது:** இந்தச் சூழலியல் அமைப்பில் அதிக எண்ணிக்கையிலான பயனர்களை அளவிட முடியும். அதற்கு தரநிலைப்படுத்தல் மற்றும் கிடைமட்ட அளவீடு மூலம் செயல்பாடுகளின் அளவிட முடியும் தன்மை உறுதி செய்யப்படும்.

e. **கண்காணிக்கக்கூடிய தன்மை:** உள்கட்டமைப்பில் வழிப்படுத்துதல் தொடர்புகளின்போது பரிமாறப்படும் மதிப்புவாய்ந்த தகவல்கள் தொலைப்பதிவு மூலம் பதிவுசெய்யப்பட்டு கண்காணிக்கப்படும். இது வழிகாட்டுநர் / வழிப்படுநர் ஆகியோரிடையே நிகழும் அனைத்து நிகழ்வுகளையும் பதிவுசெய்து அவற்றைப் பயன்பாட்டுக்கும் பகுப்பாய்வுகளுக்கும் கிடைக்கும்படி வடிவமைக்கப்பட்டுள்ளது.

f. **நம்பகமான தளம்:** இந்த உள்கட்டமைப்பு வழிகாட்டுநர் – வழிப்படுநர் ஆகியோரிடையே உள்ளார்ந்த, நோக்கமுள்ள வழிப்படுத்துதல் அனுபவங்களை எளிதாக்குவதற்கு நம்பகமான தளமாக இருப்பதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. நம்பகமான பதிவேடுகளைப் பயன்படுத்துதல் வழிகாட்டுநர்களைக் கவனமாகச் சேர்ப்பது ஆகியவற்றின் வாயிலாக அங்கீகரிக்கப்பட்ட, சரிபார்க்கப்பட்ட வழிகாட்டுநர்களைத் தளத்தில் பங்கேற்கச் செய்வதனை இது உறுதி செய்கிறது.

g. **பகிர்ந்தளித்தலும் பரவலாக்கலும்:** பிணைப்பின் ஒரு பகுதியாக நம்பகமான நிறுவனங்கள்/தரவுத்தளங்களில் இருந்து பரவலாக்கப்பட்ட தரவை அணுகவும் அவற்றைப் பரிமாற்றவுமான செயல்முறைகளுக்கும் தீர்வுகளும் இந்த உள்கட்டமைப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது.

h. **தளம் சார்ந்த சிந்தனை:** இந்த உள்கட்டமைப்பு பங்குள்ளோர்கள் (தீர்வு வழங்குவோர்). அவர்களின் தீர்வுகளையும் சேவைகளையும் தேசிய அளவில் உருவாக்கவும் நீட்டிக்கவுமான சூழலுக்கு வாய்ப்பை அளிக்கிறது.

i. **ஒருங்கிணைந்தது, மாறுபட்டது:** உள்கட்டமைப்பு வெளிப்படையான தரத்தினை அடிப்படையாகக் கொண்டது, இது ஒருங்கிணைந்து பணியாற்றுவதை எளிதாக்குகிறது. ஒன்றிணைந்து பணியாற்ற மாறுபட்ட தீர்வுகளுக்கு வழிவகுக்குகிறது.

j. **சூழலிய செயல்முறை:** UMI ஆனது திரட்டப்பட்டுள்ள தரவுகளைப் பயன்படுத்தி ஒருங்கிணைந்துப் பணியாற்ற வழிப்படுத்துதல் தீர்வுகள் மற்றும் செயல் முறைகளில் சூழல் அமைப்புக்கு வசதி செய்கிறது. பயனர்கள் ஒற்றைச் சாளர முறையில் அணுகுவதற்கு இது வாய்ப்பளிக்கிறது.

k. **நீள்திறன் தன்மை:** புதிய திறன்கள்/நிறுவனங்கள் எளிதாக கூட்டமைப்பில் பங்கேற்கும் வகையில் உள்கட்டமைப்பு கட்டமைக்கப்பட்டுள்ளது. விவரக்குறிப்புடன் இணங்குவது புதிய நிறுவனங்கள் கூட்டமைப்பின் தற்போதைய திறன்களையும் நன்மைகளையும் பயன்படுத்த அனுமதிக்கும்.

*I.* **உள்ளடக்கிய வடிவமைப்பு:**

*i.* **பயனாளர் அடிப்படையில்**


பயனர்களின் சூழலையும் பல்வேறு தேவைகளையும் பூர்த்தி செய்யும் வகையில் தீர்வுகளை வடிவமைக்க உள்கட்டமைப்பு உதவுகிறது. சான்றாக, வெவ்வேறு தளங்களில் உள்ள - தொலைபேசிகள், இணையம், பல வேறு மொழிகள் போன்றவை.

*ii.* **அமைப்புகளும் செயல்முறைகளும்**

இன்றைய நடைமுறையில் உள்ள செயலிகள், தீர்வுகள் மற்றும் உள்ளடக்கம் உள்ளிட்ட பல்வேறு அமைப்பு களையும் செயல்முறைகளையும் இணைக்கவும் பயன்படுத்தவுமான வகையிலும் உள்கட்டமைப்பு வடிவம் அமைக்கப்பட்டுள்ளது.

## 6.3 வழிகாட்டுநர் – வழிப்படுநர் இணைந்த செயல்பாடுகள்


*NMI* இன் முக்கிய நோக்கங்களில் ஒன்று, வழிகாட்டுநருக்கும் வழிப்படுநருக்கும் இடையே தடையற்ற ஒரே நேரத்தில் நிகழ்கிற கால ஒத்திசைவற்ற (ஒரே நேரத்தில் நிகழாத) வழிப்படுத்துதல் இணைந்த செயல்பாடு ஆகும். அனைவரும் கண்டுபிடிக்கத்தக்கதும் நம்பிக்கைகளின் அடிப்படையிலும் அவை பின்னூட்டத்தால் இயக்கப்பட்டு இருவழித் தொடர்புகள் செயலாக்கப்படுகின்றன. தொழில்நுட்ப உள்கட்டமைப்பினை இயக் கும் 6 முக்கிய வினைச் சொற்கள் கீழ்க்கண்டவாறு.




படம் 6.2: தொழில்நுட்ப உள்கட்டமைப்பில் இயக்கும் முக்கிய வினைகள்

## 6.4 தொழில்நுட்பக் கூறுகள்

வடிவமைப்புக் கொள்கைகளுக்கு இணங்க, *NMI* அதன் பயனர்களுக்கு பன்முக வழிப்படுத்தல் தீர்வுகளைச் செயல்படுத்தும் பல்வேறு தொழில்நுட்ப கூறுகளை வழங்குகிறது.




படம் 6.3: ஒருங்கிணைந்த வழிப்படுத்துதல் பிணைப்பு - கூறு நிலை பார்வை

a. **வழிப்படுநர் இடைமுகம் (செயலி/ இணையதளம்/ பிற தீர்வுகள்):** வழிப்படுநர்கள் தங்களின் ஆர்வம், தேவைகள் முதலான அடிப்படையில் வழிகாட்டுநர்களையும் அமர்வுகளையும் கண்டறிய இந்த இடைமுகத் தொடர்பைப் பயன்படுத்தலாம். அவர்களுக்கு விருப்பமுள்ள வழிப்படுத்துதல் திட்டங்களில் சேரலாம்.

b. **வழிகாட்டுநர் இடைமுகம் (செயலி/ இணையதளம்/ பிற தீர்வுகள்):** வழிகாட்டுநர்கள் இந்த இடைமுகத் தொடர்பின்வழி தொடர்புகளை / அமர்வுகளை வழிப்படுநருடன் திட்டமிடுகின்றனர். இதன்வழி காலப்போக்கில் பல்வேறு நேர்முகத் தொடர்புகளின் ஆழ்ந்த அறிவையும் பகுப்பாய்வுகளையும் பெற முடியும்.

c. **வழிப்படுத்துதல் வகைப்பாடு:** தேசிய வழிப்படுத்துதல் வகைப்பாடு தேசிய உள்கட்டமைப்பின் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்டு பிணைக்கப்படும். இந்த வகைப்பாட்டில் வழிப்படுத்துரின் பண்புகள், வழிப்படுத்துதல் பகுதிகள், தொடர்பு ஊடகங்கள் போன்ற முக்கியமான கூறுகள் உள்ளடங்கியுள்ளன.

d. **ஒருங்கிணைந்த வழிப்படுத்துதல் இடைமுக (UMI) நுழைவாயில்:** பல்வேறு வழிப்படுத்துதல் சேவைகள்/ தீர்வுகளின் இடை இயங்குதன்மை செயல்பட UMI உதவுகிறது. இதன் மூலம் வேறுபட்ட பணிகளிடையே வழிகாட்டுநர்/ செயல்முறைத் திட்டங்களுக்கு வழி ஏற்படுகிறது. UMI ஆனது வெளிப்படையான நெறிகள் மீது அமைக்கப்பட்ட திறந்தநிலை வலை அமைப்பை உருவாக்குதன் மூலம் கற்றல்/ வழிப்படுத்தலை நெறிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது

e. **செயலி பதிவேடு:** அனைத்து அலைபேசி செயலிகள், வலைத் தளங்கள் இடைமுகத் தொடர்புகளைப் பயன்படுத்தும் பிற தீர்வுகள் இப்பதிவேட்டில் அடங்கும்.

f. **சேவைப் பதிவு:** இது உள் நுழைதலுக்கான ஒன்றிணைந்த வழிப்படுத்துதல் முறைகளின் (செயலிகள்) பதிவேட்டை உள்ளடக்கியது.

g. **வெளிப்புறப் பதிவேடு:** சூழல் அமைப்பில் சரிபார்க்கப்பட்ட வழிகாட்டுநர்களின் பரவலாக்கப்பட்ட நம்பகமான வெவ்வேறு பதிவேடுகள் (கல்வி அமைப்புகள், மாநிலத் துறைகள் மற்றும் CSOக்கள்) இதில் அடங்கும்.

h. **வழிப்படுத்துதல் சேவைகள்:** உள்கட்டமைப்பில் நுண்சேவையானது வழிகாட்டுநர்கள் அமர்வுகளைத் திட்டமிட உதவுகிறது. வழிகாட்டுநர் மற்றும் வழிப்படுநரிடையே முக்கியமான இணைந்த செயல்பாடுகளைத் திட்டமிட்டு செயல்படுத்துகிறது.

i. ***வழிப்படுநர் இடைமுகம் (செயலி/ இணையதளம்/ பிற தீர்வுகள்):*** வழிப்படுநர்கள் தங்களின் ஆர்வம், தேவைகள் முதலான அடிப்படையில் வழிகாட்டுநர்களையும் அமர்வுகளையும் கண்டறிய இந்த இடைமுகத் தொடர்பைப் பயன்படுத்தலாம். அவர்களுக்கு விருப்பமுள்ள வழிப்படுத்துதல் திட்டங்களில் சேரலாம்.

j. ***வழிகாட்டுநர் இடைமுகம் (செயலி/ இணையதளம்/ பிற தீர்வுகள்):*** வழிகாட்டுநர்கள் இந்த இடைமுகத் தொடர்பின்வழி தொடர்புகளை/அமர்வுகளை வழிப்படுநருடன் திட்டமிடுகின்றனர். இதன் வழி காலப்போக்கில் பல்வேறு நேர்முகத் தொடர்புகளின் ஆழ்ந்த அறிவையும் பகுப்பாய்வுகளையும் பெற முடியும்.

k. ***வழிப்படுத்துதல் வகைப்பாடு:*** தேசிய வழிப்படுத்துதல் வகைப்பாடு தேசிய உள்கட்டமைப்பின் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்டு பிணைக்கப்படும். இந்த வகைப்பாட்டில் வழிப்படுத்துநரின் பண்புகள், வழிப்படுத்துதலின் பகுதிகள், தொடர்பு ஊடகங்கள் போன்ற முக்கியமான கூறுகள் உள்ளடங்கியுள்ளன.

l. ***ஒருங்கிணைந்த வழிப்படுத்துதல் இடைமுக (UMI) நுழைவாயில்:*** பல்வேறு வழிப்படுத்துதல் சேவைகள்/ தீர்வுகளின் இடை இயங்குதன்மை செயல்பட UMI உதவுகிறது. இதன் மூலம் வேறுபட்ட பணிகளிடையே வழிகாட்டுநர்/ செயல்முறைத் திட்டங்களுக்கு வழி ஏற்படுகிறது. UMI ஆனது வெளிப்படையான நெறிகள் மீது அமைக்கப்பட்ட திறந்தநிலை வலை அமைப்பை உருவாக்குதன் மூலம் கற்றல்/ வழிப்படுத்தலை நெறிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது

m. ***செயலி பதிவேடு:*** அனைத்து அலைபேசி செயலிகள், வலைத் தளங்கள் இடைமுகத் தொடர்புகளைப் பயன்படுத்தும் பிற தீர்வுகள் இப்பதிவேட்டில் அடங்கும்.

n. ***சேவைப் பதிவு:*** இது உள் நுழைதலுக்கான ஒன்றிணைந்த வழிப்படுத்துதல் முறைகளின் (செயலிகள்) பதிவேட்டை உள்ளடக்கியது.

o. ***வெளிப்புறப் பதிவேடு:*** சூழல் அமைப்பில் சரிபார்க்கப்பட்ட வழிகாட்டுநர்களின் பரவலாக்கப்பட்ட நம்பகமான வெவ்வேறு பதிவேடுகள் (கல்வி அமைப்புகள், மாநிலத் துறைகள் மற்றும் CSOக்கள்) இதில் அடங்கும்.

p. ***வழிப்படுத்துதல் சேவைகள்:*** உள்கட்டமைப்பில் நுண்சேவையானது வழிகாட்டுநர்கள் அமர்வுகளைத் திட்டமிட உதவுகிறது. வழிகாட்டுநர் மற்றும் வழிப்படுநரிடையே முக்கியமான இணைந்த செயல்பாடுகளைத் திட்டமிட்டு செயல்படுத்துகிறது.

## 6.5 ஒருமித்த வழிப்படுத்துதல் இடைமுகப்பு

UMI என்பது Beckn DSEP கூறுகளின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட இடைமுக இணைப்புத் தொடர்பாகும். இந்த இணைப்பு பல்வேறு வழங்குநர்களும் நுகர்வோரும் தடையின்றி தொடர்பு கொள்ள அனுமதிக்கிறது.

### 6.5.1 வெளிப்படுத்தும் தன்மை

அனைத்து வழிகாட்டுநர்களும் (அனுபவம் வாய்ந்த வளமையர்கள்/ ஓய்வுபெற்ற பேராசிரியர்கள்/ ஆசிரியர்கள் இன்னபிறர்) அவர்களின் சாதனங்களில் எந்த வழிப்படுத்துதல் செயலியை நிறுவியிருந்தாலும், ஒரே இடைமுகத் தொடர்பில் பார்க்கவும் அணுகவும் முடியும். வழிகாட்டுநர்களின் பெருந் தொகுப்பு வளங்களோடு இணைய பல செயலிகளை நிறுவுவதற்குப் பதிலாக, ஒரே தளத்தில் அணுக பயனர்களை இது அனுமதிக்கிறது.

### 6.5.2 நம்பிக்கை

தளத்தில் பங்கேற்போர் அனைவருக்கும் நம்பிக்கையை ஏற்படுத்தும்போது மட்டுமே பயனுள்ள வழிப்படுத்தல் கலந்துரையாடல்கள் நடைபெறும். பல்வேறு கல்வி நிறுவனங்கள், மாநிலத் துறைகள் ஆகியவற்றின் நம்பகமான வழிகாட்டுநர்களின் பதிவேட்டு ஆவணங்கள் மூலம் நம்பிக்கை ஏற்படுத்தப்படும். தளத்தில் உள்ள அனைத்து நம்பகமான வழிகாட்டுநர்களின் சுயவிவரங்களுக்கும் சரிபார்க்கத்தக்க நற்சான்றிதழ் அளிக்க வகை செய்யப்படும்.

## 6.6 ஒருங்கிணைக்கப்பட்ட வழிப்படுத்துதல் இடைமுகம்

*NMI இன் தொடர்ச்சியான மேம்பாடு, பயன்பாடு, முன்னேற்றம் ஆகியவற்றைப் பற்றி ஒரு சூழல் அணுகு முறை கருத்தில் கொள்ளப்படும். புதுமை, பன்முகத்தன்மை சூழ்நிலைப் பொருத்தமாக்கல் ஆகியவற்றைக் கொண்டுவருவதற்கு சூழல் அமைப்பை உற்சாகப்படுத்துவது அவசியம். UMN ஆனது செயல்படும் பல்வேறு சூழலமைப்புகளைச் சார்ந்த பங்கேற்போர் NMIஐ பயன்படுத்தவும், அதற்குப் பங்களிக்கவும் ஊக்குவிக்கும் ஒரு முயற்சியாகும். இத்தகைய உள்கட்டமைப்பு, பங்குள்ளோர்களின் சூழல் அமைப்பைப் பயன்படுத்தவும், தீர்வுகளை வழங்கவும், வழிப்படுத்துதலுக்கான அவர்களின் தீர்வுகள்/ சேவைகளை நீட்டிக்கவும் அனுமதிக் கிறது. அனைத்தையும் உள்ளடக்கிய, ஒரே மாதிரியான, ஏகமானத் தீர்வாக தளம் கட்டமைக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்கான ஆழ்நத மனநிலை மாற்றத்திலிருந்து இது வருகிறது. இயங்குதளம் கட்டப் படவில்லை என்பதை இது உறுதி செய்கிறது.*

*இந்தக் கூட்டமைப்பை உருவாக்கி நிலைநிறுத்துவதற்குத் தொடர்புடைய அனைத்து பங்குள்ளோர்களு டனும் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்படும். கட்டுமானத் தொகுதிகள் மற்றும் திறந்த நெறிமுறை களை உள்ளடக்கிய உள்கட்டமைப்பின் தொழில்நுட்ப வடிவமைப்பானது பிணைப்பு தொடர்ந்து வளர்ந்து வருவதை உறுதி செய்யும்.*

## 6.7 தள ஆளுகை

*NMI பயன்படுத்தும் வழிப்படுத்துதல் செயல்முறைத் திட்டமானது, விரும்பும் விளைபயன்களை அடைவ தற்கு, தாக்கமிகு ஆளுகை தேவைப்படும். சிறந்த ஆளுகைக்கு கீழ்க்காணும் அளவுகோல்கள் வினாக்களும் கவனத்தில் கொள்ள வேண்டும்.*

**அட்டவணை 6.1: அளவுகோல்களும் வினாக்களும்**

| அளவுகோல்கள் | வினாக்கள் |
|---|---|
| **பொருத்தப்பாடு** | • *தொழில்நுட்ப உள்கட்டமைப்பு பயனர்களின் உள்ளூர், சமூக-பொருளாதார நிலைமைகளுக்கு ஏற்றது இணக்கமானது என்பதை எவ்வாறு உறுதிப்படுத்துகிறீர்கள்?*<br>• *தளத்தின் செயல்பாடுகள் ஆக்கப்பூர்வமான முறையில் கட்டமைத்து செயலாக்கப்படுவதை நீங்கள் எவ்வாறு உறுதிப்படுத்துகிறீர்கள்*<br>• *உள்கட்டமைப்பைப் பயன்படுத்தி திட்டத்தின் உரிமையாளர்களால் பொருத்தமான பின்னூட்ட வழிமுறைகள் நிறுவப்படுவதை எவ்வாறு உறுதிப்படுத்துகிறீர்கள்?* |
| **நிலைத்தன்மை** | • *தளம், தரவு போன்றவற்றின் உரிமையாளர் யார்?*<br>• *தளம் திறம்படப் பயன்படுத்தப் படுவதையும், பொருத்தமான பின்னூட்டங்கள் பரிசீலிக்கப்படுவதையும் எப்படி உறுதிப்படுத்துவீர்கள்? பயிற்சி திட்டங்களும் பின்னூட்ட வழிமுறைகளும் இதில் அடங்கும்.* |
| **படிநிலை வளர்ச்சி** | • *பல்வகை பங்கேற்பாளர்களை எவ்வாறு வளங்களைப் பங்களிக்கச் செய்கிறீர்கள்? (எ.கா. தரவு, மென்பொருள், உள்ளடக்கம் போன்றவை)?*<br>• *சேவைகளைக் கண்டறிந்து பயன்படுத்துவதை எவ்வாறு செயல்படுத்துவீர்கள்?*<br>• *செயல்தள நீட்டிப்பினை எவ்வாறு இயலச் செய்கிறீர்கள்?* |

NATIONAL MISSION FOR MENTORING

# இயல் VII

# பயணமும் முன்னோக்கிய பாதையும்



# இயல்-VII: பயணமும் முன்னோக்கிய பாதையும்

## 7.1 NMM இன் பயணம்


இந்திய அரசு, கல்வி அமைச்சகத்தின் (MoE) ஆணையின் அடிப்படையில் 2021-22 ஆம் ஆண்டிற்கான மத்திய நிதிநிலை அறிக்கையில் NMM அறிவிக்கப்பட்டது. மேலும், இந்தப் பணியினை மேற்கொள்ளும் பொறுப்பை NCTE க்கு MoE வழங்கியது. NMM இன் செயல்வழிமுறைகளை உருவாக்குவதற்கான தொடர் ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன. பல்வேறு பங்குள்ளோர்களிடமிருந்து ஆலோசனைகள் / கருத்துகளைப் பெறுவதற்காக நவம்பர் 2021 இல் NCTE இணையதளத்திலும் MyGov போர்ட்டலிலும் வழிப்படுத்துதலுக்கான செயல்முறைகள் குறித்த ஆரம்ப வரைவு வெளியிடப்பட்டது. அதன்பிறகு, நாடு முழுவதும் கல்வியாளர்கள், கல்வி நிருவாகிகள், பள்ளிகள், பல்கலைக்கழகங்கள், ஆசிரியர் பயிற்றுநர்கள், SCERTS, DIETS, முதல்வர்கள், ஆசிரியர்கள், அரசு சாரா நிறுவனங்கள், பிற பங்குள்ளோர்கள் முதலானோருடன் 15 திறந்தவெளி விவாதங்கள் நடத்தப்பட்டன. அவர்களிடமிருந்து வழிப்படுத்துதல் செயல்முறை கையேட்டினை வடிவமைக்க கீழ்மேல் அணுகுமுறையில் அனைத்துவிதமான கருத்துகளும் உள்ளீடுகளும் பெறப்பட்டன. (குறிப்பு. பின்னிணைப்பு-IV).

NCTE ஆனது 29 ஜூலை 2022 அன்று, நாடு முழுவதும் மத்திய அரசுக்கு சொந்தமான 30 பள்ளிகளில் (15 KVs, 10 JNVs மற்றும் 5 CBSE) NMMஐ சோதனை முன்னோட்ட முறையில் அறிமுகப்படுத்தியது. 30 பள்ளி தலைமை ஆசிரியர்களுடனும் நோடல் (பணிப்பிரிப்பு) அலுவலர்களுடன் NMM பற்றிய 2 நாள் புத்தொளி நிகழ்ச்சி நடத்தப்பட்டது. NCTE பல்வேறு களங்களில் இருந்து 60 வழிகாட்டுநர்களை உள்சேர்த்து இடமளித்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட 60 வழிகாட்டுநர்களுக்கு இரண்டு நாள் திறன் வளர்ப்புப் பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டது. வெளிப்படுத்துதல், நம்பிக்கை, ஆக்கப்பூர்வமான பின்னூட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் பயனுள்ள வழிப்படுத்துதல் அமர்வுகளை நடத்துவதற்கான இடைமுகத் தொடர்புச் செயல்பாட்டிற்கு NMM வலைத்தளம் (குறிப்பு. பின்னிணைப்பு-V) தொடங்கப்பட்டது. வழிப்படுத்துதல் இணைந்த செயல்களை எளிதாக்கி, அவற்றைத் திறம்படவும் பயனளிப்பவையாகவும் செயல்படுத்தும் வகையில் வழிகாட்டுநர்களுக்கு உதவ பல்வேறு தனித்தனி சிறு பகுதிகள் அல்லது பிரிவுகள் உருவாக்கப்பட்டன.

மேற்கூறிய உள்ளக ஆலோசனைகள், 15 திறந்தவெளி விவாதங்கள், முன்னோட்டச் செயல்பாட்டிலிருந்து பெறப்பட்ட உள்ளீடுகள், பிற பங்குள்ளோர்களுடனான கலந்துரையாடல்கள், வெளிப்புறத் திட்டங்கள் ஆகியவற்றின் வழியாக பெறப்பட்ட கருத்துகள் / பரிந்துரைகளை இணைத்து NMM பற்றிய வழிமுறைக் கையேடு இறுதி செய்யப்பட்டிருக்கிறது. NMMஐ கண்காணிக்க, செயற்படுத்த பகுப்பாய்வு செய்ய வசதியாக NCTEயால் இணைய தளத்தில் செயல்படக் கூடிய ஆசிரியர் தரத்திற்கான தேசிய மையம் (NCTQ) அமைக்கப்பட்டுள்ளது. NCTQவிலிருந்து UMI இயக்கப்படும்.

## 7.2 முன்னோக்கு வழி

NMM என்பது ஆசிரியர்களின் தொழில்முறை வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான ஒரு விலைமதிக்க முடியாத முன்முயற்சியாகும். வழிகாட்டுநர்கள் தங்களின் பங்களிப்பாக, வழிப்படுத்துதல், ஆதரவு, நிபுணத்துவம் ஆகியவற்றை வழிப்படுநர்களுக்கு வழங்குவதாகும். இது அறிவுப் பகிர்வு, ஒத்துழைப்பு ஆழ்ந்த சிந்தனை முதலானவற்றுக்கான தளமாகும். NMMக்கான செயல்படுத்துதல் திட்டம் கீழ்க்காணுமாறு கருத்துருவாக்கப்பட்டுள்ளது:




படம் 7.1: முன்னோக்கு வழி

## பார்வை நூல்கள்

Hansman, C. A. (Ed.). (2002). Critical perspectives on mentoring: Trends and issues. ERIC Clearinghouse on Adult, Career, and Vocational Education, Center on Education and Training for Employment, College of Education, the Ohio State University.

Knowles, M. S. (1980). The modern practice of adult education: From pedagogy to andragogy. Englewood Cliffs, NJ: Cambridge Adult Education.

Kukreja, S., Arora, R., Mahajan, R., & Singh, T. (2020). Mentorship Program: Modern Outlook of Traditional Knowledge. International Journal of Applied and Basic Medical Research, 10(2), 65–67. https://doi.org/10.4103/ijabmr.IJABMR_109_20

Ministry of Human Resource Development. (2020, July 29). National Education Policy 2020. www.Education.Gov.In; Government of India.

https://www.education.gov.in/sites/upload_files/mhrd/files/NEP_Final_English_0.pdf#page=29&zoom=100,97,630

National Institute of Technical Teachers Training and Research. (2020, September). Making Mentoring Relevant: NEP 2020 PERSPECTIVE. NITTTR (nitttrc.ac.in); National Institue of Technical Teachers Tranining and Research. Retrived from ReportonMakingMentoring.pdf (nitttrchd.ac.in)

National University of Educational Planning and Administration (NUEPA) New Delhi, Teachers in the Education System, How We Manage the Teacher Workforce in India. (2016).http://www.niepa.ac.in/download/Research/Teachers_in_the_Indian_Education_System.pdf

National University Of Educational Planning And Administration (NUEPA) (2014) School Leadership Development National Program Design and Curriculum Framework. National University of Educational Planning and Administration (NUEPA). https://www.education.gov.in/en/sites/upload_files/mhrd/files/upload_document/SLDP_Framework_NCSL_NUEPA.pdf

Parsloe, E., & Leedham, M. (2009). Coaching and mentoring: Practical conversations to improve learning. Kogan Page Publishers. Retrieved from https://rb.gy/9e732

Soka Gakkai. (2020). The Oneness of Mentor and Disciple. Soka Gakkai (Global). https://www.sokaglobal.org/resources/study-materials/buddhist-concepts/the-oneness-of-mentor-and-disciple.html#:~:text=In%20Buddhism%2C%20which%20is%20concerned,to%20free%20them%20from%20suffering

Together Platform. "Mentor Handbook." Together Platform, https://www.togetherplatform.com/handbook/mentor. Accessed 16 Aug. 2021.

# பின்னிணைப்புகள்

***I.*** **வழிகாட்டுநர் தெரிவுக்கு கட்டமைப்பு வடிவமைப்பு**

*வழிகாட்டுநர் தெரிவு செயல்முறைக்கான பரிந்துரைக்கப்பட்ட வடிவமைப்பு.*

***II.*** **வழிகாட்டுநரின் பங்களிப்புச் செயல்பாடுகளும் பொறுப்புகளும்**

*வழிப்படுத்துதல் திட்டத்தில் ஒரு வழிகாட்டுநரின் பங்கும் பொறுப்புகளும் பற்றிய பட்டியலைத் தயாரிக்கும் போது ஆலோசனை செய்வதற்கான மாதிரி கருவி*

***III.*** ***NMM*க்கான *15* திறந்தவெளி கலந்துரையாடல்கள்**

***IV.*** ***NMM* வலைத்தளம்**

***பின்னிணைப்பு - I***

## ***வழிகாட்டுநர் தெரிவுக்கான கட்டமைப்பு மாதிரி வடிவமைப்பு***

### வழிகாட்டுநர் தெரிவு

***(வழிப்படுத்துதல் திட்டத்திற்காக)***

**நோக்கம்:** *வழிப்படுத்துதல் திட்டத்திற்கான வழிகாட்டுநரைத் தெரிவுசெய்வதற்கான ஆராய்தல் செயல்முறையை வடிவமைத்து செயல்படுத்துதல்.*

**வடிவமைக்கப்பட்டது**

**திட்ட வடிவமைப்பாளர்** | **திட்ட மேலாளர்**

*ஒரு சிறந்த வழிகாட்டுநர் சில பண்புக் கூறுகளைப் பெற்றிருக்க வேண்டும். இதனால், வழிகாட்டுநர், வழிப்படுநர் ஆகிய இருவருக்குமான தொடர்புகளில் இருந்து அதிக பலன்களைப் பெற முடியும்.*

**வழிகாட்டுநருக்கான பண்புகள்**



***பன்முகத்தன்மை பற்றிய விழிப்புணர்வு***



***பயனுறு தொடர்புத் திறன்***



***பிறர் உளமறிதல்***



***அனுபவம்***



***நெகிழ்வுத்தன்மை***



***ஊக்கமளித்தல்***



***தலைமைத்துவ திறன்கள்***



***தனித்தறை சிறப்பறிவுத் திறம் (வல்லுநர் திறம்)***



***ஆழ்ந்த சிந்தனை***



***திறனாய்வுச் சிந்தனை***



***படைப்பாற்றல்***

*வருங்கால வாய்ப்பினை எதிர்பார்க்கின்ற வழிகாட்டுநர்களின் பண்புக்கூறுகளை ஆராய்தல் செயல் முறை வழி சோதித்தல் வேண்டும். ஆராய்தல் செயல்முறையானது திட்டத்தை எந்த அளவில் செயல்படுத்த வேண்டும் என்பதை மனத்தில் வைத்து வடிவமைக்கப்பட வேண்டும். கிடைக்கக் கூடிய வளங்களையும் விண்ணப்பித்தோர் குழுவின் எண்ணிக்கையையும் பொருத்து, தெரிவுச் செயல்முறையானது தொழில்நுட்ப உதவி, தரவு சேகரிப்பு முறைகள், தனிப்பட்ட செயல்பாடுகள், நேர்காணல்கள் ஆகியவற்றின் கலவையாக இருத்தல் வேண்டும்.*

## வழிகாட்டுநர் தெரிவு
*(வழிப்படுத்துதல் திட்டத்திற்காக)*

**விண்ணப்பப் படிவம்**



வசிப்பிட தகவல், முந்தைய அனுபவங்கள், தனித்துறை சிறப்பறிவுத்திறம் (வல்லுநர் தன்மை) தொடர்பான சான்றுகள் போன்றவற்றைப் பற்றிய தகவல்களைச் சேகரிக்க முதற் கட்ட விண்ணப்பப் படிவம் பயன்படுத்தப்பட வேண்டும்.
இணையவழிக் கற்றல் அமைப்பில் உள்ள சவால்களைத் தீர்ப்பதற்கான வழிகாட்டுநரின் அணுகுமுறை/திறனை மதிப்பிடுவதற்கான தனி நிகழ்வாய்வையும் விண்ணப்பப் படிவத்தில் சேர்க்கலாம். விண்ணப்பதாரர்களை (பேரளவிலான திட்டங்கள்; குறைந்த அளவில் கிடைக்கும் வளங்கள்) மதிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படும் ஒரே கருவியாக இந்தப் படிவம் இருக்கலாம் அல்லது நேர்காணலுடன் (சிறிய அளவிலான திட்டங்கள்; அதிக அளவில் கிடைக்கும் வளங்கள்) இணைத்தும் பயன்படுத்தப்படலாம்.

**கலந்துரையாடல் / நேர்காணல்**



விண்ணப்பதாரரை மிகவும் அகநிலையாகப் புரிந்துகொள்ளவும், விண்ணப்பப் படிவத்தின் அடிப்படையில் சோதனை செய்வதற்கு கடினமாக இருக்கும் சில திறன்களைப் பகுப்பாய்வு செய்யவும் ஒரு நேர்காணல் உதவும். இது விண்ணப்பதாரர்களின் இணைந்த செயல்பாட்டுப் பண்புகளை சோதிக்கும் வினாக்களைக் கொண்டிருக்கலாம், அதாவது கவனித்தல், தானே முன்கூட்டி செயல்படுதல், பகுப்பாய்வு, பகுத்தறிதல் போன்றவை.

இணையவழிப் படிவங்கள், இணைந்து செயல்படும் தரவுத்தள மேலாண்மை அமைப்புகள், காணொளிக் கூட்டத்திற்கான கருவிகள் போன்றவற்றினை இணையவழி கலந்துரையாடல் செய்யவும், மதிப்பீடு செய்யவும், விண்ணப்பங்களைப் பகுப்பாய்வு செய்யவும் பயன்படுத்தப்படலாம்.

## வழிகாட்டுநர் தெரிவு

*(வழிப்படுத்துதல் திட்டத்திற்காக)*

| வசிப்பிடத் தகவல் | அனுபவம் |
|---|---|
| • பெயர்<br>• தொடர்புத் தகவல்<br>• (தொடர்பு எண்/ முகவரி/ மின்னஞ்சல்)<br>• மொழித்திறன்<br>• இணைப்பு பெற்ற நிறுவனம் (பெயர், நகரம், மாநிலம், நாடு) | • தற்போதைய பணி/ பதவி<br>• துறை சார்ந்த பணி அனுபவம்<br>• தற்போதைய பணியில் பணியாற்றிய அனுபவம் |
| **அறிவும் தனித்துறை சிறப்புத் திறமும்** | **முன்கூட்டிய செயல்பாடு** |
| • தேர்ச்சியைப் (தனித்துறை சிறப்பறிவுத் திறம்) பரிசோதிக்க வழிப்படுத்துதல் திட்டத்தின் நிர்ணயிக்கப்பட்ட உள்ளடக்கத்தின் அடிப்படையில் வினாத்தாள் அமைத்தல்.<br>• வழிப்படுத்துதல் திட்டத்தின் பொருண்மையுடன் ஈடுபடுத்திக் கொள்வதற்கான கற்றல் அல்லது கற்பித்தல் தொடர்பான கடந்த கால அனுபவச் சான்று.<br>• துறையுடன் தொடர்புடைய விருதுகள், மதிப்புகள், சாதனைகள் | • வழிகாட்டுநராக, அவர்கள் ஏன் இருக்க விரும்புகிறார்கள் என்பதைப் பற்றிய கட்டுரை நேர்காணல் கேள்விகள்.<br>• இந்தத் செயல்முறைத் திட்டத்திற்கு அவர்கள் விண்ணப்பித்ததன் நோக்கம் என்ன?<br>• திட்டத்திற்கான அவர்களின் பங்களிப்பு என்ன?<br>• திட்டத்தில் இருந்து அவர்கள் எவ்வாறு பயனடைவார்கள்?<br>• இந்தத் திட்டத்தால் கல்வி முறை பயனடையும் என்று அவர்கள் எவ்வாறு நினைக்கிறார்கள்? |
| **கவனமும் சிந்தனையும்** | **அகத்தூண்டுதலும், இயைபியக்க ஊக்குவிப்பும்** |
| வழிப்படுத்துதல் திட்டத்தின் மூலம் தீர்க்கப்பட வேண்டிய தொடர்புடைய சிக்கல்களைத் தனி நிகழ்வாய்வுகள் கோடிட்டுக் காட்டும்.<br>விண்ணப்பப் படிவமாகவோ, நேரடியாகவோ கேட்கப்படும் வினாக்கள் பன்முகத் தெரிவுவினா வகையிலோ அகவய அடிப்படையிலோ இருக்கும். அவர்களின் திறன்களைச் சோதிக்கும்முறை வருமாறு.<br>• சவால்களை அடையாளம் காணல்,<br>• பொருத்தமான ஆதரவை வடிவமைத்தல்,<br>• ஆலோசனைகளும் பின்னூட்டம் வழங்கலும்,<br>• பிரச்சனைகளைத் தீர்த்தல்,<br>• வெவ்வேறு தலைமைத்துவ பாங்குகளைப் புரிந்துகொள்ளுதல்,<br>• கருத்து வேறுபாட்டையும் செயலற்ற தன்மையையும் கையாளல்<br>• விடை தெரியாது இருத்தலைக் கையாளல். | தொடர்ச்சியான கற்றலுக்கும் மேம்பாட்டிற்கும் எவ்வாறு அவர்கள் தங்கள் குழுவை ஊக்கப்படுத்துகிறார்கள் என்பதைப் பற்றிய காணொலி/நேர்காணல் வழிக் கேட்கும் வினாக்கள். விண்ணப்பதாரரின் பதில்கள் அவர்களின் திறன்களை அறிய சோதிக்கப் பயன்பட வேண்டும்<br>• தெளிவான பேச்சு<br>• உடல்மொழியின் சரியான பயன்பாடு<br>• கேட்கப்படும் வினாக்களுக்குப் போதுமான விளக்கம்<br>• ஆய்ந்து பார்க்கும் சிந்தனையை வெளிப்படுத்துதல்<br>• ஆற்றல்மிக்க பேச்சு<br>• ஊக்கமளிக்கும் விதத்தில் கதைசொல்லல் |

பின்னிணைப்பு II

வழிகாட்டுநரின் பொறுப்புகளும் கடமைக் கூறுகளும்

## வழிகாட்டுநரின் பணிப்பொறுப்புகளும் கடமைக் கூறுகளும்

*(வழிப்படுத்துதல் திட்டத்திற்காக)*

**நோக்கம்:**

ஒரு வெற்றிகரமான வழிப்படுத்துதல் உறவுமுறைகளுக்கு வழிகாட்டுநரின் பொறுப்பையும் கடமைக் கூறுகளையும் அடையாளம் காணல்.


**பணிப்பொறுப்பு (பங்கு, பாகம்)**

வழிப்படுநர்களுடன் கலந்துரையாடிய பின்னர் குறிப்பிட்ட இலக்குகளின் நோக்கங்களின் அடிப் படையில் வழிகாட்டுநர்கள் வழிப்படுநர்களுக்கு வழிகாட்டல், ஆலோசனை, பின்னூட்டம், ஆதரவு, கருத்து முதலானவை வழங்குகிறார்கள்.


**கடமைக் கூறுகள்**



ஆயத்தம்




ஆதரவு




வளர்ச்சி


- வழிப்படுநர்(களை)களுடன் அடிக்கடியோ, வழிப்படுத்துதலுக்குக் கொடுக்கப்பட்ட காலம் முடிவு அடையும் வரையிலோ உறவைப் பேணிட தொடர் சந்திப்புகளை நிகழ்த்துதல்.
- நம்பகத்தன்மையைப் பேணுகின்ற, வழிப்படுநர்கள், வழிகாட்டுநர் ஆகிய இருவரின் உறவு எல்லைகளைப் பாதிக்கின்ற பாதுகாப்பான ஆதரவான வாய்ப்பை உருவாக்குவதன் மூலம் நம்பத்தகுந்த உறவை அமைத்தல்.
- வழிப்படுநரால் இயக்கப்படும் உறவுக்கான இடத்தை உருவாக்குவதன் வழி வளர்ச்சி, விரி வாக்கம், தொழில் திட்டமிடல் ஆகியவற்றுக்கு வழிப்படுநர் பொறுப்பேற்கிறார்.
- வழிப்படுத்துதல் செயல்பாடுகளில் வழிப்படுநர்(கள்) மேற்பார்வையாளர்(கள்) ஆகியோருடன் தெளிவான தொடர்பைப் பேணுதல்



ஆயத்தம்



ஆதரவு




வளர்ச்சி

- வழிப்படுநரின் தெளிவான இலக்குகளையும் குறிக்கோளையும் நிறுவுதல் எதிர்காலப் பார்வை அடிப்படையில் ஒரு செயல் திட்டத்தை நோக்கி அவர்களை வழிநடத்துதல்
- வழிப்படுநர்(கள்) அவர்களின் சொந்தப் பயணத்தைப் பற்றி சிந்திக்கவும், தனித்துறை சிறப்பறிவுத் திறம் (வல்லுநர் திறன்களைப்) பகிர்ந்து கொள்ளவும் பொருத்தமான எடுத்துக்காட்டுகளைக் கூறுதல்


## வழிகாட்டுநரின் பணிப்பொறுப்புகளும் கடமைக் கூறுகளும்

*(வழிப்படுத்துதல் திட்டத்திற்காக)*


- *சிக்கல்கள் ஏற்படும்போது வழிப்படுநர் குழுக்களுக்ளிடையே ஆக்கப்பூர்வமான உரையாடல்களை ஊக்குவிப்பதன் மூலம் வழிப்படுத்துதல் அமர்வுகளை எளிதாக செயல்படுத்தல்*
- *வெவ்வேறு வழிப்படுநர்களின் அணுகுமுறை நோக்குகளில் உள்ள பன்முகத்தன்மையைப் புரிந்து கொள்ளுதலும் பாராட்டுதலும்*
- *இணக்கமான வழிகளில் முரண்பாடுகளை அனுசரித்துக் கொண்டு பணியாற்றுதல், வழிப்படுநருடன் ஏற்படும் கருத்து வேறுபாடுகளைக் களைய கலந்துரையாடலுக்கு அழைத்தல்*
- *சிக்கல்களைப் பற்றிய அவர்களின் புரிதலைத் தெளிவுபடுத்த, ஆழ்ந்த ஆக்கப்பூர்வமான வினாக்களைக் கேட்பது (வெளிப்படையான வினாக்கள் "எப்படி" "என்ன" ஆகியன)*
- *வழிப்படுநர் கூறுவதை ஆர்வத்தோடு கேட்டலும் அவர்கள் கூறுவதை கேட்டதாக உணரச் செய்தலும்*
- *வழிப்படுநர்களுக்கு ஏற்புடைய சவால்களை வழங்குவதன் மூலம் முன்னேற்றத்தை நோக்கி வழிப்படு நர்களை ஈடுபடச் செய்தல், தற்போதைய சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் எதிர்காலத்திற்கான சமாளிக்கும் உத்திகளை உருவாக்குவதற்கும் அவர்களுக்கு அதிகாரம் அளித்தல்*
- *வழிப்படுநர்களின் தேவைகளுக்கு ஏற்ப அவர்களுக்கான ஆதரவை வெவ்வேறு வகைகளில் அளித்தல்*
- *நேர்மையான, நேர்ப்பட்ட, வெளிப்படையான ஆக்கப்பூர்வமான பின்னூட்டங்களை வழங்குதல்*
- *தொழில்முறை மேம்பாட்டு நடவடிக்கைகளைக் கண்டறிவதில் வழிப்படுநர்(களுக்கு) உதவுதல், பிற வழிகாட்டுநர்களைத் தேவையான வளங்களுடன் வலையமைப்புப் பிணைப்புகளை ஏற்படுத்தி இணைத்தல்*
- *அவர்கள் இணைந்து உருவாக்கிய செயல் திட்டத்திற்கு வழிப்படுநர்(களை) பொறுப்பாளர்களாக வைத்தலும் செயல்திட்டத்தைச் சீரான இடைவெளியில் மீளாய்வு செய்தலும்*



**ஆயத்தம்**



**ஆதரவு**



**வளர்ச்சி**

- *அவர்களின் வேலைக்கும் வழிப்படுத்துதல் பொறுப்புகளுக்கும் இடையேயான நேரத்தைத் திறம்பட நிருவகித்தல்*
- *பயிற்சிகள், பின்னூட்டச் சுழற்சிகள் போன்ற வழிப்படுத்துதல் திறன்கள் மூலம் தொழில்முறை வளர்ச் சியைக் கட்டமைத்து மேம்படுத்துவதற்கு ஈடுபடுதல்.*

**பின்னிணைப்பு – III**
***NMM*க்கான 15 திறந்தவெளிக் கலந்தாய்வுகள்**

## *NMM*இன் 15 திறந்தவெளிக் கலந்தாய்வுப் பட்டியல்

| வ.எண் | நிறுவனத்தின் / பல்கலைக்கழகத்தின் பெயர் | கலந்துரையாடல் முறை | நாள் | மாநிலம்/ யூனியன் பிரதேசங்கள் |
|---|---|---|---|---|
| 1. | காட்டன் பல்கலைக்கழகம், குவஹாத்தி, அஸ்ஸாம் | நேரடி | 16.11.2021 | அஸ்ஸாம், மேற்குவங்கம், அருணாச்சல பிரதேசம் |
| 2. | SCERT கேங்டோக், சிக்கிம் | கலப்பு | 10.12.2021 | சிக்கிம், மிஸோராம் |
| 3. | SCERT ஜம்மு மற்றும் காஷ்மிர் | கலப்பு | 13.12.2021 | ஜம்மு, காஷ்மிர் மற்றும் லடாக் |
| 4. | SCERT பாட்னா, பீஹார் | கலப்பு | 15.12.2021 | பீஹார், ஜார்க்கன்ட் |
| 5. | தில்லி பல்கலைக்கழகம் | நேரடி | 16.12.2021 | டெல்லி, ஹரியானா |
| 6. | பனாஸ்தலி வித்யாபீடம், இராஜஸ்தான் | கலப்பு | 17.12.2021 | இராஜஸ்தான் |
| 7. | உஸ்மானியா பல்கலைக்கழகம், ஹைதராபாத் | கலப்பு | 18.12.2021 | தெலுங்கானா, ஆந்திர பிரதேஷ் |
| 8. | SCERT புனே, மகாராஷ்டிரா | கலப்பு | 28.12.2021 | மகாராஷ்டிரா, கோவா |
| 9. | இந்திய ஆசிரியர் கல்வி நிறுவனம், காந்திநகர், குஜராத் | நேரடி | 30.12.2021 | குஜராத் |
| 10. | பனாரஸ் இந்து பல்கலைக்கழகம், வாரணாசி, உத்திரப் பிரதேஷ் | கலப்பு | 12.01.2022 | உத்தர பிரதேசம் |
| 11. | SCERT போபால், மத்திய பிரதேஷ் | கலப்பு | 17.01.2022 | மத்திய பிரதேசம் |
| 12. | SCERT ஹிமாச்சல் பிரதேஷ் | கலப்பு | 20.01.2022 | ஹிமாச்சல பிரதேசம் |
| 13. | SCERT பஞ்சாப் | கலப்பு | 24.01.2022 | பஞ்சாப் |
| 14. | மத்திய பல்கலைக்கழகம், ஹரியானா | கலப்பு | 04.03.2022 | ஹரியாணா, சண்டிகார் |
| 15. | பள்ளிக் கல்வி இயக்ககம், புதுச்சேரி | நேரடி | 07.03.2022 | புதுச்சேரி |

*NMM வலைத் தளம்*
*(வழிகாட்டுநர்களுக்கானது)*

*1. நுழைவு*



## 2. எனது சுயவிவரம்



**Sangita Pradhan**

★★★★★

**Language(s) Known**

| Sr. No. | Language | Speak | Read | Write |
|---|---|---|---|---|
| 1. | Hindi | ☑ | ☑ | ☑ |
| 2. | Marathi | ☑ | ☑ | ☑ |
| 3. | English | ☑ | ☑ | ☑ |

| | |
|---|---|
| Registration No. | MTR000064 |
| Full Name | Sangita Pradhan |
| Email | sangita********@gmail.com |
| Contact Number | 954******* |
| Gender | Female |
| Address | Ganganagar, Rajasthan |
| **Languages** | **English** |
| **Role** | **Teacher (Primary)** |
| **Area of Mentoring** | **Instructional Leadership Skills - Social Science** |
| **Professional Experience (in years)** | **15+** |

**About Yourself**

Credited with extensive experience and professionalism having numerous key responsibilities in the field of education. Around 20 years of experience as an art educator. Always been passionate about teaching, focussed on vigorous planning & implementation at both State and National levels in various capacities. More..


| **Current Work Status** | **Name of the organisation/school** (If retired, please mention the name of the school/organisation last worked at) |
|---|---|
| Working | **Kendriya Vidyalaya, Ganganagar** |

**Click Here to Update your Profile**

*NMM வலைத் தளம்*
*(வழிப்படுநர்களுக்கானது)*

*1. வழிப்படுநர் பதிவு*





## Mentee Profile

Basic Information | Language Proficiency | Mentoring Required For

| | | | |
|---|---|---|---|
| Registration No. | 4 | | |
| First Name* | Somit | Last Name | Mishra |
| Gender* | Male | Email ID* | ncte.mentee@gmail.com |
| Mobile Number * | 888888888 | State* | ASSAM |
| District / City* | GUWAHATI | Pin Code* | 781022 |
| Organisation Type* | Central Board of Secondary Education ( CBSE ) | Name of the School/Institutions* | Kendriya Vidyalaya, Khanapar |
| Your Experience in years* | 6-8 | | |
| Language* | English x Dogri x + Add | | |
| Stage* | Primary x Select | | |
| Role* | Teacher (Primary) x Teacher (Upper Primary) x Teacher (Secondary) x + Add | | |

Update

3. வழிகாட்டுநருக்கான பின்னூட்டம்

Somit Mishra

## Feedback for Mentor: Sangeeta Pradhan (Instructional Leadership Skills-Social Science)

**On a Scale of I to V, V being the highest**

| Sr. No. | Questions | V | VI | III | II | I |
|---|---|---|---|---|---|---|
| 1. | How effective was the mentor in providing guidance and support during your interactions? | 0 | 0 | 0 | 0 | 0 |
| 2. | How much did the mentor challenge you to think critically and independently? | 0 | 0 | 0 | 0 | 0 |
| 3. | How effective was the mentor in providing guidance and support during your interactions? | 0 | 0 | 0 | 0 | 0 |
| 4. | To what extent was the mentor able to create a comfortable and safe environment for open communication and learning? | 0 | 0 | 0 | 0 | 0 |
| 5. | Refrain from encouraging mentees to ask questions during the discussion | 0 | 0 | 0 | 0 | 0 |

**Other Remarks (If any)**

It was an insightful learning experience. The mentor was supportive throughout the session.

राष्ट्रीय अध्यापक शिक्षा परिषद्
( भारत सरकार का एक सांविधिक निकाय )

National Council for Teacher Education
(A Statutory Body of the Government of India)

By e-mail / Hand / Speed Post / Fax

File No. NCTE-Acad013/3/2021-Academic Section-HQ 20th September 2021

**OFFICE ORDER**

In supersession to office order of even number dated 31st August 2021, a Committee is constituted to work out the modalities for the creation of a national document and an online platform for Mentoring in Teacher Education at National Council for Teacher Education (NCTE) under National Mission for Mentoring. The details of the committee are given below:

| S. No. | Name and Organization | Designation |
|---|---|---|
| 1. | **Prof. S.C. Roy,**<br>North Eastern Regional Institute of Education, Shillong | Chairperson |
| 2. | **Dr. Ashok Pandey,**<br>Director, Ahlcon International School, Mayur Vihar Phase 1 Delhi | Member |
| 3. | **Prof. Sharad Sinha,**<br>NCERT | Member |
| 4. | **Ms. Kalpana Kapoor**<br>Educationist, Mentor and Leadership Coach | Member |
| 5. | **Shri Sushant Tharappan**<br>Head, Infosys Leadership Institute | Member |
| 6. | **Shri Jagdish Babu,**<br>Chief Operating Officer, Ekstep Foundation. | Member |
| 7. | **Shri Sanjay Purohit,**<br>Chief Curator, Societal Platform | Member |
| 8. | **Dr. Amina Charania,**<br>Associate Professor,<br>Tata Institute of Social Sciences, Mumbai | Member |
| 9. | **Ms. Khushboo Awasthi**<br>Chief Operating Officer, ShikshaLokam. | Member |
| 10. | **Shri Sushil Bhardwaj**<br>State co-ordinator, Punjab | Member |
| 11. | **Shri Abhimanyu Yadav,**<br>Section Officer, National Council of Teacher Education, New Delhi | Convener |

Cont. 2/-

जी-7, सेक्टर-10, द्वारका, नई दिल्ली -110075
G-7, Sector-10, Dwarka, New Delhi - 110075
Phone : +91-11-20893266, Fax : +91-11-20893270 Email : ms@ncte-india.org
Website : www.ncte.gov.in

| | | |
|---|---|---|
| 12. | **Ms. Monika Mishra**<br>Academic Consultant, NCTE | Co-convener |
| 13. | **Ms. Shailla Draboo**<br>Academic Consultant, NCTE | Co-convener |

**2. The Terms of Reference (ToR):**

i. Various sub-committees may be formed from among these members by the chairperson of the committee as per need.

ii. Identification of the focus areas and structured planning for mentoring including formulation of programmatic norms for the effective implementation of the mission as per the directive of NEP 2020.

iii. Formulation of norms for cross linking of experts from school to college.

iv. Review of data and membership received through digital consultation /institutional consultation.

v. Development of the manual on National Mission on Mentoring (NMM) containing guidelines for the prospective mentors and mentees which may be adapted/ adopted by the states /UTs in their own chapters of State Mentoring Mission.

vi. Setting up of Data Strategy Center for the NMM, at the national and regional levels in the headquarters of the National Council for Teachers Education (NCTE).

vii. Preparation of the short term and long-term mentoring manual on Indian languages and subjects specifically for underrepresented population targets groups etc.

viii. Formulation of guidelines for tapping up the potential of senior experienced and retired teachers and also include experts drawn from different sections of societies including professionals from different sectors such as engineering, medical, subject expert teachers, defense personnel, craft persons, trade persons music and dance practitioners etc.

ix. Developing and designing of platform for mentoring including matching of mentor and mentees, agreement and certainty matrix.

x. Chalking out the strategies for reaching out to the target audience of NMM, monitoring and their communication process.

xi. The detailed plan of Action on pilot run of NMM and development of the framework for the national level pool of mentors and mentees.

xii. The Chairperson of the Committee may co-opt other experts to the committee as per need.

2. The committee is expected to submit the complete report along with a plan of Action within a period of 3 months from 31st August 2021.

Cont. 3/-

-3-

3. The NCTE shall provide secretarial assistance for holding of virtual and face to face meetings of the committee and arrangements for payments of TA /DA /Sitting charges as per NCTE norms.

This has the approval of the competent authority.

**(Kesang Y. Sherpa, IRS)**
**Member Secretary, NCTE**

**Copy to:**

1. PS/SO to CP/MS for information please.
2. Deputy Secretary /Under Secretary GA/Academics/Accounts, NCTE
3. Copy to all members etc.
4. Guard /Office file.

**பத்தி எண் 15.11, NEP 2020**

**பள்ளி ஆசிரியர்களுக்கு குறுகிய கால மற்றும் நீண்ட கால வழிப் படுத்துதல்/தொழில்முறை ஆதரவை வழங்க தயாராக இருக்கும் சிறந்த நிபுணர்களுடன் கூடிய ஒரு பெரிய குழுவைக் கொண்ட ஒரு தேசிய வழிகாட்டுதல் பணி அமைக்கப்படும்.**


NTM

**Language consultancy and translation facilitated by**

**National Translation Mission**

**Central Institute of Indian Languages, Mysore**

गुरूर्गुरूतमो धाम

NCTE

**தேசிய ஆசிரியர் கல்வி நிறுவனம்**

**(இந்திய அரசின் சட்டமுறை அமைப்புக்குழு)**

**National Council for Teacher Education**

**(A Statutory Body of the Government of India)**